சேவா ஸ்ரீதேசிக தர்சன

பத்திரிகை

மலர் 3 மஞ்சிகை 3

1.12.1953

198466

DIGITIZED

707

# ஸேவா

ஸ்ரீ தேசிக தர்சன பத்திரிகை



| விஜய வருஷம் கார்த்திகை மாதம் | 1—12—1953 | ஸம்புடம் 3 ஸஞ்சிகை 3 |
|---|---|---|

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
DEC 1953
MADRAS



ரங்க மன்னர்

# ஸேவா...எதற்கு ?

☆

| | |
|---|---|
| அஸூயை | அழிதற்கு |
| ஆன்மாவை | ஆராய்தற்கு |
| இறைவனை | இறைஞ்சுதற்கு |
| ஈசனை | ஈதற்கு |
| உண்மையை | உணர்தற்கு |
| ஊக்கத்தை | ஊட்டுதற்கு |
| எட்டை | எண்ணுதற்கு |
| ஏமாற்றம் | ஏகுதற்கு |
| ஐம்பொருள் | ஆய்தற்கு |
| ஒற்றுமை | ஒன்றுதற்கு |
| ஓம் பொருள் | ஓங்குதற்கு |

இன்றியமையாதது ஸேவா!





# ஸேவா

ஸ்ரீ தேசிக தர்சன பத்திரிகை

| விஜய வருஷம் கார்த்திகை மாதம் | 1—12—1953 | ஸம்புடம் 3 ஸஞ்சிகை 3 |
|---|---|---|

வரு நாள் பழுதற்று வாழும் வகையதில் மன்னுவமே

## பொருளடக்கம்

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞை | 3 | மதிப்புரை | 35 |
| குரு பரம்பரை | 4 | ரஸமான விஷயம் | 36 |
| பஞ்சாங்கம் | 5 | கேள்வி பதில் | 38 |
| பாலர் பகுதி | 6 | அண்ணன் கண்ட தேசிகன் | 39 |
| நினைத்ததுண்டா? | 7 | கோதையும் கோவிந்தனும் | 40 |
| அட்டைப்பட விளக்கம் | 7 | அடைக்கலப்பத்து | 44 |
| பிராட்டியின் பிரபாவம் | 8 | புராண பூங்கா | 47 |
| விஷ்ணு புராணம் | 9 | வினா விடை | 48 |
| நல்வார்த்தை | 16 | நித்யகர்மங்கள் | 49 |
| திருமாலை | 17 | வேண்டுவன—விலக்குவ ன | 50 |
| முக்தா கலாபம் | 24 | செய்திகள் | 51 |
| விதியின் அநீதி | 25 | ஸ்த்ரீகள் பகுதி | 52 |
| ஸ்ரீவைஷ்ணவ பரிபாஷைகள் | 31 | வித்வத் ஸேவை | 58 |
| ஆராய்ச்சி மேடை | 33 | பகவத்த்யான ஸோபானம் | 59 |

## மார்கழி நீராடி, மகிழ்ந்து வாழ்வோம்

ஸர்வே ஜனாஸ் ஸுகிநோ பவந்து என்று நமது நித்திய ப்ரார்த்தனை. ப்ரார்த்தனையோடுமாத்திரம் நாம் நிற்பதில்லை. நம்மாலியன்ற வரை நாம் இந்த லக்ஷியத்தை உருவாக்கி வருகின்றோம் இதுதான் ஆஸ்திகன் செய்யும் அதிசயமான காரியம்.

ஆயிரம் தாய் தந்தையர்கள் செய்ய முடியாததோர் பெருவாழ்வை ஆஸ்திக்யம் அமைத்துத் தரும். இதை நமது வாழ்க்கைகளிலிருந்து உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நாமறியலாகும். இல்லை என்பவனுக்கு எதுவும் இல்லை. ஆஸ்திகனாயிருந்தால் அவனுடைய வாழ்வு நல்வாழ்வாகும். வாழப் பிறந்தவர்களானால் ஆஸ்திகர்களாக வேண்டும்.

இதை நாம் நன்னூல் வாயிலாக அறியப்பெறுகிறோம். பகவத் ஸ்மரணமில்லாத வாழ்வு பழுதாகின்றது என்று முதலாழ்வார் பணிப்பர். இனி நாம் ஆஸ்திகர்களாக இருக்கப் பாடுபடுவோம்.

இனி இங்கோர் ஸந்தேஹம் இயற்கையாய் அனைவருக்கும் தோன்றுவதுண்டு. நாம் உண்டு, நமது காரியமுண்டு, ஊர் எப்படிப் போனால் என்ன ? மேலும் அதைப்பற்றி சிந்திப்பானேன் ? இத்தகைய எண்ணம் மேலுக்சழகேயொழிய வேறில்லை. இன்று உலக வாழ்க்கையை நடத்துவதை நினைத்துப்பார்க்க வேண்டும். எந்த காரியத்தை செய்கிறோம். எந்த நிலையில் செய்கிறோம். அந்தநிலை வரவேற்கத் தக்கதுதானா ? என்பதை சிறிது சிந்தித்துப்பார்த்தால் நாம் என்ன என்ன செய்ய வேண்டியிருக்கிறது என்பது நன்கு விளங்கும்.

எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் நன்றாக இருக்க வேண்டிய வழியை நாம்தான் வகுத்துக் கொடுக்க வேண்டும். இந்த நிலையில் தான் ஆசாரியார் பரோபதேசம் செய்துபோருவர்.

ஊரைக் கூட்டிக்கொண்டு உபதேசிக்கும் முறை ஒன்று. நாம் நமது காரியங்களை பகவத் ப்ரீணனமாகச் செய்வது என்பது மற்றொன்று. இரண்டாவதாகக் கூறப்படுவது மிகவும் போற்றத்தக்கது. நாடு வாழ நாம் பாவைக்களம் புகுவோம்.

ஆழிமழைக் கண்ணன் நாம் வாழ உலகினில் பெய்திட்டான். நாம் மார்கழி நீராடுவோம். நாம் நீராடினால் நம் தீங்குகள் தொலையும். நீங்காத செல்வம் நிறைந்திருக்கும். நாம் இவ்வண்ணம் செய்து வருவதே பழுதற்ற வாழ்வாகும்.

198466



## ஸ்ரீராமானுஜார்ய திவ்யாக்ஞை

ராமாநுஜன் அறுதியிட்டது ராமாநுஜதிவ்யாக்ஞை. அது நாடெங்கும் பரவவேண்டும். அது தான் உலகத்துக்கு ஹிதத்தைச் செய்யவல்லது'' என்று பெருமாளிடம் தினமும் நாம் ப்ரார்த்தனை ராமாநுஜன் பரமாத்மஸ்வரூபத்தை ஸாதிக்கின்றதை இங்கு கூறுவோம்.

### பரமாத்மஸ்வருபம்

ப்ரபஞ்சம் சித்தாயும் அசித்தாயுமுள்ளது. ஞானஸ்வரூபமானது சித்தென்றும், ஞானஸ்வரூபமல்லாதது அசித் என்றும் கூறப்படும். இந்த ப்ரபஞ்சம் உண்டாகிறது. இது நிலையாய் நிற்கிறது. அழியவும் அழிகிறது உத்பத்தி ஸ்திதி லயங்கள் என்று. இதைச் சொல்வர். இவைகளுக்கெல்லாம் காரணம் பகவான். அவனிடத்திலிருந்துஉண்டாகின்றன. அவனால் இருக்கின்றன. அவனிடம் லயத்தை அடைகின்றன. ஆதலால்அவன் ஜகத்காரணமாகிறான். ஸம்ஸாரததை நிவர்த்தி செய்பவனும் அவனே ஆதலால் அவன் மோக்ஷப்ரதனாகிறான்.

தன்னைக் காட்டிலும் வேறுபட்ட ஸமஸ்தமான சித்துக்களான வஸ்துக்களுக்கு உள்ளேயிருந்துச்கொண்டு எல்லாவற்றையும் நியமிக்கிறான் என்பதை அவன் சக்தி யென்றோ, அம்சமென்றோ . விபூதி யென்றோ, ரூபமென்றோ, சரீரமென்றோதநு எனப்படும்சப்தங்களாலும் விளக்குகின்றன. ஸமாநாதிகரணமா கப்ரயோகம் செய்தோ பாதி பாதிக்கின்றன.

அவனிடம் எத்தகைய தோஷமும் என்றும் கிடையாது கணக்கிட்வியலாத அதிசயமானகுணங்களை யுடையவன் அவன் ஒருவனே ஆதலால் தன்னைக்காட்டிலும் விலக்ஷணமாயிருப்பவன். இவ்வளவுதான் என்று வரையறுத்துச் சொல்வவியலாத அதிசயத்தையுடைய கணக்கில்லாத கலியாண குணங்களை யுடையவன் ஸர்வ சப்தத்தினாலும், ஆத்ம சப்தத்தினாலும், பரசப்தத்தினாலும், ப்ரம்ஹசப்தத்தினாலும், பாஜ்யோதிஸ் சப்தத்தினாலும், பரதத்வ சப்தத்தினாலும் பரமாத்ம சப்தத்தினாலும், ஸத் முதலிய சப்தங்களாலும் வேதாந்தங்களில் அறியப்படுபவன் பகவான் நாராயணனன் புருஷோத்தமனே என்று அறிய வேணடும், இதுவே அந்தர்யாமி ஸ்வரூபம் எனப்படும்

ஜீவாத்மாவேறு பரமாத்மா வேறு சொல்லகூடிய வேத வாக்கியங்களையும் ஒன்று. என்று சொல்லும் வாக்யங்களையும் இணைக்கும் வாக்கியங்கலையொட்டியும் ஒன்று என்று சொல்லும் வாக்கியங்கள் வைபவத்தைச் சொல்வதாய் இருக்கும்.

ஆக பகவான் நாராயணன் பரமாத்மா அவனே அந்தர்யாமி.

# திருமழிசையாழ்வார்

முதலாழ்வார்களுக்கடுத்ததாக அவதரித்தவர் இவர். இவர் த்வாபரயுகத்தில். பலவங்க வருஷத்தில் தைமாதத்தில் மகநக்ஷத்திரத்தில் மஹீஸார க்ஷேத்ரமென்ற திருமழிசையிலே அவதரித்தருளினார். இவர் பார்கவ முனிவருடைய கர்பத்தில் தோன்றியவர். ஸுதர்சனரின் அம்சமாய்த் தோன்றியவர் பக்திஸாரன் என்று இவருக்குத்திருநாமம்.

**ஆழ்வாரின் வைபவச் சுருக்கம்.** பிரமன் மஹரிஷிகளுக்கு மற்றைய திவ்ய தேசங்களைக் காட்டிலும் ஸாரமானது இதுவே என்று தராசில் இட்டுக் காட்டியபடியால் மஹீஸாரம் என்று பெயர் பெற்ற திருமழிசையிலே மஹரிஷிகள் எல்லோரும் வந்து தங்கி பெருமாளை மந்த்ர ஜபாதிகளாலே ஆராதித்து வந்தனர்.

ஒரு நாள் பார்கவ முனிவருக்கு இவர் பிறந்தார். பார்கவரும் த்ருப்தராய் அதை ஓர் பிரப்பஞ் செடியின் கீழ் இருக்கச் செய்து தான் தவமே செய்யலானார். இதைக்கண்ட மஹாலக்ஷ்மி நேரிடையாகத் தான் வந்து பாலூட்டி பால் சொட்டுச் சொட்டாய் வாயிக்கு நேராக விழும்படி செய்து சென்றுவிட்டாள்.

குழந்தையே இல்லாத ஒரு வேடன் அவ்வழி வர இதைக் கண்டு பகவானே தனக்கு கொடுத்ததாக எண்ணி மகிழ்ந்தான். வேடன் மனைவிக்கு குழந்தையைப் பார்த்ததும் பால் சுறந்தது. ஆனால்குழந்தை மறுத்துவிட்டது ஆயினும் நாளொரு மேனியாய் வளர்ந்து வந்தார்.

இந்த அதிசயத்தைக் கண்ட ஒரு சூத்திரர் தினம் பால் கறந்து வந்து இவருக்குக் கொடுத்து வந்தான். அதன் பயனாக அவர்களுக்கு ஓர் குழந்தை பிறந்தது அதற்கு **கணி கண்ணன்** என்று பெயரிட்டனர், ஆழ்வாரும் வளர்ந்து 8 வயதிலே எல்லாம் தானாகவே அறிந்து பல மதங்களில் சென்று ஒன்றிலும் மனம் நிலைக்காமல் சஞ்சலத்துடன் 400 வருஷங்கள் எழுந்தருளியிருந்தார்.

பிறகு ஒரு நாள் பெருமாள் ஸேவை ஸாதித்து தானே நித்ய வஸ்து என்பதை அறிவுறுத்தினார். இதனால் நீர் அனேக பெருமைகளைப் பெற்று பிறகு பரமபதம் வருவீர் என்று சொல்லி அந்தர்த்தானமானார் பிறகு திருமழிசைக்கு முதலாழ்வார்கள் எழுந்தருள நால்வருமாய் திருவல்லகேணிக் கெழுந்தருளினர். பிறகு ஒரு வருஷங் கழிந்து திருவெஃகாவுக்கு எழுந்தருளினார். அங்கே எழுநூறு வருஷங்கள் யோகநிஷ்டராயிருந்தார்.

கணிகண்ணன் திருமழிசைவாழ்வார் இருந்தமையால் வெஃகாவுக்கு வந்து ஆழ்வாரை ஸேவித்து நிற்க அங்கு திருவெஃகா வெம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்துகொண்டிருக்கும் ஒரு கிழவியை ஒரு பாடலைப் பாடி குமரியாக்கினார் கணி கண்ணன்.

இதை யறிந்த அரசன் கணி கண்ணரிடம் வந்து தனக்கு யௌவனத்தைத் தரவேண்டுமென்று வேண்டினான். கணி கண்ணர் மறுத்துவிடவே, அரசன் கோபித்து இப்பொழுதே இந்த நாட்டை விட்டு வெளியேறிவிடவேண்டுமென்று கட்டளையிட கணி கண்ணரும் ஆழ்வாரிடம் சென்று தண்டனிட்டு நடந்த வரலாற்றை விக்ஞாபித்து தான் வெளியேற அனுமதி கோறினார். ஆழ்வாரும்உமக்குத் தகாத தேசத்தில் நாமும் இருப்பதில்லை என்று புறப்பட்டார். பக்தர்கள் இருக்கமுடியாத இடத்தில் தாங்கள் இருக்க ஸம்மதியாமல் பிராட்டியும் பெருமாளும் புறப்பட்டனர்.

கோயில் அர்சகர்கள் சென்று பார்க்க பெருமாள் இல்லாமையைக்கண்டு அரசனிடம் முறையிட்டனர். அரசன் மந்திரிகளைக்கேட்க மந்திரிகளும் கணி கண்ணனிடத்தில் அபசாரம் நேர்ந்ததற்குப் பயனே இது என்று சொல்ல அரசனும் பரிவாரத்தோடு விரைந்து ஆழ்வாரை தண்டனிட்டு க்ஷாபணம் பண்ணிக்கொள்ள அவரும் கணி கண்ணனைக்காண்பிக்க அரசனும்கணிகண்ணருடைய திருவடிகளைப் பிடித்துக்கொண்டு மன்றாடினார். பிறகு பெருமாள் வெஃகாவிலே எழுந்தருளினார் என்பர்.

ஆழ்வரும் குடந்தை செல்லும வழியில் பெரும்புலியூரில் பிராமணர்களை ஸந்திக்க அவர்களும் இவரை நிந்திக்க வேதம் மறந்துபோனதாலும், பெருமாள் ஆழ்வார் சென்ற பக்கமே முகத்தைதிருப்பிக்கொள்ள பிராம்மணர்கள் அபசார க்ஷமாபணம் பண்ணிக்கொண்டனர். பிறகு ஆழ்வாரை அழைத்துச்செல்ல பெருமாள் யதாபூர்வமாக ஸேவை சாதித்தார்.

ஒரு ஊரில் ஒருவர் யாகஞ்செய்ய இவரது பெருமையையறிந்து இவரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போக சிலர் நிந்திக்க தனது திருமார்ப்பிலே ஜ்வாலாருபமான சக்ரத்தாழ்வான் ஸேவையாக 2300 வருஷங்கள் எழுந்தருளியிருந்தார்.

ஆழ்வாரின் ப்ரபந்தப் பெருமையையும் தேசிகன் ஈடுபாட்டையும் அடுத்த ஸேவாவில் அநுஸந்திப்போம்.

## பஞ்சாங்கம் டிசம்பர் 1953.

**விஜய கார்த்திகை—மார்கழி** **டிஸம்பர் 1953.**

5. ஏகாதசி
6. அமாவாஸ்யை
7. பகல்பத்து உத்ஸவாரம்பம் (ஸ்ரீரங்கம்)
14. கோடிகன்னிகாதானம் தாதாசாரியர், காஞ்சி
16. மாதப் பிறப்பு, தனுர்மாஸாராதனம்
வைகுண்ட ஏகாதசி ராப்பத்து ஸ்ரீரங்கம்




## நல்லபரிசு........திருப்பாவை

கோபு:—பார்த்தாயா அலமு! எங்கள் பள்ளிக் கூடத்திலே போட்டிகள் எல்லாம் ஆரம்சுட்டாளே!

அலமு:— என்ன போட்டிகள் அண்ணு?

கோபு:— அதுவா! சொல்லட்டுமா? பேச்சு, எழுத்து, பாட்டு, விளையாட்டு எல்லாத்திலேயும் தான்.

அலமு:— அப்போ, நீ எதிலே அண்ணு கலந்திண்டிருக்கே?

கோபு:—நானு! இல்லே அலமு! எதிலேயும் சேறல்லே.

அலமு:—என் அண்ணு இதெல்லாம் கஷ்டமா என்ன? பேசறது, எழுதறது, பாடறது, ஆடறது இதெல்லாம் ப்ரம்ஹ வித்தையா என்ன?

கோபு:— நீ என்ன சொல்லாதே! எனக்கு தானே தெரியும்!

அலமு:— அப்படிச் சொல்லாதே! எங்க பள்ளிக்கூடத்திலேயும் போட்டி வைச்சிருக்கா அதிலே நானே சேர்ந்திருக்கேனே! நீ என்னமோ பின் வாங்கறயே! அண்ணு அப்போ ஒன்னு பண்றயா? எங்க பள்ளிக் கூடத்திலே யார் வேணும்னாலும் அந்த போட்டியிலே கலந்துக்கலாம்னு வைச்சிருக்கா. நீயும் தான் கலந்துக் கொள்ளேன்!

கோபு:— அப்படியா! அப்படியானு என்பேரையம் சொல்லிவிடு. எங்கள் வகுப்பிலே ராமு இருக்கானேன்னு தான் பார்க்கேன் இருக்கட்டும். எங்க வாத்தியாரிடம் பேர் கொடுத்துட்டு வந்துடறேன். நீ சொன்னேயே அது என்ன போட்டி?

அலமு:—அதுதானே! தமிழிலே முப்பது பாட்டு தப்பாமே ஒப்பிக்கணும். அப்புறமென்ன? பரிசுதான்.

கோபு:—ஏன் அலமு! நாலுபேர் ஒப்பிச்சான்னு வெச்சுக்கோ நாலுபேருக்குமா பரிசு கொடுப்பா?

அலமு:—அண்ணு உனக்கு ஸந்தேஹமாஎன்ன? எத்தனைபேர் தப்பாமே ஒப்பிச்சாலும் அத்தனைபேருக்கும் தப்பாமேபரிசு உண்டு இதுக்குச் சொல்லவா வேணும்.

கோபு:—அதிருக்கட்டும். இன்னும் எத்தனை நாளைக்குள் ஒப்பிக்கணும்?

அலமு:—ஒரு வாரம் இருக்கு.

கோபு:—அப்படியா இதோ நானும் ஆரம்பிச்சுட்டேன். அந்த பாட்டைக் கொடு.

அலமு:—அதுவா! அதான் திருப்பாவை!



## அட்டைப்பட விளக்கம்

இவர் ஸ்ரீ வில்லிபுத்தூரிலே ஸேவை ஸாதிக்கிறார். ஸ்ரீ வில்லிபுத்தூர் என்பது பாண்டி நாட்டுத் திருப்பதியில் ஒன்று. பெரியாழ்வாரையும் ஆண்டாளையும் பெற்ற படியினாலே ஸ்ரீ வைகுண்டத்துக்கும் மேலாய் விளங்கும்.

இத்தலத்திலே க்ஷேத்ரப்பெருமாள் வடபத்ரசாயி என்பவர். இவர் பெரியாழ்வாராலும் சூடிக்கொடுத்த சுடர் கொடியாலும் பாடும் பெருமை பெற்றவர். "வில்லிபுத்தூர் இனிதமர்ந்தாய் உன்னைக் கண்டார் என்ன நோன்பு நோற்றார்களோ இவனைப் பெற்ற வயிறுடையாள்" என்பர் பெரியாழ்வார். மென்னடையன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூருறைவான் தன் பொன்னடி காண்பதோராசையினால்......என் கண்ணினை துஞ்ச என்பள் ஆண்டாள்.

அங்கு ரங்கமன்னாரும் எழுந்தருளியிருக்கிறார். கோதை ரங்கநாதன் வேங்கடநாதன், அழகர் முதலான ஐவரை மனத்தில் கொண்டு யார் முன்னம் வருவரோ அவருக்கு மாலை சூட்டுவேன் என்று இருந்தாளாம். எம்பெருமாள்கள் அந்த அந்த திவ்ய தேசத்திலிருந்து புறப்பட ரங்கநாதன் கருடாரூட்னாய் வேகமாய் வரும்பொழுது கருடன் கீழே இறங்குவதற்குள்ளாக கோதையை யார் கைப்பிடித்து விட்டுப்போகிறாளோ என்று குதித்து வந்து மாலையை முதலிலே சூட்டிக்கொண்டாராம் நால் திசையில் வந்த நால்வரும் செய்தி அறிந்து அங்கங்கேயே நின்று விட்டனர். அந்த ரங்கநாதனே நம் ஸேவா ரஸிகர்களுக்கு ஸேவை ஸாதிக்கும் **ரங்க மன்னார்.**

## நினைத்ததுண்டா...?

### ஸ்ரீ தேசிகன் யார்?

### அதீதஸாங்க ஸகலச்ருதி:

அங்கங்களோடு வேதங்களை அத்தயயனம் பண்ணுவதில் அனேக நியமங்கள் உண்டு. ஸ்வசாகையை அத்யயனம் பண்ணவேண்டும், பிறகு இதர சாகைளை அத்யயனம் செய்யாமல் ஸ்வாமி ஸகல வேதங்களையும் அத்யயனம் செய்தருளினார். க்ருஷ்ண பக்ஷத்தில் சாஸ்திரங்களும் சுக்ல பக்ஷத்தில் வேதங்களையும் அதயயனம் பண்ணவேண்டும் என்றும் சொல்வர். தானே க்ரந்தங்களைப் பார்க்வில்லை. ஸ்வாமி ஸ்வாசாரியரான அப்புள்ளரிடத்தில் அதிகரித்தார். என்பர். மாதுலர் அகிலாம் நாய பாரங்கதர் என்னும் மாதுலாத்ஸகலா: என்றும் கூறினார்.

### ஸ்ம்ருதி வித்

வேதங்கள் ஓதியது மாத்திரமல்ல ஸகல ஸ்ம்ருதிகளையும் நன்றாக அறிந்தவர் ஸ்வாமி. ஸ்ம்ருதிகளை எல்லோரும் தான் படிகின்றார்கள். ஸ்வாமிக்கு இது பெருமையாகுமா என்று நினைக்கலாம். ஸ்ம்ருதியை ஸ்வாமி தெரிந்துக்கொண்டிருக்கிறார் என்பதின் பொருள். பாஞ்சராத்ராகமங்களுக்கு விரோதமில்லாமல் ஸ்ம்ருதியை அறிவர் ஸ்வாமி இதுதான் ஸ்வாமிக்கு ஏற்றம்.



# பிராட்டியின் பிரபாவம்

பிராட்டியின் பெருமையை ஸ்ரீஸூக்தத்தை அநுஸந்தானம் செய்து அனுபவிப்போம். லக்ஷ்மீ கடாக்ஷமில்லையேல் எந்த காரியமும்நடைபெறுது. கருப்பத்திலும் லக்ஷ்மீ கடாக்ஷம் இருக்க வேண்டும். கருவிலே திருவிலாதீர் காலத்தைக் கழிக்கின்றீரே என்று பகவத் விமுகரைப் பேசுவர் தொண்டரடிப் பொடிகள்.

செல்வம் மட்டுமில்லை, சண்டை சச்சரவுகள், நோய் நொடிகள் இல்லாமல் இருக்கவேண்டுமானல் லக்ஷ்மீ கடாக்ஷம் இருந்தாலன்றி இயலாது. புருஷன் என்பது எப்படி விஷ்ணுவையே சொல்லுமோ, அப்படியே பிராட்டி என்கிற பதம் தாயாரையே குறிக்கும். அவர் பெருமாள். இவள் பிராட்டி. பிராட்டி என்பது மஹா தேவி பெருந்தேவி என்பதுபோல் லக்ஷ்மியினிடமே ப்ரயோகிக்கவல்லது.

இவளது பெருமையை விளக்குவது இவள் ஸூக்தம். இது பதினைந்து ருக்குகள் கொண்டது. புருஷஸூக்தம் போல் பிராட்டியின் வைபவத்தை விளக்கும் இது. இந்த ஸ்ரீஸூக்தத்தை அநுஸந்தானம் பண்ணுமவர்க்கு ஸகலாபீஷ்டங்களும் ஸித்திக்கும்.

ஸ்ரீ ஸூக்தத்தைக் கொண்டு தாயாரை ஆராதிக்கலாம். இதனுடைய ப்ரயோகங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு பலத்தை அடைய ஆசைப்படுபவர்கள் ஒவ்வொரு ருக்கை ஜபித்துவரலாம். மோக்ஷத்தை அளிக்கும் லக்ஷ்மியானதால் எல்லைக்கடந்த அநுக்ரஹப் பெருக்காக எதையும் அருளுவள். புருஷஸூக்தம் தத்துவத்தைச் சொல்லி அவ்வளவோடு நிற்கும் ஸ்ரீஸூக்தம் பிராட்டியின் பெருமைக்கேற்ப அவள் பலப்ரதானம் பண்ணும் சீர்மையைக் கூறும். பெருமாளிடத்திலே பக்திஞானங்களை மட்டும் கேட்போம். பிராட்டியினிடத்தில் ஆநுஷங்கிக போகங்களனைத்தையும் பெறலாம். ஆபத்தில்லை போலும். மோக்ஷம் ஸித்தம். மற்றவைகளையுந்தான் கொடுத்து அவளது விபூதி சிறந்து விளங்க அருள் புரியட்டுமே! எல்லாவற்றையும் கொடுப்பவள் அவளே என்று அறிவுறுத்துகிறது போலும். மற்றவர்களிடத்தில் வேண்டிற்றுப் பெறலாமே என்னில் அவர்கள் தான் ஸ்திரமில்லையே! ஸ்திரமல்லாதவர்களின் அருளைப் பெற்ருல் அது மட்டும் எப்படி நீடித்து நிற்கும்.

ஆக நாம் எதுவேண்டுமென்று எண்ணினலும் தாயாரைத் தஞ்சமடையவேண்டும்.



# ஸ்ரீ விஷ்ணு புராணம்

ஜநயது ஜகதாம் சர்ம வைகுண்ட நாத:

## 15 வது அத்தியாயம்

**ஸோமன் கூறுவது:—**

மாரிஷாவின் முன் பிறவி விருத்தாந்தத்தை உங்களுக்குச் சொல்வேன். இதனல் உங்களுக்கு விசேஷ நன்மையுண்டாகும்.

முன்னளிலே பிள்ளையில்லாத இம் மாரிஷை தன் கணவன் இறந்துவிடவே மன்னன் மனைவியாய் மிகுந்த பாக்கியசாலியாயுமிருந்த இம் மாரிஷை மிகுந்த பக்தியினல் விஷ்ணுவை மகிழ்வித்துவந்தாள். அவளால் ஆராதிக்கப்பட்ட விஷ்ணுவும், ப்ரஸன்னராய் ப்ரத்யக்ஷமாய்த் தோன்றி வேண்டியதை வேண்டிக் கொள் என்று சுபமான வார்த்தையைச் சொல்ல அவளும் தனது அபீஷ்டத்தை வேண்டினள்.

**அவள் செய்த ப்ரார்த்தனே**

பகவானே! பால்யத்திலேயே பதியைப் பறிகொடுத்துப் பயனற்ற பிறவியுடையவளாய் இப்பரிதாப நிலையுடன் பொழுது போக்கி வருகின்றேன். பாக்கியமற்றவளாய் பிள்ளைப்பேறு மில்லாதவளாய் வீணே பிறந்தவளானேன். ஜகத்துக் கெல்லாம் பதியே! பிறவிதோறும் எனக்கு சிறந்த பதிகள் கிடைக்க வேண்டும். உனது பேரருளாலே பிரஜாபதிக்கு நிகரான புத்திர

னும் எனக்கு உண்டாக வேண்டும்.

அழகும் ஐச்வர்யமும் அடைந்தும், எங்கும் ப்ரியத்தையே பார்ப்பவளாயும், உமது அருளாலே ஆயோநிஜையாயும் பிறக்க வேண்டும் என்றாள்.

**ஸோமன் கூறுவது:—**

அவளால் இவ்வண்ணம் வேண்டிக் கொள்ளப்பட்ட தேவாதிராஜனும் ஸேவித்து வணங்கி யிருக்கும் அவளை எழுப்பி **வரதனாய்** அருகில் நின்று அவளை நோக்கிச் சொல்லுகின்றார்.

**தேவாதிராஜன் கூறுவது**

உனக்கு அடுத்த பிறவியிலேயே மிகவும் வீர்யமுள்ளவர்களாயும், புகழ்தரவல்ல உயர்ந்த செய்கைகளையுடையவர்களாயும், பத்து பதிகள் உண்டாகப் போகின்றனர். மஹாத்மாவாயும், அதிவீர்ய பராக்ரமசாலியாயும், ப்ரஜாபதிக்குற்ற குணங்கள் நிறைந்ததோர் புத்திரனையும் நீயே அடையப் போகின்றாய். இவ்வுலகில் வம்சங்களைச் செய்பவனாய் விளங்கப் போகின்றான் அவன். அவனுடைய ஸந்ததி யெல்லாம் மூவுலகையும் பூரணமாக்கப்போகின்றது. நீயும் எனதருளாலே அயோநிஜையாய் பதிவ்ரதையாய், ரூபம் பெருந்தன்மை முதலிய குணங்களையுடையவளாய் மக்களின் மனதுக்கோர் களிப்பைச் செய்பவளாய் விளங்கப் போகின்றாய். என்றுரைத்து **வரதன்** அங்கே அந்தர்த்தானமாயினர். அரசகுமாரர்களே! அன்று வரதனருள் பெற்றஅவளே இவள். **மாரிஷை**யாய் உங்களுக்கும் மனைவியாய் தோன்றி யிருக்கின்றாள் என்று ஸோமன் கூறினான்.

**பராசரர் கூறுகிறார்:—**

பிறகு ஸோமன் சொன்னதைக் கேட்ட ப்ரசேதர்கள் மரங்கள் மீதெழுந்த கோபம் தணிந்து அம்மாரிஷையை முறைப்படி மனைவியாய் ஏற்றுக் கொண்டனர். பத்து ப்ரசேதர்களுக்கும் மாரிஷையினிடத்தில் மகாபாக்யசாலியான **தக்ஷப்ரஜாபதி** என்பவர் தோன்றினர், இவர் முன்பு பிரம்மாவினிடத்திலுண்டானவர். அந்த தக்ஷரும் தான் ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்க நினைத்து உயர்ந்தவர்களைப் போல் தாழ்ந்தவர்களையும், இரண்டு அல்லது நான்கு கால்கள் படைத்த ஜீவன்களையும் பிரமத்தின் கட்டளைப்படி தனது ஸந்ததிகளாக ஸ்ருஷ்டித்து வந்தார்.

இவ்விதம் மனதினால் இவைகளை ஸ்ருஷ்டித்து பிறகு ஸ்த்ரீகளை ஸ்ருஷ்டித்தார். பத்து பெண்களை **தர்மனுக்கும்** பதிமூன்று பெண்களை **கச்யபருக்கும்**, காலத்தை கடத்துவதில் நியமிக்கப்பட்ட இருபத்தேழு பெண்களை **சந்திரனுக்கும்**, மணம் செய்து வைத்தார். அவர்களிடத்தில் தேவர்கள், தைத்தியர்கள், நாகர்கள். பசுக்கள், பறவைகள், கந்தருவர், அப்ஸரஸ்ஸுக்கள், தானவர் முதலியவர் உண்டாயினர். மைத்ரேயரே! அதுமுதற் கொண்டே ப்ரஜைகள் சேர்க்கையால் உண்டாகத் தொடங்கியது. அதற்கு முன்பு நினைத்த மாத்திரத்தினாலும், பார்த்த மாத்திரத்தினாலும், தொட்ட மாத்திரத்தினாலும் பிரஜைகள் உண்டாகி வந்தனர்,



தபோபலத்தினாலும் பிரஜைகள் பிறப்பது வழக்கமாயிருந்தது.

**மைத்ரேயர் கேட்கிறார்**

தக்ஷர் என்பவர் கால் கட்டை விரலிலிருந்து உண்டானார் என்று நான் கேட்டதுண்டு. மறுபடியும் இவர் ப்ரசேதர்களுக்கு ஸந்ததியாய் பிறந்தார் என்பது எப்படி என்பதே எனக்கு மிகப் பெரிய ஸந்தேஹமாயிருக்கிறது மேலும் அவருடைய பேரனே அவருக்கு மாமனார் ஆனாரென்பதுவும் விளங்கவில்லை என்றார்.

**ஸ்ரீ பராசரர் கூறுவது:—**

ப்ராணிகளுக்கு பிறப்பும் இறப்பும் நியதமானது. இவ்விஷயத்தில் ரிஷிகளுக்கும், திவ்ய த்ருஷ்டியுள்ளவர்களுக்கும் எத்தகைய மயக்கமும் கிடையாது. முனிவர்களில் சிறந்து விளங்கும மைத்ரேயரே! ஒவ்வொரு யுகத்திலும் தக்ஷர் முதலியோர் தோன்றுகின்றனர் அவ்வண்ணமே மறைகின்றனர். இவ்விஷயத்தில் அறிவாளிக்கு ஸந்தேஹம் சிறிதும் கிடையாது. மேலும் முன் காலத்தில் அதிக வயதினால் மாத்திரம் பெருமை என்பதில்லை. தவமும் பிரபாவமும்தான் பெருமைக்கு (ஜ்யேஷ்டன் என்ற பாகுபாட்டிற்கு) காரணமாயிருந்துள்ளது.

**மைத்ரேயர் கேட்பது:—**

தேவர், தானவர், கந்தருவர், உரகர், ராக்ஷஸர் ஆகியோரின் உத்பத்தியை எனக்கு விஸ்தாரமாய் சொல்வீர் என்றார்.

**ஸ்ரீ பராசரர் கூறுவது:—**

"நீர் பிரஜைகளை ஸ்ருஷ்டி செய்யும்" என்று **ஸ்வயம்புவா**கிய பிரமனால் நியமிக்கப்பட்ட **தக்ஷர்** சராசரங்களெனும் ப்ராணிவாகங்களை ஸ்ருஷ்டித்த வகையைச் சொல்வேன கேளும். அப்பொழுது தக்ஷர் தேவர், ரிஷிகள், கந்தருவர், அஸுரர், பந்நகர் ஆகியோரை மானஸமாகவே ஸ்ருஷ்டி செய்தார். அவ்விதம் அவர் ஸ்ருஷ்டித்து வருகையில் ப்ரஜைகள் வளராமையைக் கண்டார்.

அப்பொழுது அதைக் கண்ட தக்ஷர் நன்கு யோசித்து மறுபடியும் ஸ்ருஷ்டி செய்ய நினைத்தவராய், கூடுதல் முறையைக் கொண்டே பரஜா ஸ்ருஷ்டியில் உறுதிக் கொண்டார். வீரணப்ரஜாபதியின் பெண்ணாகிய **அஸிக்நீ** என்பவளை மணந்துக் கொண்டார். அஸிக்நீயும் அளவில்லாத்தவம் கொண்டவள். அவளுக்குண்டான பெருமை அளவு கடந்தது. உலகத்தையே தரிக்கும் சக்தியுடையவள் அவள்

பிறகு உலகை ஸ்ருஷ்டிக்க ஸங்கல்பித்த தக்ஷர் அஸிக்னியினிடத்தில் ஐந்தாயிரம் பிள்ளைகளையுண்டுபண்ணினார். அவர்கள் அனைவரும் ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப்பதிலே கண்ணும் கருத்துமாயிருக்க, ப்ரியத்தை சொல்பவரான **தேவரிஷி நாரதர்** அங்கு வந்து அவர்களைப் பார்த்துச் சொன்னார், **ஹே ஹர்யச்வர்களே!** மஹாவீர்யசாலிகளாகிய நீங்கள் செய்து வரும் இம்முயற்சியைப் பார்த்தால் நீங்கள் ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கப்போகிறவர்கள் என்று நன்றாய் தெரிகின்றது. ஆனால் நான் சொல்வதை சிறிது கேளுங்கள். நீங்கள் எதையும் அறியாதவர்கள். உங்களுக்கு இந்த உலகத்தைப்

பற்றியும், கீழ்மேல் உலகங்களைப் பற்றியும் ஒன்றும் தெரியாது. நீங்கள் எப்படித்தான் ஸ்ருஷ்டிக்க முடியும்? கீழ்உலகங்களிலும் மேல்உலகங்களிலும், பூமியிலும் எங்கும் செல்லத்தடையுருத சக்தியுடைய நீங்கள் ஆனைவரும் ஏன் பூமியின் முடிவைப் பார்த்து வரலாகாது? என்றூர். இவ்விதம் நாரதர்சொன்ன வார்த்தையைக் கேட்ட ஐந்தாயிரமவர்களும் திக்கெல்லாம் விரைந்தனர். ஸமுத்திரங்களில் விழுந்த ஆறுபோல் இன்னும் தருப்பினரல்லர்.

இவ்வண்ணம் ஹர்யச்வர்கள் காணுமற் போகவே ப்ரசேதர்களின் குமாரராகிய தக்ஷர் அஸிக்னியினிடத்தில் மேலும் ஆயிரம் பிள்ளைகளை யுண்டுபண்ணினூர். சபலாச்வர்களாகிய ஆயிரமவரும் ப்ரஜாவ்ருத்தியில் நோக்குடைய வராயினர். அங்கு வந்த நாரதர் முன்போலவே அவர்களையும் சொல்ல, அவரால் தூண்டப்பட்ட சப்லாச்வர்கள் மஹாமுனிவராகிய நாரதர் நன்றே சொன்னூர் என்று தம்மில் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டனர். நமது அண்ணன்மார்கள் சென்ற வழியிற் செல்வதுதான் சிறந்தது. இதில் சிறிதும் ஐயமில்லை என்றனர். பூமியின் அளவை அறிந்தே பிறகு பிரஜைகளை ஸ்ருஷ்டிப்போம் என்று தீர்மானித்துக் கொண்டனர். மூத்தவர்களின் வழியே இளையவர்களும் சென்றவராயினர். ஸமுத்திரங்களில் விழுந்த ஆறுகளே போல் இன்றும் அவர்கள் திரும்பவில்லை. ஒருவனைத்தேட ஒருவன் சென்றால் அவனும் காணுமற் போயினன். இங்கு அவர்கள் அறிவிழந்தனர்.

அவர்களும் காணுமற் போனதையறிந்த தக்ஷப்ரஜாபதி மிகவும் கோபம் கொண்டார். நாரதரையும் சபித்து விட்டார். மைத்ரேயரே; மேலும் ஸ்ருஷ்டி செய்ய எண்ணி— அவர் அஸிக்னீயினிடத்தில 60 பெண்களை உண்டு பண்ணினூர் என்றும் நாங்கள் கேட்டிருக்கிறோம். அவர் பத்து பெண்களை தர்மனுக்கும், பதிமூன்று பெண்களை கச்யபருக்கும். இருபத்தேழு பெண்களை சந்திரனுக்கும் நான்கு பெண்களை அரிஷ்டநேமிக்கும், இரண்டு பெண்களை பஹுபுத்திரர் என்பவருக்கும், இரண்டு பெண்களை அங்கிரஸ்ஸுக்கும், மற்றும் இரண்டு பெண்களை க்ருசாச்வருக்குமாக மணம் செய்துக் கொடுத்தார். அவர்களுடைய பெயர்களையும் சொல்லுகின்றேன் கேளும, அருந்ததி, வஸு, யாமி, லம்பா, பாநு, மருத்வதி, ஸங்கல்பா, முஹூர்த்தா, ஸாத்யா, விச்வா, எனப்படுவர் **தர்ம** பத்நிகள், இவர்களது ஸந்ததியையும் சொல்லுகின்றேன். விச்வா என்பவளுக்கு விச்வேதேவர்களும், ஸாத்யா என்பவளுக்கு ஸாத்ய கணங்களும், மருத்வதி என்பவளுக்கு மருத்வந்தர்களும், வஸுவிற்கு வஸுக்களும், பாநுவிற்கு பாநுக்களும், முஹூர்த்தை என்பவளுக்கு முஹூர்த்தாபிமானிகளான தேவர்களும், லம்பா என்பவளுக்கு கோஷன் என்பவனும், யாமி என்பவளுக்கு நாகவீதி எனப்பட்டதும், புவியிலுள்ள ப்ராணிவர்க்கமெல்லாம் அருந்ததி என்பவளுக்கும், ஸங்கல்பா என்பவளுக்கு ஸங்கல்பம் என்பவரும், ஸந்ததியாவர்.



மேலும் அநேக ப்ரகாரமான தேஜோதநாதிகளை ப்ராணனுய்க் கொண்ட ஜ்யோதி (அக்னி) முதலாகிய எட்டு வஸுக்களைப் பற்றி சுருக்கமாய் முன்பு கூறினேன். இதன் விரிவை இப்பொழுதுரைப்பேன். ஆபஸ், த்ருவன், ஸோமன், தர்மன, அனிலன், அனலன், ப்ரத்யூஷன், ப்ரபாஸன் என்று அவ்வெட்டு வஸுக்களுக்கும் பெயர். ஆபனின் புத்திரர்கள் வைதண்டன், ச்ரமன், சாந்தன், த்வனி எனப்படுவர். த்ருவனுக்கு லோகஸம்ஹாரத்தைச் செய்யும் காலன் புத்திரனுனன். ஸோமனுக்கு வர்ச்சா என்பவர் புத்ரரானூர். இவரால் தான் புருஷர்கள் வர்ச்சஸ்விகளாகிறூர்கள். தர்மனுக்கு மனோஹரா என்பவளிடத்தில் த்ருஹிணன், ஹுதன், ஹவ்யவஹன், சிசிரன், ப்ராணன், வருணன் என்பவர்கள் பிறந்தனர். அனிலனுக்கு சிவா என்பவள் பார்யை. அவளிடத்தில் மனோஜவன் அவிக்ஞாதகதி என்று இருவர் பிறந்தனர். அக்னி புத்திரனுகிய குமாரன் நாணற் காட்டில் தோன்றினூன். அவனுக்கு சாகன், விசாகன், நைகமேயன் என்பவர்கள் உடன் பிறந்தவர்கள். க்ருத்திகைகளுக்கு மகனை படியால் கார்த்திகேயன் எனப்படுவான். ப்ரத்யூஷருக்கு தேவலர் என்ற ரிஷி புத்திரர் என்று கூறுவர். தேவலருக்கும் க்ஷமாவான், மனீஷீ என்று புத்திரர்கள்.

ப்ருஹஸ்பதியின் உடன் பிறந்தவளும் ப்ரும்ஹசர்ய முடையவளும், யோகஸித்தி பெற்றவளும், உலகில் பற்றற்று ஸஞ்சரித்துக் கொண்டிருக்கு மவளான **வரஸ்த்ரீ** என்பவள் எட்டாவது வஸுவான ப்ரபாஸர் என்பவருக்கு பார்யையானூள். அவளிடத்தில் மஹாபாகரான விச்வகர்ம ப்ரஜாபதி என்பவா பிறந்தார். ஆயிரக் கணக்கான சில்பங்களை செய்பவர் இவர். தேவர்களுக்கு சில்பியாய் ஸர்வவிதமான ஆபரணங்களை செய்யும தன்மை பெற்று, சில்பிகளுக்குள் சிறந்து விளங்கினூர். தேவர்களுடைய விமானங்களையெல்லாம செய்துக் கொடுத்தவர் இவரே. இவருடைய சிற்பக்கலையை மனிதர்களும பின பற்றி கையாண்டு வாழ்ந்து வருகின்றனர்.

அவரது புத்திரர்கள் நால்வர். அஜைகபாதர், அஹிர்புத்னியர், த்வஷ்டா, ருத்திரன் என்று அவர்களுக்குப் பெயர். த்வஷ்டா என்பவருக்கு விச்வருபன் என்பவர் புததிரன் இவர் மஹாதபஸ்வி. ஹரன், பஹுருபன், த்ரியம்பகன, அபராஜிதன, வ்ருஷாகபி, சம்பு, கபர்தீ, ரைவதன், ம்ருகவ்யாதன், சர்வன், கபாலி எனப்படும் பதினொருவரும் ருத்திரர்கள். இவர்கள் மூவுலகுக்கும் அதிகாரிகளாவர். [இங்கு ப்ரபாஸ பார்யையின் புத்திரர்களான ருத்திரர்கள் மூவர் என்றும், த்வஷ்டாவின புத்திரர்களான ருத்திரர்கள் எண்மர் என்றும் கூறுவர்] இவ் வண்ணம் நூற்றுக கணக்கான ருத்திரர்கள் பகவானுல் ஸ்ருஷ்டிக்கப் பட்டுள்ளனர். எனறும் சொல்லுவர்.

இவ்விதம் தர்மபத்நிகளின் ஸந்தானப் பெருக்கை சொல்லியாயிற்று. இனி தக்ஷர் கன்னிகைகள் பதின் மூவரை கச்ய

பருக்கு மணம் செய்வித்தார் என்று கூறப்பட்டது. அதனுடைய விவரத்தையும் சொல்லுகின்றேன் கேளும்:—

கச்யபரின் பார்யைகளுக்கு அதிதி, திதி, தநு, அரிஷ்டா, ஸுரஸா, கஸா, ஸுரபி, வினதா, தாம்ரா, க்ரோதவசா, இரா, கத்ரு, முனி என்று பெயர். அவர்களுடைய ஸந்ததியையும் சொல்வேன்.

முன் சாக்ஷுஷ மன்வந்தரத்திலே துஷிதர்கள் என்று பெயர் கொண்டு பன்னிரண்டு தேவ கணங்கள் இருந்தனர். சாக்ஷுஷ மன்வந்தரத்தில் இவர்கள் மிகவும் புகழ் பெற்றிருந்தனர். வைவஸ்வத மன்வந்தரம் தொடங்கும் பொழுது தமக்குள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர். எல்லோரும் ஒன்று சேர்ந்து விரைவாக வாருங்கள். அதிதியின் கருப்பத்தில் ப்ரவேசித்து இந்த மன்வந்தரத்திலும் பிறந்திடுவோம். அதனால் நமக்கு மிகவும் ச்ரேயஸ் உண்டாகும். இவ் வண்ணம் உரைதத அவர்களனைவரும் சாக்ஷுஷ மன்வந்தரத்தில் நிச்சயித்தவாறே மரீசியின் குமாரரான கச்யபருக்கு அதிதியினிடத்தில் தோன்றினர். அவளிடத்தில் மறுபடியும் விஷ்ணுவும் இந்திரனும் பிறந்தனர். அர்யமா, தாதா' த்வஷ்டா, பூஷா, விவஸ்வான், ஸவிதா, மித்ரன், வருணன், அம்சு, பகன், என்ற இப்பன்னிருவரும் தோன்றிய படியால் அதிக தேஜஸ்ஸுடைய இவர்கள் பன்னிரண்டு ஆதித்யர்கள் எனப்பட்டனர்.

இருபத்தேழு கன்னிகள் நல்ல விரத முடையவர்களாய் ஸோமனுக்கு மனைவிகளாயினர் என்றுரைத்தேன். அவர்கள் அனைவரும் நக்ஷத்திரங்களின் பெயராலேயே அழைக்கப்படுவர். அந்த நக்ஷத்திரங்களுக்கும் ப்ரஜைகள் உண்டு.

அரிஷ்ட நேமியின் மனைவியருக்கு பதினாறு பிள்ளைகள் பிறந்தனர். பகு புத்திரருக்கு நால் வகையான வித்யுத்துக்கள் பிறந்தன.

ப்ரத்யங்கிரஸருக்கு பிரம்மரிஷிகளினால் பகுமானிக்கப்படும் ருக்கபிமானி தேவர்கள் தோன்றினர். தேவரிஷியான க்ருசாச்வருக்கு சாஸ்திராபிமானிகளான தேவப்ரஹரணர்கள் என்றபெயர் கொண்ட தேவகணங்கள் உண்டாயின. ஆயிரம் யுகங்களுக்கோர் முறை மறுபடியும் பிறவியடைகின்றனர். முப்பத்திமூன்று வகையான இத்தேவ கணங்கள் தமது விருப்பத்தின் படியே பிறவி எடுத்துக்கொள்வர். இவ்வுலகிலும் இவர்கள் இடைவிடாது பிறவி மரணங்களை அடைகின்றனர். எவ்விதம் ஸூர்யனுக்கு உதயாஸ்தமனங்கள் உண்டாகின்றனவோ அவ்விதமே இவர்கள் ஒவ்வோர் யுகத்திலும் பிறந்த வண்ணமிருப்பர்.

கச்யருக்கு திதியினிடத்தில் இரண்டு பிள்ளைகள் பிறந்தனர் என்று நமக்கு கேள்வி. யாராலும் வெல்லவியலாத வீரர்கள் அவர்கள். ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு என்று அவர்களுக்குப்பெயர். ஸிம்ஹிகை என்ற ஓர் பெண்ணும் பிறந்தாள். அவள் விப்ரசித்தி என்பவருக்கு மணம் செய்துவைக்கப்பட்டாள். ஹிரண்யகசிபுவிற்கு நான்கு



பிள்ளைகள். அவர்களுக்கு அநுஹ்லாதன், ஹ்லாதன், ப்ரஹ்லாதன், ஸம்ஹ்லாதன் என்று பெயர். ப்ரஹ்லாதன் மிகுந்த புத்திசாலி. எல்லோரும் பராக்ரமசாலிகள். தைத்ய வம்சத்தை நன்கு வ்ருத்தி செய்தவர்கள். அந்த நால்வரிலும் ப்ரஹ்லாதன் என்பவர் எங்கும் ஸமதர்சனத்தைப் பெற்றிருந்தார். இந்திரியங்களை வென்றவராயிருந்தார். ஜநார்தனனிடத்தில் பரம பக்தியை வெளியிட்டார். தைத்யேந்திரனான ஹிரண்யாக்ஷனால் வைக்கப்பட்ட தீ உடல் முற்றும் பரவியும் வாஸுதேவனை மனத்தில் கொண்ட ப்ரஹ்லாதனை எரிக்கவில்லாது போயிற்று. மாபெரும் கடல் நடுவே பாசத்தினால் கட்டுப்பட்ட மஹாஞானியான அவனுடைய அசைவினாலும் இருப்பினாலும் பூமியே அசைவு கொடுத்து வந்தது. ஹிரண்யகசிபுவின சஸ்திரங்கள் எதுவும் அச்சுதனை மனத்தில் கொண்ட ப்ரஹலாதனுடைய மலைகளைக்காட்டிலும் கடினமான தேஹத்தை தினைத்தனையும் பிளக்கமுடியாமற் போயிற்று. ஹிரண்ய கசிபுவினால் ஏவப்பட்ட மிகுந்த பராக்ரம சாலிகளான ஸர்பச்ரேஷ்டங்கள் எல்லாம் விஷத்தீப்பொறியும் முகத்தோடு தீண்டினும் ப்ரஹ்லாதனை மாளச்செய்யவியலாது போயின. மலைமலையாய் தன்மிது புறண்டு கிடந்தபோதிலும் புருஷோத்தமனை னைத்து விஷ்ணுஸ்மரணத்தி ஸித்தமாய் நின்று ப்ரா ளை துறக்கவில்லை. லிருந்து ஹிரண்ய தள்ளப்பட்டு ஆகாயத்திலிருந்து விழுந்துக்கொண்டிருக்கும் மஹாக்ஞாதாவான ப்ரஹ்லாதனை தான் தனது மடியிலே ஏந்திக் கொண்டாள் பூமி. ஹிரண்ய கசிபுவினால் ஏவப்பட்ட வாயுவும் உடலை வற்றச் செய்யினும் மதுஸூதனனை சித்தத்தில் கொண்டு இருக்கும் ப்ரஹ்லாதனுடைய சரீரத்திலேயே விரைவில் லயத்தை அடைந்துவிட்டது. ஹிரண்யகசிபுவினால் தூண்டப்பட்ட திக்கஜங்கள் ப்ரஹ்லாதனுடைய மார்பில் மோதி தந்தங்கள் முறிந்து பயித்தியம் பிடித்து, மதமும் சிதறி ஓடவாரம்பித்தன. ஹிரண்யகசிபுவின் புரோஹிதர்களாலே உண்டு பண்ணப்பட்ட அபிசாராக்னியும் கோவிந்தனை நினைத்துக்கொண்டிருக்கும் ப்ரஹ்லாதனை அழிக்க முடியாமற் போயிற்று. அதிமாயாவியான சம்பரனின் ஆயிரக்கணக்கான மாயைகளும் ப்ரஹ்லாதனிடத்தில் ப்ரயோகிக்கப்பட்டபொழுது க்ருஷ்ணனுடைய சக்ரத்தினால் வினாசகப்பட்டன. ஹிரண்ய கசிபுவின் சமையற்காரன் கொண்டு கொடுத்த காலகூட விஷமும் எத்தகைய விகாரத்தையும் செய்யாமல் ஜீரணம் செய்யப்பட்டுவிட்டது.

இவ்வுலகில் எல்லாப்ராணிகளையும் ஸமானமாய் பார்ப்பவனாய் தன்னிடத்தில் போலே பிறரிடத்திலும் மிகுந்த ப்ரீதிகொண்டவனாய், தர்மாத்மாவாய், ஸத்யம், சௌர்யம் முதலிய குணங்களுக்கு நிதியாய் ஸர்வ ஸாதுக்களுக்கும் உபமானமாய் எப்பொழுதும் இருந்து வந்தார் ப்ரஹ்லாதன்.

15-வது அத்யாயம் முற்றும்.




**பகவான் :-** மாஸங்களில் நான் மார்கழி மாதமாவேன் ருதுக்களில் வஸந்தருது ஆவேன். மாதங்களில மார்கழியின் சிறப்பின் காரணங்கள் :—நல்லோர் ஜீவனத்துக்குத் தேவையான மழைக்கு கருப்போட்டம அமையும் காலமும், 12 மாதங்களின் அதிதேவர்களான கேசவாதிகளில் முதன் முதலான கேசவ மாதமாயிருப்பதும், ருதுக்களுக்கு ஆரம்ப காலமாயிருப்பதும் ஆம்.

**வ்யாஸர்:-** புராணாகமங்கள் கூறும் காரியத்தைச் செய்பவன் பூமியை நல்ல நிலையில் வைப்பவன். வைஷ்ணவனை பார்த்து மகிழ்ந்து போற்றுபவன் ஸர்வ பாபங்களும் நீங்கி பூமியைத் தாங்குகிறான். ஆறுகர்மங்களைச் செய்யும் அந்தணன் தர்மத்தைச் சொல்லிக்கொண்டிருக்க பூமியைத் தாங்குகிறான்.

**பராசரர் :—** க்ருஷ்ணத்வைபாயனர் என்ற வ்யாஸரை ப்ரபுவானநாராயணன் என்றே அறியுங்கள். மைத்ரேயரே அவ்வாறு அவரில்லையேல் மஹா பாரதத்தை வேறுயாரால் இயற்ற முடியும்!

**மனு :-** ஸாமதான பேதங்களைக் கொண்டே சத்ருக்களை ஜெயிக்க வேண்டுமேயன்றி ஒரு காலத்திலும் யுத்தம் செய்யலாகாது

**திருமங்கையாழ்வார் :-** அந்தரத்தில் தேவருக்கும் அறியலாகா அந்தணனை அந்தணர் மாட்டு அந்தி வைத்த மந்திரத்தை மந்திரத்தால் மறவாது என்றும் வாழுதியேல் வாழலாம் மட நெஞ்சமே!

**திருமழிசையாழ்வார் :—**பொல்லாத தேவரைத் தேவரல்லாரை **திருவில்லாத்தேவரை.** தேறேன் மின் தேவு.

**ஆண்டாள்:-** கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார் **சொல்லும் பொய்யானால்** நானும் பிறந்தமை பொய்யன்றே

**தேசிகன் :-**

(1) அன்றே அடைக்கலம் கொண்ட நம் அத்திகிரித்திருமால் இன்றே இசையில் இணையடி சேர்ப்பர் இனிப் பிறவோம நன்றே வருவதெல்லாம் நமக்குப் பரமொன்றிலதே.

2. கோதையாகிய உன்னை பக் கத்தில் கொண்ட நாதனை அ இத்தே மான்யர்களான ம தாதா முதலியவர்கள் ச ராஜ்யத்தை நன்கு தனர்.




[வ்யாக்யானம், ஸ்ரீ ஏ. வி. கோபாலாசாரியர் ஸ்வாமி]

**உம்பராலறியலாகாவொளி**
**யுளாரானைக்காகிச்**
**செம்புலாலுண்டுவாழும்**
**முதலைமேல் சீறிவந்தார்**
**நம்பரமாயதுண்டே**
**நாய்களோம் சிறுமையோரா**
**எம்பிராற்காட்செய்யாதே**
**யென் செய்வான்தோன்றி**
**னேனே (28)**

**உம்பராலறியலாகா வொளியுளார்**

(1) ஸ்ரீ பாகவதம் 8-வது ஸ்கந்தத்தில் கஜேந்திராழ்வார் ஸ்தோத்ரம் ஆழ்வார் நெஞ்சிலோடுகிறது. திர்யக்குக்களும் ஈடுபட்டதை நினைத்து தம்மை நிந்தித்து வருந்துகிறார். ஆனையின் ப்ரேமையை வர்ணிக்கிறார். "பக்த்யா துதோஷ பகவான் கஜயூத பாயா" என்று ப்ரஹ்லாதாழ்வார் ந்ருஸிம்மப் பெருமாளெதிரில் நின்று செய்த ஸ்தோத்ரத்தின் தொடக்கத்திலேயே 2-வது ச்லோகத்தில் கஜேந்திராழ்வாரைப் பாடினார். இவ்வாழ்வாருமிங்கே கஜேந்திராழ்வாரின் ஈடுபாட்டிலீடுபடுகிறார்.

(2) 'நயஸ்ய தேவாருஷய: பதம்விது: ஜந்து: புன: கோர்ஹதி காது மீரிதும்" எவருடைய திவ்ய மஹிமையை தேவர்களும் ரிஷிகளும் அறிய மாட்டாரோ அந்த பகவானுடைய படிகளை வர்ணிப்பதற்குப் பேதை ஜந்துவாகிய நான் எப்படி வல்லன் என்று அந்த ஸ்தோத்ரத்தில் மூன்றாவதுச்லோகம்.உம்பராலறியலாகாவொளியுளா ரென்பது "நயஸ்ய தேவாருஷய: பதம்விது: என்பதின் தமிழே."கஜேந்திராழ்வாரை நினைந்து பாடுகையில் அவர் ச்லோகத்தையே தமிழ் செய்து பாடுவது உசிதம்.

(3) "தமஸ: பரஸ்தாத்" தமஸஸ்துபாரே" ரஜஸ: பராகே" என்று அனுத்தம உத்தம ஜ்யோதிர் லோகத்தில் இருக்கும் ஆதி நாராயணன் அதைவிட்டு இந்த இருட்டு லோகத்திற்கு இப்படி வருவாரோ என்பதை ஒளியுளார் என்பதால் குறிக்கிறார். பதம் என்று கஜேந்திராழ்வார் ப்ரயோகித்த பதம். பகவானுடைய திவ்யஜ்யோதி ஸ்வரூபத்தையும் திவ்ய ஜ்யோதிஸ்தானத்தையும் சொல்லுவதென்று 'ஒளியுளார்' என்பதால் இங்கே ஆழ்வார் விளக்குகின்றார்.

**ஆனைக்காகி**

ஓர் ஜந்துவுக்காக இந்த இருட்டு உலகத்திற்கு ஒளி உலகத்திலிருந்து அரை குலையத் தலைகுலைய ஓடிவந்தார். 'கடல் வண்ணா கதறுகின்றேன்'என்று ஆனையைப் போல் நாமும் கதறினால் நம்மைப்பிடித்துக்கொண்டு

கவ்விக்குமைக்கும் இந்த்ரிய முதலைகளிலிருந்து நம்மை விடுவிக்கமாட்டாரோ? இந்த்ரியங்களை க்ரஹங்கள் என்பர்.

முதலைகள்-க்ராஹங்கள்-க்ராஹக்ரஹத்திலிருந்து ஆனையை விடுவித்ததுபோல் நம்மையும் இந்த்ரியக்ராஹக்ரஹத்திலிருந்து விடுவிக்கமாட்டரோ? புலன்களுடைய் காவற் சிறையிலிருந்து நம்மை விடுவிக்கமாட்டாரோ? பரவாஸு தேவனே இங்கே அரங்கமா நகருள் இருப்பதால் நம்மை இந்த்ரிய முதலைகளின் பிடியிலிருந்து விடுவிக்க ஸ்ரீவைகுண்டத்திலிருந்து கருடனையும், தம் வேகத்தால் தள்ளிக்கொண்டு ஓடி வரவேண்டியதில்லை. இங்கே சேஷசயனத்தில் சயனித்துக்கொண்டே நம்மை விடுவிக்கலாம். நம்மைக்காவலில்வைத்துள்ள புலன்களை நாம் காவலில் வைக்கும்படி செய்யலாம் "அரங்கன் என் சந்த்ர புஷ்கரிணிக்கரையில் சயனித்திருக்கிறார்" என்று நஞ்சீயர் பெரியபட்டரைக் கேழ்க்கபட்டருளிச் செய்தபடி:- அன்று க்ராஹக்கரஸ்தமான யானை மிகவும் நொந்து கூப்பிட்ட பிறகே காலம் தாழ்த்து வர முடிந்தது. அப்படி ஒருவரும் சிறிதும் நோவுபடாமலிருக்கும் போதே ரக்ஷிக்க எண்ணியே இந்த மடுவின் கரையில் தான் முந்துற வந்துகிடப்பது.

(2) ஸகரஸாரஸாம்கராள நக்ரக்ரஹ க்ரஸந நிக்ரஹ பீடிதஸ்ய வ்யக்ரஸ்யராகரஸனோர்மி நிபீடிதஸ்ய லக்ஷ்மீந்ருஸிம்ம மம தேஹிகராவலம்பம்' என்று ஸ்ரீ சங்கராசாரியர் கதறி அனுக்ரஹம் பெற்றதை இங்கே நினைக்கவேணும். 'ஆனையிலும், கோவர்த்தனகிரியிலும் நான் மிக பாரம் ஆவேனோ? என்னை இந்த ஸம்ஸாரத்திலிருந்து தூக்கலாகாதோ' வென்று பண்டிதராஜர் கருணைலஹரியில் கண்ணனிடம் கதறினார்.'

(3) ஜந்மாந்தரங்களில் செய்திருந்த ஒரு நற்செய்கையும் வீண் போகாது. பூர்வ ஜன்மத்தில் இந்த்ரத்யும்ன ராஜனாயிருந்து செய்யத் துடங்கிய பக்தி யோகத்தின் நினைவு மற்றோர் ஜன்மத்திலும் கஜேந்திராழ்வாருக்கு ஓடிவந்து அந்த இன்பமயமான பகவத் சிந்தாந்த யோகத்தை மனதினால் நடத்தி வந்தார் என்பதை 'ஜஜாபபரமம்ஜப்யம் ப்ராக்ஜன்மந்யனு சிந்திதம்' என்று சுகர் கஜேந்திர ஸ்தோத்ரத்தின் அவதாரிகை ஸ்லோகத்தால் விளக்கினார்;

(4) ஆனைக்கு ஆகி என்பதால் ஆனைக்கு சேஷமாகப் பணி செய்தால் என்று ரஸம் பரமசேஷி இவ்வானைக்கு சேஷமாகி அதன் காலைப் பிடித்த முதலையைத் தள்ளியெறிய ஓடிவந்தார். 'ஆனைக்கு ஆகி' சமுபதி முதலிய நித்ய சூரிமண்டலத் தலைவர்களின் பிரணயங்களைத் தள்ளிக்கொண்டு 'ஆனைக்கு' என்று ஓடிவந்தார்

**செம்புலாலுண்டுவாழும் முதலைமேல்**

(1) முதலை தன் ஜாதி தர்மத்தைத் தான் செய்தது. தன் வயிற்றிற்கு உணவான ஆனை காலைக் கவ்விற்று. அப்பொழுது கிழித்த புது ரக்த மாமிசத்தை யுண்டு வாழவே அதற்கு ரம்பம் போன்ற நீண்டவாயும், பற்களும் பகவானாலேயே அளிக்



கப்பட்டுள்ளன. அதன் உணவு விருத்தியையே அது நடத்திற்று. செம்புலாலில்லையேல், அதை உண்பதில்லையேல் அது வாழமுடியாது. சாகவேண்டியதேயாகும்;

**சீறிவந்தார்**

(I) முதலை தன் ஜாதிஸ்வபாவத்தை தன் வயிறு ரொம்பி வாழ ஆனை காலைக் கவ்வியது. அதனால் அதன்பேரில் சீறக் காரணமில்லை. கோபமென்பதே பகவானுக்கு ஸ்வபாவமல்ல. பகவான் ஸ்வபாவத்தாலும் சீறக் காரணமில்லை. அப்படியிருந்தும் சீறி வருவானேன்? ஆனைக்காகிச்சீறி வந்தார். ஆனை இவருக்கு பக்தனான ஞானி. இவருக்கு ஆத்மா தன் ஆச்ரிதரை தான் கர்க்கவேண்டிய பொறுப்பு அவருடையது. அவருக்கு ஓர் விரோதியில்லை. ஆயினும் ஆச்ரிதர்களுடைய விரோதி பேரில் அவர் சீறுவர். ஆனையைக் கொல்ல வந்த முதலை மேல் சீறினார். ஆனைக்காகிச் சீறினார். தனக்காகச் சீறவில்லை.

**நம்பரமாயதுண்டே**

(1) 'இப்படி ஆச்ரித விஷயத்தில் பக்ஷபாதியாய் ரக்ஷிக்குமவவனான பின்பு நம்முடைய ரக்ஷணத்தில் நமக்கொரு சுமையுண்டோ' என்று பிள்ளை.

(2) அவன் பரத்தில் புகுந்த நம்பரம் என்பது உண்டோ நம்பரமென்றுண்டென்றெண்ணினால் அவன் பரம் போய்விடும்.

**நாய்களோம் சிறுமையோரா**

(1) கீதையில் 'ப்ராம்மணே கவி ஹஸ்திநி சுநி சைவ ச்வபாகே ச' என்ற ச்லோகத்தில் ஆனைக்குக் கீழ் நாயைக் குறித்தார். நாங்கள் நாயினும் சிறியவர்.

(2) எம் சிறுமைக்கு எல்லையில்லை. அவன் மேன்மைக்கு எல்லையில்லை. அவன் மேன்மைக்கு உலகமெங்கும் சிறுமையே நிறைந்துள்ளது அவன் பெருமையை ஓரமுடியுமோ, இந்த குணப் பெருமை போதாதோ அவனுக்கு நாம் ஆட்செய்ய,

**எம்பிராற்காட் செய்யாதே**

(1) நம் சிறுமையையோராத நம்மை ரக்ஷிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் நம் நித்ய ஸ்வாமிக்கு ஆட்செய்வதில் மிக்க ரஸமும், ஹிதமும் உண்டு. நம்மை ஸமமாகவும், தானேயாகவும் எண்ணுபவனுக்கு ஆட்செய்வதிலென்ன தடை? நம்மை ரக்ஷிப்பதில் அவனுக்குள்ள ஸம்ப்ரம்பத்தை 'ஆனை விருத்தாந்தத்தில் உலக மறியக் காட்டவில்லையோ?

**என்செய்வான் தோன்றினேனே**

(1) ஜோதிர் விபூதியிலிருந்து இந்த இருள்ஞாலத்திற்கு ஆனையைக் காக்க ஓடிவந்தார்,

(2) 'கஜேந்த்ரோ பகவத்ஸ்பர்சாத்விமுக்தோ அக்ஞானபந்தனாத், ப்ராப்தோ பகவதோ ரூபம் பீதவாஸா: சதுர்புஜ:' என்று சுகர் பாடியபடி ஆனை பகவத்ஸ்ரூபனாயிற்று இப்படித் தம் ஆச்ரிதரைத் தம்மைப் போலாக்கி பிரஹ்மணம் செய்யவே இங்கே அரங்கன் எழுந்தருளியிருப்பது. இவருக்காட்செய்து 'ஸ்வாதந்த்ர்யம அதுலம் ப்ராப்ய தேனைவஸஹமோததே' என்ற முக்தி ஸாம்ராஜ்யத்தை நாம் பெறலாமே அரங்கன் தோன்றினது ஆச்ரயியைப்

போலெல்லோரையும் நித்ய வீடு சேர்த்து தம் போலாக்கிவிட்ட என்றவதாரம் எதற்கே அறிகிலேன்.

ஊரிலேன் காணியில்லை
யுறவு மற்றொருவரில்லை
பாரில் நின்பாதமூலம்
பற்றிலேன் பரமமூர்த்தி
காரொளிவண்ணனே
கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர் களைகணம்மா
வரங்கமா நகருளானே (29)

**ஊரிலேன்**

(1) நாய்களோம் சிறுமையோராவென்று தம்முடைய சிறுமையைக் குறித்தார். பகவான் பெருமையையும் குறித்தார். 'க்வாஹம் தரித்ர: பாபீயாந் கவ க்ருஷ்ண; ஸ்ரீ நிகேதந: ப்ருஹ்ம பந்துரிதிஸ் மர்ஹம் பாஹுப்யாம்பரிரம்பித: அஹோ ப்ருஹ்மண்ய தேவஸ்யத்ருஷ்டா ப்ருஹ்மண்யதா மயா, யத்தரித்ரதமோலக்ஷ்மீமாச்லிஷ்டோ பிப்ரதோரஸி' என்று குசேலரும் தம் சிறுமையை ஓராது கண்ணன் லக்ஷ்மியை ஆலிங்கனம் செய்து அவள் வஸிக்கும் திருமார்பினால் தரித்ரதமனான தன்னை ஆலிங்கனம் செய்து மகிழ்ந்தாரே என்று ஈடுபட்டார். பாகவத கதையை ஆழ்வார் நினைத்துக் கண்ணனே என்று அரங்கனை அழைக்கிறார்.

(2) பகவத பிமதமான க்ஷேத்ரத்தில் பிறந்தால் அது ஓர் இருபைக்கு அவலம்பமாகும். பகவத் ஸம்பந்தம் பெற்ற ஊர்ப் பிறவியுள்ளதாக குறிப்பிட்டு ஒரு க்ஷேத்ர ஊரை எனக்கு சொல்லிக்கொள்ள இடமில்லை. பாரில் என்று பொதுவில் பூமியிலுள்ளவன் என்று தான் சொல்லிக் கொள்ளலாம். "விஷ்ணுனுவ்யபதேஷ்டவ்யமான ஓர் ஊர் எனக்கில்லை, திருவேங்கடமுடையான் திருவடிவாரம், பேரருளாளன் திருவடிவாரம் என்று விஷ்ணுவை முன்னிட்டு ஊர்ப் பேர் சொல்லிக்கொள்ளவேணும். எனக்கு அப்படிபட்ட ஊரில்லை. பாரில் வஸிப்பவன் என்று பொதுவில் தான் சொல்லவேணும்.

**காணியில்லை**

பகவத் கைங்கர்யக் காணியாக்ஷி உடையவம்சமுமில்லை, "திருப்பல்லாண்டு பாடுகையில் திருநந்தவனம்" என்று காணியாட்சிகளை பிள்ளை குறித்ததுமன்றி "தானத்தாலும், விலையாலும் அவற்றைப்பெற்று அவ்வூரிலே சென்று காணியாளுவதையுமருளினார். இதனாலக் கால்த்திலும் காணியாட்சிகளைத்தலைமுறை தலைமுறைபாயும் கிரயம் முதலியவை செய்தும் அனுபவித்த பிரகாரங்கள் தெரியவருகின்றன.

**உறவு மற்றொருவரில்லை**

(1) உறவில்லை, மற்றொருவர் சிநேகிகள் இல்லை என்றுபிள்ளை பந்துமித்தரர்கள் இல்லாதவனாய் என்று பொருள்.

(2) ஸர்வபந்துவாய், ஸர்வ ஸுஹ்ருத்தாய் உள்ள உம்மைத் தவிர மற்ற பந்துமித்ரரில்லை.

**பாரில்**

ஆபத்துக்களே நிரம்பியுள்ள இப்பூ மண்டலத்தில், இந்த கோரஸம்ஸார மண்டலத்தில் ஒரே கதியுண்டு அஃ எது வென்றால்;—



**நின்பாதமூலம்**

நின்பாதமூலமே, "பூ: பாதௌ உம்முடைய பாதமே பூமி. பாரில் வஸிக்கும் நான் உம்பாதமூலத்திலேயே வசிப்பதாகப் புருஷஸூக்தரீதியில் அனுஸந்திக்கவேணும். அவன் தான் என் ஊர். அவன்பாதம் என்பார்.

**பற்றிலேன்**

(1) உன்பாதமூலம் என்னைத் தாங்கிக் கொண்டேயிருக்கிறது. எனக்கோ அதில் பற்றுதலில்லை. என்னுடல் அதைப் பற்றியிருக்கிறது. என் சிந்தை அதைப் பற்றாமலே யிருக்கிறது "தேசாத் தேசமெங்கே ஓடினாலும் உன் பாத மூலத்தை விட்டு அகல முடியுமோ?

**பரமமூர்த்தி**

(1) அரங்கமா நகருளானாகிய நீ ஆதியஞ் சோதியான பரமமூர்த்தியே. பரவாஸுதேவனே.

(2) புருஷஸூக்தம் வர்ணிக்கும் விச்வபதியான பரமகாரணப்பொருள் நீரே.

**காரொளிவண்ணனே**

"சாந்தாகார" மென்கிற ஸஹஸ்ரநாம ஸ்தோத்ர ஞாபகமே ஓடுகிறது. மேகவர்ணம், மேகச்யாமம் என்று அங்குள்ளதை நினைக்கிறார்.

**கண்ணனே**

கிருஷ்ணனே அரங்கமா நகருளான்.

**கதறுகின்றேன்**

திரௌபதியைப் போல ஆக்ரந்தனம், ஆனையைப் போலப் பல இந்திரிய முதலைகள் என்னைப் பிடித்திழுத்து என் உயிரை வாங்குகின்றன.

**ஆருளர்களை கண்**

சரணமாவார் யாருளர்?

**அம்மா**

ஸர்வஸ்வாமியான.

**அரங்கமா நகருளானே**

"யாருளர் களை கண்" என்ற கேள்விக்கு அரங்கமா நகருளான் என்று பதில். அவரே அம்மா; ஸர்வ ஸ்வாமி. அரங்கமா நகருளானே களை கண் களை கண் மற்றிலேன்"

மனத்திலோர் தூய்மையில்லை
வாயிலோரின் சொலில்லை
சினத்தினாற் செற்றம் நோக்கித்
தீவிளிவிளிவண்வாளா
புனத்துழாய்மாலையானே
பொன்னி சூழ் திருவரங்கா
எனக்கினிக்கதியென்சொல்லாய்
என்னையாளுடையகோவே 30

**மனத்திலோர் தூய்மையில்லை**

(1) பகவானையடைய வேண்டிய பராங்கதிக்கு வழியைச் சோதித்து விளக்கவே இப்ரபந்தம்பாடுவது. மனம், வாக்கு, காயம் இவற்றின் சுத்தியைத் தேடவேணுமென்று பாடுபடுகிறார். அதுதான் பரமனையடைய கதி. அந்த கதியைப் பெறுவதற்கும் அவனையல்லால் வேறு கதியில்லையே. "என்னையாளுடையகோ நீதானே: 'எனக்கினி கதி யென் சொல்வாய் என்று உபாயஸித்திக்கும் கதியவனேயென்கிறார். அவனை அடைய உபாயத்திற்கு உபாயம் என்கிறார். ஸாதனத்திற்கும் ஸாதகனவனேயென்கிறார்.

(2) 'மனஸாது விசுத்தேந" என்கிற உபநிஷத்தை நினைத்து மனத்தில் சுத்திலேசமில்லையே ஓர் துளித் தூய்மையில்லையே. உத்க்ருஷ்டமானவிசுத்தி எப்படியுள்ளதாகும். ஓர் என்பதற்கு ஒருவிதமான, கிஞ்சித்தும் என்றும். உத்க்ரு

ஷ்டமான என்று இருபொருள்களையும் கொள்ளலாம். அத்யந்த சுத்தியென்னும் விசுத்தி ஓர் உத்க்ருஷ்ட சுத்தியாகும்.

(3) யோகஸூத்ரத்தை பதஞ்சலிபகவான் மனஸின் சுத்திக்காகவும், சரீர சுத்திக்காக ஆயுர்வேதத்தையும், வேதஸம்ஸ்க்ருத சுத்திக்காக மஹாபாஷ்யத்தையும் செய்தார் என்பர்.

**வாயிலோரின் சொலில்லை.**

(1)"ஸ்மரணம் கீர்த்தனம் விஷ்ணோர் வந்தனம் பாதஸேவனம அர்ச்சனம்......தாஸ்யம் ஸக்யமாத்ம நிவேதனம் இதி பும்ஸார்பிதா விஷ்ணோர் பக்திஸ் சேந்நவ லக்ஷணா என்று ப்ரஹ்லாதர் தம்தகப்பனுருக்குபதேசம் செய்தார். ஹிரண்யனுக்கு சாபங்கொடுத்த ஸனத்குமாராதி பாலரிஷிகள்விஷ்ணுவினுடைய உள் நினைவு கொஞ்சமிருக்கட்டும் என்று அனுமதித்திருந்தார்கள். அதையிட்டுப் ப்ரஹ்லாதரைக் கொஞ்சங் கொஞ்சம் அனுசயதாம் என்று அவன் கேட்பதும் ப்ரஹ்லாதர் அவனுக்கு விஷ்ணு பூஜாதிகளை உபதேசம் செய்வதாயுமிருந்தது. ஸ்மரணமென்று மனதினால் நினைப்பதைக் கூறினவுடனே கீர்த்தனமென்று கேட்போருக்கு மதுரமாய் பகவந்நாமங்களை வாயினால் பாடுவதைச் சொல்லுகிறார். பகவன்னாமங்கள்தான் ரஸமான இன் சொல்லென்று கருத்து இப்பாட்டின் முடிவில் பகவானைத்தவிர மற்றுமோர் கதியில்லை என்று அவனை கதியாக நினைப்பதேயாகும்.

(2) மனமறியாமல் நாம்பொருள் நினைக்காமலே யிப் பகவந்நாமமான ஓர் இன்சொல் வந்தாலும்போதும். அதுவுமில்லை "ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் வாஸ்தோபம் ஹேளனமேவவா வைகுண்ட நாமஸ்மரணம் அசேஷாக நாஶநம்" என்பர். நாம் நினையாதவாங் மாத்ரத்தில் வரும் பகவந்நாமத் திற்குப்பாபங்களைப் போக்க வலிமையுண்டு.

**சினத்தினால்**

நற்குணங்கள் இல்லை யில்லை யென்று சொல்வதோடு மட்டுமில்லாமல் கெட்ட குணமும் கெட்ட செய்கைகளுமேயெனக்கும் பொழுது போக்காயிருக்கிறது. கோபம் நமக்கு சத்ருவாகும். அந்தக் கோபமே யெனக்கு ஸ்வபாவமாயிற்று.

**செற்றம்நோக்கி**

பகைமை கண்களியே நெருப்புப் பொறி பறப்பதால் வெளியர்கும்படி பிறரை ஸத்ருக்களாகப்பார்த்து.

**தீவிளிவிளிவன்**

கண்ணால் தீவிழிவிழிப்பதோடல்லாமல் தீய சொற்களை நெருப் புத்தணல்களைப் போல கர்ண கடோரமாய் பொழிந்துகொண்டு.

**வாளா எனக்கு**

யாதொரு காரணமும் யாதொருப்ரயோஜனம் இல்லாமல் வீணே இப்படித் தீவிழி விழித்தும், தீவிளி விளித்தும் நான் போகிறேன். இப்படிப்பட்ட எனக்கு, மனதில் கோபாக்னியும், கண்ணில் தீப்பொறியும், வாக்கில் நெருப்புத் தணலுமாக இருந்து வருகிறது உம்மை நெருங்குவதற்குஇதெல்லாம் மிகவும் ப்ரதிபந்தகம். உமமை அடைய சாதனமில்லை. உம்மையடைய ப்ரதிபந்தகங்கள் கணக்கில்லை. இப்படியிருக்கும் எனக்கு.



**இனிக்கதி யென்சொல்லாய்**

(1) என்தீய ஸ்வபாவத்தை நான் மாற்றமாட்டேன். நானுக் மாற்ற முடியாது, எனக்கு நற்கதிவேணுமே அதற்குக்கதியென்ன நீயேதான் சொல்ல வேணும்.

**என்னை யாளுடையகோவே**

எனக்கு நீ யல்லவோ ராஜாவும், ரக்ஷகனும் உன்னுடைய ப்ரஜையல்லவோ நான் நான் எப்படியிருந்தாலென்ன? என்னை உனக்குத் தகுந்த ப்ரஜையாகச் செய்து கொள்ள வேண்டிய பொறுப்பு உன் பரம்தானே என்னை சிக்ஷித்துத் திருத்துவது என் கோவின் பரந்தானே.

(2) 'எனக்குக் கதியென் என்று கேட்டார். நீ சொல்லாய் என்று கேட்டார் அவர் சொல்லவில்லை தானே பதில் சொல்லுகிறார். "என்னையாளுடைய கோவே" என்கதி இவர் சொல்கிறார் இவர் சொல்லிய பின் அவர் மறுதளிக்கவில்லை மௌனமாகவேயிருக்கிறார் "அப்ரதிஷித்தம் அனுமதம்பவதி" என்கிற நியாயத்தை நீர் அறியீரோ நீரே என்கதியென்பதை நீர்ஒப்பின தாயிற்று என்று முடிக்கிறார்.

தொடரும்.

**ஸேவா-கோயில்!**

ஸேவா சந்தாதாரர்களிடத்தில் எமது வேண்டுகோள்:

ஸேவா என்பது சாதாரண பத்திரிகை மாத்திரமல்ல அனேக காரணங்களைக்கொண்டு நீங்கள் ஸேவாவை பொன்னே போல் பாவித்து மிக ஜாக்கிரதையுடன் ஸேவாவை வைத்துக்கொள்ள வேண்டும் எது எவ்வாறு இருப்பினும் ஒரு ஸேவாவை எடுத்துக் கொண்டால் எத்தனை எம்பெருமான்களுடைய தத்ரூபமான படங்கள் ஸேவையாகின்றன, ஆகையால் வாசித்து விஷயம் புரிந்துக்கொள்வது ஒரு புறமிருக்க இதை பொன்னேபோல பாவித்தலே எமக்கு கோடி செம்பொன் கொடுத்ததாகும், ஒரு தடவை ஒரு ஸஞ்சிகையை ஸேவித்தாலே ஸகல எம்பெருமான்களையும் ஸேவித்ததாகுமே!

*

**ஸேவா உங்களது நிதி**

சிறிய தொகை கொடுத்து பெரிய நிதியைப் பெற்ற பெரியோரிடத்தே பலவகையிலும் ஸேவாவை ஆதரிக்க வேண்டுமென்பதே எமது வேண்டுகோள்.

# முக்தாஹாரம்

1) செய்ய வேண்டியவை சில செய்யத் தகாதவை டல. செய்ய வேண்டியவற்றுள் சில்வற்றை செய்தாலும் ஏதோ அவ்வளவுதான் சக்திபோலும் என்று பிறர் நினைக்க இட்முண்டு. செய்யுத் தகாதவற்றைச் செய்யத் தக்கவையை விட்டது என்று ஒன்று, செய்யத்தகாததை செய்தது என்று மற்ருென்று. என்று குற்றம் இரட்டிப் பாகத்தானே யாகும்.

(2) நாணய மற்றவர்களுக்கு நேர்மையற்றவர்கள் தலைவர்களாகலாம். அவர்களால் நேர்மை நாணயங்கள் எப்படி நிலைநிறுத்தப்படும்! அழிக்கத் தோன்றியவர்கள் தானே அவர்கள்!

(3) ஸம்பிரதாயம் தெரியாதவர்கள் தெரிந்துக்கொள்வது நல்லது. தெரிந்தவர்கள் கூடிய வரையில் நடை முறையில் கொள்வது மிகவும் நல்லது. அதிலும் நல்லது அநுஷ்டிப்பவர்கள் பிறருக்குக் காண்பிப்பது.

(4) ஆட்டம் பார்ப்பது கொஞ்சம். அதை அபிநந்தனம் செய்வதுதான் அபாரம். இரண்டும் பகவத் விஷயமானல்தான் நல்லவர்களுக்கு நல்லது

(5) சண்டை எங்கும் உண்டு. அபிப்ராயபேதத்தினல் வரும் சச்சரவுகள் இருப்பதாலேயே மற்றவைகளைப் போல் ஸம்பிர[illegible] இகழத் தக்க

(6) பசி தீர்ந்தால் பகவானை வாழ்த்தலாம். இந்த எண்ணம் பசியாயிருக்கின்றபொழுதே உண்டாகுமானல் பசியும் தேவைதான்.

(7) மஞ்சள் பூசும் பெண்ணைப் பார்த்து மாவு பூசும் பெண் பரிஹாஸம் செய்யலாம். மாவு பூசும பெண்களைப் பரிஹாஸம் செய்யும் மஞ்சள் பூசும் மங்கைகளும் இக்கலியிலுமில்லாமலில்லை. மாவுமேனிமினுப்பைத் தருமானல் மஞ்சள் மனத்தூய்மையையும் தரும் என்னத் தடையில்லை.

(8) பெண்களுடைய பெருமையைப் பெண்கள் தெரிந்துக் கொண்டால் கண்ணியமாயிருக்கும். இக் காலத்திய கேவலமான நிலைகள் சில தவிர்க்கப்படலாம். இதை புருஷர்களும் அறிந்தால்தான் நலம் உண்டு.

(9) விலையில்லாமல் விணைகளை ஸம்பாதிக்கிருேம். விலையில்லாமல் வந்தவை விட்டுப் போனல் பாதகமில்லை. விலையில்லாத பரம்பொருளை அடைவதற்கு இதுவே முதல் எதிரியாய் நின்று விடுகிறதே! என் செய்வது?

(10) சரித்திரங்களைப் பார்த்தால் விசித்திரமா யிருக்கின்றது. தேசத்தில் மட்டுமின்றி மதங்களிலும் இது தலைதூக்கி நின்று குழப்பம் விளைவித்தால் இந்த விசித்திரத்தை எந்த சரித்திரத்தில் எழுதினல் போதும்!



# விதியின் அநீதி

ஸ்ரீகௌஸல்யா நந்தனசார்யர்

"நான் எவ்வளவோ அவனிடமிருந்து எதிர்பார்த்தேன்! கடைசியில் இப்படி யாகிவிட்டதே!" என்று ஒரு பெருமூச்சுடன் ஸ்ரீமான் ரங்கஸ்வாமி தன் ஸஹதர்மிணி ஸ்ரீமதி விஜயத்தைப் பார்த்து அங்கலாயித்தார். அப்பொழுது இரவு மணி 10½க்கு மேலிருக்கும். விஜயத்திற்கும் அவர்களுடைய ஒரே பிள்ளையான ராகவனுடைய அப்போதைய போக்கு மிகவும் மனதை அழுத்தியது. அவன் இன்னும் திரும்பி வீடுவந்து சேரவில்லை. 'வாழ்க்கை லக்ஷ்யம்' என்னும் திரைப் படத்திலிருந்து வாழ்க்கையின் லக்ஷியத்தை உணர்ந்து கொள்வதற்குச் சென்றிருந்த இவர்கள் வீடுதிரும்பி சாப்பிட்டு படுக்க வந்தாகிவிட்டது. "ஒரு சன்யாஸியினிடம் என்ன தானிருக்கிறது—ராகவன்' அத்தனை நாழிக்கும் வீடு வந்து சேராமலிருப்பதற்கு? M. Sc,. படித்த பிள்ளை இப்படி ஒரு பிச்சுவாக எங்கேயாவது ஆகுமோ? பச்சைக்கிளிபோல-கடைந்தெடுத்த தந்தம் போல-பூர்ணிமை சந்திரன்போல-மணம் வீசும் மல்லிகைபோல-கொஞ்சிக் குலுங்கும் தங்கக் கொடிபோல அவன் கையைப் பிடித்து அந்த வீட்டிற்கு நாட்டுப் பெண்ணாக வந்திருக்கும் அந்தப் பெண் யமுனாதான் அவனைக் கட்டிக்கொண்டு இனி என்ன செய்யும்? யமுனா படித்தவள். நாகரீகத்தில் ஊறினவள் புருஷனுடன் உல்லாஸமாக ஒரு ஸினிமாவுக்கு—ஒரு பீச்சுக்கு என்று இப்படி எல்லாம் போய் வர ஆசையிருக்காதா? **விதியே என்ன உன் அநீதி இது!**" என்றபடி முகவாயில் கையை வைத்து எண்ணமிட்டுக்கொண்டிருந்த விஜயத்தை மேலும் ஒரு உலுப்பு உலுப்பியது ரங்கஸ்வாமியின் வார்த்தை.

"ஒருவேளை இந்தப் பிள்ளையும் காவியையுடுத்திக் கொள்ளுமோ?" இதை விஜயம் தன்கணவரிடம் கேட்டாள். அப்பொழுது அவள்தொண்டை அடைத்துக்கொண்டது. கண்கள் நீரில் மூழ்கின. அவள் பார்வையில் யமுனா பரிதாபமாகத் தோன்றினாள்.

'என்னமோ, யார் கண்டது? சுருளைச் சுருளையாக அவன் முகத்துக்கு கிராப் எவ்வளவு அழகாக இருந்தது. அதை ஒரு நிமிஷத்தில் எடுத்துவிட்டானே! அவன் எதைத் தான் செய்ய மாட்டான்?' என்றார் ரங்கஸ்வாமி.

"ஊரில் எத்தனை பேர்கள் இல்லை? எல்லாரும் அந்த ஸ்வாமியைப் போய் பா[illegible]விட்டு

வரவில்லையா? இவனைப் போல வா எல்லாரும் அங்கேயே இப்படி மண்டிக் கிடக்கிறாள்? என்னமோ போனோம். பெரியவாளை சேவித்தோம் வந்தோம் என்பதோடு இருந்தால் தேவலை. இந்த பிள்ளை என்னடா என்றால் இப்படி விபரீதமா ஆரம்பிச்சுடுத்தே. கிராப்பை எடுத்ததும் எனக்கே அவன் முகத்தைப் பார்க்க சகிக்கலை அந்தப் பெண் மனஸுக்குள்ளே என்ன தவிக்கிறதோ?'

இப்படி விஜயம் பதில் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அடுத்த அறையிலிருந்துயமுனா விம்முவது கேட்கத் தொடங்கியது. அது விஜயத்தையும் ரங்கஸ்வாமியையும் ஒரு கலக்கு கலக்கியது. அதற்குமேல் அவர்களுக்குத் தங்கள் அறையில் இருப்புக்கொள்ளவில்லை. யமுனாவுக்குத் துணையாக அவள் அறையில் தங்கள்பெண் ராஜம் இருந்தாளே அவள் எங்கே போனாள்?' ஒருவேளை அவள்தன் அறைக்கே போய் விட்டாளோ?' என்று எண்ணியபடியே விஜயம் முன்னும் ரங்கஸ்வாமி அடுத்துமாக அடுத்த அறைக்கு விரைந்தனர்.

அங்கே அவர்கள் கண்ட காக்ஷி அவர்கள் வயிற்றில் என்னமோ செய்தது. யமுனாவின் கைகளில் ராகவன் அடுத்து இருக்கும் ஸன்யாஸியின் படம் பிடிக்கப்பட்டிருந்தது. கண்களிலிருந்துப் பெருகும் நீரையும் தாண்டிக்கொண்டு அவளுடைய பார்வை கையில் முக்கோலை ஏந்தி கருணை ததும்பும் முகப் பொலி[illegible] படத்தில் தத்ரூப[illegible] கொடுக்கும் அந்த யதிபதியின் பார்வையில் பரிதாபமாகச் சென்றிருந்தது. 'ஸ்வாமி, தங்களைப்போல் காவியுடை தரிக்கச்செய்யாமல் வாழ்க்கையை விரும்பும் இந்தப் பெண் பேதைக்கு இதன் அன்பரை இரங்கித் தந்தருளவேண்டும்' என்று கெஞ்சிக்கிடப்பதுபோலிருந்தது அப்பொழுது அவளுடைய அந்தப் பார்வை. அவள் பக்கத்தில் ஒன்றும் தோன்றாமல் ப்ரமித்து நின்றுக்கொண்டிருந்தாள் பெண் ராஜம். ஏதோ தகர்த விபரீதம் நேர்ந்திருக்கும் நிலையைக் காட்டிக்கொண்டிருந்தது அந்தஸன்னிவேசம். பெற்ற பாசம் ஒரு பக்கமும் இளம் பெண்ணின் கண்ணீர் மற்றொரு பக்கமுமாக விஜயத்தைஅப்பொழுது நிலை தடுமாறச்செய்தது. 'யமுனா என் கண்ணே, நீ அழாதே! விடியட்டும் நானே அந்த ஸ்வாமியிடம் போய் இது தருமமா? என்று கேட்கிறேன்!' என்ற வண்ணம் 'என்ன சரிதானே?' என்று தன் பதியின் பக்கம் விஜயம் தலையைத் திருப்பினாள்.

'அப்பொழுது நாளைப் பொழுது நல்ல பொழுதம்மா'' என்ற பதில் ரங்கஸ்வாமியின் பின் பக்கமிருந்து வந்தது. யமுனாவின் பார்வை அவ்விடத்தில் உடனே பாய்ந்தது. ரங்கஸ்வாமி சட்டென்று திரும்பி[illegible]ஜம் சுட்டுவிடுபவள் போல் அவ்விடத்தை நோக்கினாள். நெற்றியில் பளிச்சிடும் ஊர்த்வ புண்ட்ரத்துடன் அடக்கமும் அன்பும் ஒருங்கே ததும்ப அவர்கள் முன்பு ராகவன் நின்றுகொண்டிருந்தான்.

''அடேய், அடேய்!'' என்பதற்குமேல் படபடப்பில் வேறு



எதுவும் பேசமுடியாமல் தத்தளித்தார் தகப்பனார். 'நீ செய்த காரியம் ரொம்ப நன்னா இல்லை,' என்றுசொல்லி தன் மனத்தாங்கலை அள்ளி வீசினாள் தாயார். 'உன்பட்டை நாமமும்பஞ்சகச்சமும், ஐயோ, பார்க்க சகிக்கலை! அண்ணா இப்படியா இருந்தே நீ? நீயே போயி கண்ணாடியிலே பார்த்துக்கோ உன் அழகை!' என்று பொரிஞ்சுத் தள்ளினாள் தங்கை ராஜம். இவைகள் எல்லாவற்றாலும் எழுந்த மனவெழுச்சியில் தன் எதிரில் ஏதோ ஒரு விகார உருவம் நிற்பது போன்ற எண்ணத்தில் தலை குனிந்தாள் பத்தினி யமுனா.

இத்தனை களேபரத்திலும் ராகவன் சாந்தமே உருவாகத் தோன்றினான். ஆனால் அவன் மனதில் மட்டும் அன்று ஸ்வாமியின் ப்ரஸங்கத்தில் ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்தின் நிர்வேத பத்ததியிலுள்ள 18-வது ச்லோகம் விஷயமாக வெகு உருக்கமாக உபதேசிக்கப்பட்டது அப்பொழுது தோன்றி நின்றது. என்ன கனிவு! என்ன உருக்கம் அங்கே—:

தன்னை அண்டினவர்களை அனவரதமும் ரக்ஷிக்க ஸர்வலோக சரண்யன் சார்ங்கம் முதலிய ஆயுதங்களை ஸதா ஏந்தி நிற்கிறானாம்! அப்பேர் பட்டவனைத் தாங்கிக் கொண்டிருக்கும் அவனுடைய திவ்ய பாதுகைகள் அவனுக்கேற்றபடி அண்டினவர்களை ரக்ஷிப்பதில் அளவு கடந்த தயையினால் அமைந்த உருவமுள்ளதாயிருக்கிறதாம். ஸ்ரீ பாதுகைகள்! ஆஹா! இங்கே அவைகள் நம்மிடம் எப்படி தோன்றி நிற்கின்றன? ஸர்வலோக சரண்யனான ஸ்ரீய: பதியை அனவரதமும் ஹ்ருதய கமலத்தில் தாங்கிய வண்ணம் பரம கருணையினாலேயே தோன்றி நிற்கும் ஆசார்ய திவ்ய உருவத்திலல்லவோ அவைகள் ப்ரத்யக்ஷமாகி உள்ளன. அப்படி வந்துள்ள அவைகள் இந்த சேதனனை ஞானக் கண்ணைக் கொடுத்து ஸம்ரக்ஷிக்க ஸங்கல்பித்து விட்டனவாம். அதனால் இந்த சேதனன் அவைகளுடைய மார்க்கத்தில் வந்து விட்டானாம். அதனால் இவனுக்கு இதுவரையில் இருந்துவந்த ஸம்ஸார வாழ்க்கையின் போலித்தனம் நன்றாக மனதில் படிந்துவிட்டது. அதனால்

'மெய்யில் வாழ்க்கையை
மெய்யெனக் கொள்ளும்-இவ்
வையந்தன்னோடும்
கூடுவதில்லை யான்
ஐயனே! அரங்கா!
வென்றழைக்கின்றேன்
மையல் கொண்டொழிந்தேன்
என்தன் மாலுக்கே.
உண்டியே உடையே
உகந்தோடும் இம்
மண்டலத்தொடும் கூடுவதில்லை
யான்
அண்டவாணன் அரங்கன்
வன்பேய்முலை
உண்ட வாயன்தன் உன்மத்தன்
காண்மினே!

(பெருமாள் திருமொழி 3-1, 4.)

என்னும் கணக்கிலே போலி உலகப் போக்கு இவனுக்குப் பிடிக்கவில்லை. இவனுடைய போக்கும் உலகத்துக்குப் பிடிக்கவில்லை. ஐயோ! தென்னல் காற்று நரிகளுக்கு எப்பொழுதும் அருவெ[illegible]து. குளிர்ந்த கிர—

சந்திரனிடத்தில் தான் எத்தனை அருவெறுப்பு திருடர்களுக்கு?

ஸ்வாமி நடுவில் ஹாஸ்யமாக "இந்த காலத்தில் வெட்ட வெளிச்சத்திலேயே திருடர்கள் குஷாலாகத் திருடுகிறார்கள்" என்றார். எங்கும் ஒரே சிரிப்பு.

நல்ல காரியங்கள் செறிந்ததும் ஆசார்யர்கள் உகந்ததுமான நல்ல வழிகளில் கோணல் வழிகளில் செல்பவர்களுக்குத் தான் எப்பொழுதும் எத்தனை அருவெறுப்பு! சஞ்சல புத்தி உள்ளவர்களுக்குத் தான் தத்வ ஞானத்தில் எப்பொழுதும் எத்தனை அருவெறுப்பு!

ஆஹா! தெய்வத்தினுடைய அநீதி இப்படியல்லவோ இருக்கிறது!

ஐயோ! இது என்ன விதியின் அநீதி?"

ஒரு சிலகணம் ராகவன் இந்த எண்ணத்தில் ஈடுபட்டிருந்த போது அங்கு ஒருதனி அமைதி நிலவியது. ஆனால் அது அதிக நேரம் நிலைத்திருக்காதபடி படபடப்பு ஒருவிதமாக அடங்கிய ரங்கஸ்வாமி செய்தார்.

"டேய், "வாழ்க்கையின் லக்ஷியத்தை"ப்போய் பாருடா! படமா அது? உன்னைப் போன்றவர்கள் படிக்கவேண்டிய பாடமடா அது! போய்ப் பார்—கிளிபோல்கிடைத்திருக்கும் இந்தப் பெண்ணுடன் உன் படிப்புக்கும் உனக்குப் புண்ணியத்தினால் கிடைத்திருக்கும் வீடுவாசல் தோட்டம் சொத்து சுதந்திரம் எல்லாவற்றிற்கும் ஏற்றபடி நீ நடத்தவேண்டிய வாழ்க்கை [illegible]ன்னபடி இருக்க வே[illegible] அப்போது புரியுமடா புரியும்!" என்று கர்ஜித்தார் அவர்.

ராகவன் சிறு வயது முதற்கொண்டே அறிவு உள்ளவர்களின் சிந்தனையை ஆகர்ஷிக்கும் இந்த விசித்திர உலக அமைப்பின் தத்துவத்தை அறிந்துக்கொள்வதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தவன். அதனாலேயே அவன் விஞ்ஞான சாஸ்திரத்தில் இறங்கி M.Sc.பட்டம் பெற்றான். ஆனாலும் அவன் உள்ளத்தில் தான் அறிந்துக்கொள்ள வேண்டிய உண்மைக்கும் தனக்கும் நினைக்கமுடியாததொரு தூரம் இருப்பதாகவே தோன்றி வந்தது. அவன் M.Sc. பட்டத்தால் பெருமை கொள்ளவில்லை! அந்த நிலையில் இறைவனை இதயத்தில் கொண்ட இந்த யதீச்வரர் அவ்வூருக்கு வந்து சேர்ந்தார், எல்லோரையும் போல இவனும், அவருடைய உபதேச மொழிகளைக் கேட்க ஒரு தினம் அவ்விடம் போயிருந்தான். அன்று சொல்லி வைத்தது போல் ஸ்வாமியின் உபதேசத்தின் பொழுது.

"தத் தூரே தத்வதந்திகே" "எங்கும் நிறைந்த அப்பொருள் வெகு தூரத்திலே இருக்கிறது. அப்படியே வெகு அருகிலும் இருக்கிறது" என்னும் ஈசாவாஸ்ய உபநிஷத்தின் விளக்கம் நடந்து கொண்டிருந்தது.

"எங்கும் நிறைந்த பொருள் வெகு தூரத்தில் இருப்பதாவது? வெகு அருகில் இருப்பதாவது?" ராகவன் யோசனை பறந்தது. அப்பொழுது ஸ்வாமி சௌனகர் ஸ்வாநுபவம் கொண்டு உதவி விளக்கத்தை



உடனே தந்தார். அதாவது- 'போலி வாழ்க்கைப் போக்குவதில் ஈடுபட்டவர்களும் அதனாலேயே கோவிந்தனிடம் மனம் செல்லாதவர்களுமானவர்களுக்கு அப் பரப் பிரும்மம் அருகிலிருந்தும் பார்க்கப்படாமையினாலே நினைக்க முடியாத தூரத்திலிருக்கிறது" என்று.

"ஆஹா! அருகிலிருந்தும் எதைப் பார்க்க வேண்டுமோ, அதைப் பார்க்கவில்லை. வேறு எதையோ பார்க்கிறோமே!" என்று ராகவன் உள்ளம் உடனே கரைந்தது, அந்த சமயம் ஸ்வாமியின் வாக்கிலிருந்து 'ஆராமம் அஸ்ய பச்யந்தி, நதம் பச்யதி கச்சன' என்னும் ப்ருஹதாரண்யக உபநிஷத் வாக்யம் வெளிப்பட்டது. அதை அடுத்து 'என்ன விந்தை! ஒவ்வொரு ஜீவனும் தோட்டத்தைப் பார்க்கிறான்; வீட்டைப் பார்க்கிறான்! மக்களைப் பார்க்கிறான்! அழகிய மனைவியைப் பார்க்கிறான்! அடா! அடா! என்று பிரமிக்கிறானே? இப்படி இவைகளைக் கண்டு ப்ரமிக்கிறோமே! அந்த நாம் யார்? என்று தன்னை எங்காவது உள்ளபடி பார்க்கிறானா? அதுவே இல்லையே.

'உம்!' என்றார் ஸ்வாமி உணர்ச்சி ததும்ப.

'இவன் எங்கே பரமனைப்பார்க்கப் போகிறான்?' என்று பேசினார். ராகவன் கண்களில் நீர் ததும்பியது. மறுநாள் அந்த ஸ்வாமியை சரணமடைந்தான். தன்னுடைய அகக் கண்களைத் திறக்கவேண்டினான். ஸ்வாமி கிருபை புரிந்தார். 'அப்பா!' என்றார், 'இந்த சரீரம் ப்ரும்ம புரம் என்பதாக உபநிஷத் அன்னை இதை அழைக்கிறாள். இதில் இதய கமலம் அவன் மாளிகையாம். ஆக இதை அவன் உகக்கும்வகையில் வைத்துக்கொள்ள வேண்டுமடா, குழந்தே!' என்றார். 'எப்படி அவன் உகப்பு வரும்?' என்று ராகவன் வினவினான். 'தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யா கார்ய வ்யவஸ்திதௌ ஞாத்வா சாஸ்த்ர விதானோக்தம் கர்ம கர்த்துமிஹார்ஹஸி' என்று ஸ்ரீ கீதையின் 16வது அத்தியாயத்தின் கடைசியான 24வது ச்லோகத்தை எடுத்து, அவன் வகுத்த சாஸ்திரப்படி நடந்து 'மாமேகம் சரணம் வ்ரஜ' என்று அவனையே சரணமடைவதே அவன் உகப்புக்கு உகந்தது என்று விளக்கினார். அது முதற்கொண்டு ராகவன் பழைய ராகவனாக இல்லை. ஸ்வாமி காட்டின வழியில் சென்றான். அவர் மூலமாக சரண்யனை சரணமடைந்தான். அதோடு மட்டுமிலலை, தன்னைச் சேர்ந்தவர்கள் எல்லோருடைய க்ஷேமத்தையும் சரண்ய தம்பதிகளினிடம் அந்த ஸ்வாமியின் க்ருபை கொண்டு வேண்டினான் ஆகையினால் அவர்களின் நற்கதியைப் பற்றி அவன் கவலை கொள்ளவில்லை. ஆனாலும் நல்ல வழியில் அவர்கள காட்டும் வெறுப்பை நினைத்து விதியின் அநீதியையே நொந்துக் கொண்டான்.

அப்படிப்பட்ட ராகவன் தன்னை 'வாழ்க்கை லக்ஷ்யத்தை பார்த்து வாழ்க்கை லக்ஷ்யத்தை புறிந்துக் கொள்ளச் சொன்ன தன் தகப்பனாரைப் பரிதாபமாகப் பார்த்தான். அடுத்து தன்

தாயாரையும்பார்த்தான். உடனே அன்பான மனைவியைப் பார்த்தான். அந்தப் பார்வையிலே— 'கண்ணன் உகந்து லீலை செய்த அன்னை யமுனையின் அழகான பெயர் உனக்கு வைத்திருக்கிறது. அந்த யமுனை போல் நீயும் அவன் உகக்கும் அன்பு உருவமாக இருக்கமாட்டாயா?' என்று கேட்பதுபோல் தோன்றியது. உடனே எல்லோரையும் பார்த்துப் பேசினான்.

'வாழ்க்கையின் லக்ஷியம் நிலையில்லா ததான இந்த வெளி உலக போகங்களிலே எங்கே இருக்கிறது? எவனோ காசு திரட்ட ஆள்களை நடிக்கவைத்து எடுத்த திரைப் படத்தின் மூலமாகவோ அது தெரியப் போகிறது?

அப்பா! வாழ்க்கை லக்ஷியம் இன்னதென்பதை மஹான்கள் காட்டியிருக்கிறார்கள். என் கடமைகளை சரண்யன் உகப்புக்குச் செய்து வருவதைத் தவறமாட்டேன், நீங்கள் எல்லோரும் அவன் வாழும் திவ்ய உருவங்கள். உங்கள் எல்லோரையும் மிகவும் மதிக்கிறேன், நீங்களும் ஸ்வாமியினிடம் வரவேண்டுமென்று வேண்டுகிறேன், அப்பொழுது உங்கள் கண்களும் ஒளி வீசும்.' என்றான்.

உடனே யமுனாவை நோக்கி— 'யமுனா! உன்னை ஒருபொழுதும் நான் கைவிடமாட்டேன். இது அவன் காட்டிய வழி, நீயும் அவன் உகந்து வாழும் உயர்ந்த உருவமல்லவா? இந்த வெளி மயக்கத்தில் நீ மயங்காதே. உன் உள்ளத்திலும் எனக்குள்ளும் எவருடைய உள்ளத்திலும் அவன் — பேரழகன் — வாழும் அந்த அழகைப்பார். அதுதான் வாழ்க்கையின் லக்ஷியம்.' என்றான்.

அடுத்து தன் தாயாரை நோக்கினான்—'அம்மா, நீ சொன்னபடி நாளை ஸ்வாமியினிடம் வா. உன் மனது சாந்தியாகும்' என்றான்.

தங்கையை நோக்கி—'ராஜம்— இதுவரையில் இந்த உடம்பு அவன் வாழும் இடம் என்று தெரியாமல் இதைக் கண்டபடி வைத்திருந்தேன். இபபொழுது கண் வந்தது, ஆனால் இது உனக்குப்புரியாது: இப்பொழுது நீயும் அம் மஹானுடைய தரிசனம் பெற்றால் புரிந்து கொள்வாய்' என்றான்.

அந்த சமயம் யமுனா ஏதோ நிம்மதி யடைந்தவள் போல் 'நீங்கள் என்னை விடாமல் இருந்தால் அதுவே போதும்' என்றாள்.

'உன்னை ஒரு பொழுதும் விடமாட்டேன்' என்று ராகவனிடமிருந்து பதில் வந்தது.

மற்றவர்கள் வேறு பேச வழியில்லாமல் நகர்ந்தனர்.

நன்றி

ஒரு சில காரணங்களினால் ஏற்பட்ட ஒரு சில குற்றங்களை சில மஹான்கள் எடுத்துக் காட்டியதற்கு பலவகையிலும் நன்றி செலுத்துவது அடியோம் கடமை.



# ஸ்ரீ வைஷ்ணவ பரிபாஷைகள்

எடுத்த எடுப்பிலே வார்த்தைகள் நன்றாக அமைந்தால் மேலும்கேட்க ஆவல் உண்டாகிறது. முகம் உண்டு பேசுவோம் என்றால் முகத்தைப் பார்த்து ஒருத்தரும் நிற்பாரிலர். அடுக்கடுக்காய் சொற்களை அடுக்குவதும் ஓர் வேடிக்கைதான். அதிலும் அனேகருக்கு அபிருசி யுண்டு. பொருளடக்கம் கொண்ட சொல்லடுக்குகள் அடுத்தடுத்து வரினும் அலுப்புத் தட்டுவதில்லை.

இத்தனையும் நாம் சொல்லக்காரணம் இல்லாமலில்லை. பொருளடக்கம் கொண்ட சொல்லடுக்குகளால் மட்டும் திட்டமாய் பயன் ஏற்பட்டுவிடாது. சுவை ததும்பும் சொற்களால் தான் பேச்சில் சுவை யுண்டாகும். ஒரு சிலர் பேசத் துடங்கினால் ஆரம்பித்து விட்டாரே எப்பொழுதுதான் முடிப்பரோ என்று முதலிலேயே தோன்றுவது இயற்கையாய் காணப்பெறுகிறது. அவர் சொல்லும் விஷயம் சிறியதா? அல்லது அவர் கூறிய சப்தங்களா? இங்கு எதைச் சொன்னாலும் ஒன்று மாத்திரம்வற்புறுத்திக் கூறவேண்டுமென்று தோன்றுகிறது.

நாம் சொல்வதை திட்டமாய்ச் சொல்ல வேண்டும். திடமாய்ச் சொல்லவேண்டும், நல்ல சொற்களால் சொல்லவேண்டும். அப்பொழுது யாருக்கும் அலுப்புத் தட்டுவதில்லை. பெரியோர் சென்ற பாணியிற்சென்றால் சிறிய விஷயமும் சீர்மையுற்று விளங்கும். பெரிய விஷயங்களும் எளியனவாகும்.

விருப்பும் வெறுப்பும் வாயிலேயுளது. பிறரைப் புகழ்ந்தால் விரும்புவர், இகழ்ந்தால் வெறுப்பர். புகழ்ச்சியும் இகழ்ச்சியும் வாயின் செய்கைகளாகின்றன. நல்ல வார்த்தைகள் சொல்லவேண்டும். நாலயலாரும் மகிழவேண்டும். இதுதான் நியதி.

இனி நமது பரிபாஷைகளுக்கு வருவோம், பரிபாஷைகள் என்றால் பரிஷ்க்ருதமான வார்த்தைகள் என்று வைத்துக் கொள்வோம். இதை இப்படித்தான் சொல்லவேண்டுமென்று பெரியோர் வியவஸ்தை செய்திருப்பரேல் அது பரிஷ்காரமாம். எதையும் நன்றாகச் செய்யவேண்டுமென்று ஆசையுள்ளவர்களுக்கு பரிஷ்காரமாய் பெரியோர் சொல்லிவந்த பாணிதானே பிடிக்கும்!

சில ஸமயத்தில் சில வார்த்தைகளைச் சொல்லி விடுகிறோம். ஆனால் அதன் பொருள் நமக்கு விளங்குவதில்லை. விளங்குவதில்லையே என்று விட்டு விடுவதுமில்லை. பிறர் கேட்காமலிருக்கும் வரை யோகம் தான். ஆனால் அனைவருக்கும் அப்படியே இருக்க முடிகின்றதா? தெரிந்துக் கொண்டால் தைரியமாய் உபயோகிக்கலாம் என்று தோன்றுமானால் அதைத்தான் விளக்குவது ஸேவா லக்ஷியம்.

## ஸ்வாமி

பரிஷ்க்ருதமான வார்த்தையில் இது ஒன்று. சாதாரணமாய் பிரயோகிக்கப்படுவது தானே இது. இதில் என்ன விசேஷம் என்று நினைக்கலாம். இப்படி நினைப்பதால்தான் இங்கே எழுத வந்தது.

பெரியவாளைப் பேசுமிடத்தில் பல வகையாய்ச் சொல்லக் காண்கிறோம். ஒரு சிலர் பெயரையே சொல்லி விடுகின்றனர். மற்றும் சிலர் "பெரியவாள் சொன்னாள்" என்றும், "அந்த மஹான் சொன்னார்" என்னுமிப்பாணிகளிலே பேசுவர். பெயரைச்சொல்வது ஒன்று குற்றமாகலாமே யொழிய மற்ற முறைகளிற்சொல்வது குற்றமாகாது. ஆயினும் நன்றாகச் சொல்லவேண்டுமென்றால் அங்கு இந்த ஸ்வாமி ஸாதித்தார் என்று சொல்

வதுதான் அழகு. வெறும் அய்யங்கார் என்று நிறுத்தாமல் அய்யங்கார் ஸ்வாமி என்ருல் சொல்பவர் சொல்லப்படுபவர் இருவரும் வைதிகர்கள் என்று தோன்றும் ஸர்வேச்வரனும் "ஜகத்துக்கு ஸ்வாமி" என்றழைக்கப்படுகிருன்: பெரிய ஞாதாக்களை ஸ்வாமிகள் என்றே சொல்கிரேும். மற்றவரும் ஆசாரிய ஸ்வாமிகள் சொன்ருள் என்று பெரியோரைச்சொல்வர்.

இப் பரிஷ்க்ருதமான வைஷ்ணவ வழக்கத்தின் அழகு எங்கும் பரவி நிற்கின்றது. எங்கள் ஸ்வாமி உங்கள் ஸ்வாமி நம் ஸ்வாமி என்றெல்லாம் சொல்கிரேும். ஒரு ஸமயத்தில் அடியேன் ஒரு ஸ்வாமியினிடத்தில் ஏதோ சில தேசிக வைபவங்களைச் சொல்லிக் கொண்டிருந்தேன். அப்பொழுது தேசிகன் ஸாதித்தார் என்று சொன்னபொழுது அந்த ஸ்வாமி குறுக்கிட்டு **ஸ்வாமி தேசிகன்** என்று சொல்ல வேண்டும் என்று சிக்ஷித்தார். ஸ்வாமிகளுக்கெல்லாம் ஸ்வாமியான தேசிகனை ஸ்வாமி தேசிகன் என்று சொல்லாமலிருக்கலாமா என்று தோன்றியது. அந்நிலையில் ஒப்புக்கொண்டேன்.

நிற்க பெயரைச்சொல்ல வேண்டுமாஞல் அந்த இடங்களில் ஸ்வாமி பதத்தைச் சேர்த்துச் சொல்வது சாலவும் நன்று. இந்த ஸ்வாமி சப்தத்தின் பொருள் தான் யாது? இதைத் |தெரிந்துக் கொண்டால் தேவலை என்ருல் இதைச் சொல்வோம்.

ஸ்வாமி என்பதற்கு ஸொத்தை உடையவர் என்று பொருள். இங்கு சில ப்ரயோகங்களை கவனிக்கவேண்டும், க்ருஹஸ்வாமி என்ருல் க்ருஹத்துக்கு யஜமானன், அல்லது அதிகாரி என்னும் வகையில் பொருள்தேரும், அவர்களுடைய ஸொத்து ஞானம் அநுஷ்டானம் வைராக்யம் முதலியன. அவர்களைச் சேர்ந்ததெல்லாம் அவர்களுடைய ஸொத்துக்களே.

நாமும் அவர்களுடைய ஸொத்துக்களே. உலகெல்லாம் அவர்களுடைய ஸொத்துக்கள். அவர்களுடைய ஸொத்துக்களில் அவர்ளுக்கிருக்கும் உரிமை அதிசயமானது. உரிமைகளுக்கேயொழிய வேறென்றும் அவர்கள் காணவியலாது. ஸ்வாமிகளாய் எழுந்தருளியிருக்கலாம்.

ஒருவரை ஸ்வாமி என்பதால் இவ்வளவு பெருமையை அவர்களுக்கு அளிக்கிரேும். இதைக் கேட்டு என்னை ஒருவருக்கு அடிமையாக்கிக் கொள்வேனே என்று வேறுவிதமாக எண்ணி ஸ்வாமி என்று அழைக்காமல் விடப் போகின்றீர்கள். நாம் இம்மாதிரி சொல்வதால் நம்மை யறியாமலேயே பிறரை கௌரவிக்கின்ரேும், புண்ணியத்தையும் ஸம்பாதித்துக் கொள்கிரேும்.

எனக்கு ஒருவர்தான் ஸ்வாமி நான் ஏன் எல்லாரையும் ஸ்வாமி என்றழைக்கவேண்டும்? என்று நினைக்கலாம். இதைத் தான் கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேணும். நமது ஆசாரியர்களைப் போல பாகவதர்களும் நமக்கு போற்றத் தக்கவர்களே. அவர்களை ஸ்வாமிகள் என்றுதான் அழைக்க வேண்டும். அய்யங்கார் சொன்ஞர் ஆசாரியர் சொன்ஞர் என்பதைக் காட்டிலும் ஸ்வாமி ஸாதித்தார் என்ருல் பரிஷ்க்ருதமாயிருக்கும்.

எம்மை விற்கவும் பெறுவார்களே என்ருர் ஆழ்வார். இதையே க்ரயவிக்ரய உரிமைபெற்றுவிளங்குவர் என்ருர் ஸ்வாமி தேசிகன்,

ஆக நாம் பெரியவாளை **ஸ்வாமி என்றழைப்பது மிகவும் நல்லது.**




## ஆசாரம்

எதைச் சொன்ஞலும் பிடிக்கிறது இந்த ஆசாரத்தைப் பற்றிச் சொன்ஞல் ஏனே அருவருப்பு ஏற்படுகிறது. இதன் காரணம் தான் என்ன? நல்லது பிடிப்பதில்லை.

ஒரு சிலர் தம்மை அறிஞர் என்று எண்ணி இறுமாந்து ஆசாரத்தையும் ஆசாரமுடையவர்களையும் காரசாரமாய்த் தாக்கி ஆரவாரிக்கின்றனர். அவர்களின். அலாதியான ஏமாற்றத்தை எண்ணிஞல் நம் மனம் அங்கலாய்க்கிறது. ஏனே இத்தகைய க்ரஹசாரம் இவர்களுக்கு ஆசார விஷயத்தில் விசாரத்தை முறியச்செய்கின்றது!

புறம்பானவர்களைப் பேசிப் பொழுதைப் போக்குதல் நம் பண்பன்று. அவர்கள் ஒரு புறமாயிருக்கட்டும். அறத்தவர்களிலும் ஆசாரத்தைப் பேசி புணர்த்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆசாரம் அவசியந்தாஞ என்று ஒரு சிலர் சிந்திக்கின்றனர். அநாசாரம் மலிந்த காலத்தில் ஆசாரத்துக்கு இந்நிலையல்லால் வேறு வழி ஏது?

ஆசாரம் ஏனே குமட்டுகின்றது. விளக்கெண்ணெய்க் குமட்டலும் அடங்கிவிட்டது. ஆசாரக்குமட்டல் அளவு மீறி வளர்கிறது!

எதுவும் புதிராஞல் இதமும் புரியாது. எதையும் விளக்கிஞல் எங்கும் குழப்பமில்லை. ஆதலால் ஆராய்ச்சி மேடையில் ஆசாரம் நிற்கின்றது. ஆசாரம் என்பதுதான் என்ன? ஆசாரம் அவசியந்தாஞ? ஆசாரத்துக்கு தனிப் பெருமைகள் ஏதாவதுண்டா? என்பதையெல்லாம் விசாரித்துப் பார்ப்போம்: சாதாரண முறையில் நாம் ஆராய்வோம்.

ஆசாரம் என்ருல் செய்கை வழக்கம் நடத்தை என்று சொல்லலாம். இவைகள் பொதுவாகக் கூறிஞலும் ஒரு சிலருடைய நல்ல செய்கை நல்ல வழக்கம் அல்லது நல்ல நடத்தை இதைத்தான் குறிப்பது ஆசாரம் என்பது. நல்ல வாசனைக்கும் கெட்ட நாற்றத்திற்கும் வாஸனை என்ற சொல் பொதுவாயிருப்பினும் நல்ல வாஸனையில் மட்டுமே வாஸனை என்பது பிரயோகிப்பது உண்டன்ரே! அதுவே போல் ஆசாரம் என்பது நல்லோர் நடத்தையைப் பேசும். நல்லோர் நடத்தைக்குப் புறம்பானவை அநாசாரம் எனப்படுகின்றன. செய்கைகளால் நல்லவர்களும் நல்லவர்களால் செய்கைகளும் பெருமை பெறுவது இயற்கை.

செய்கைகளில் நன்மை தீமைகளை அவற்றின் பயன்களைக்கொண்டு கூறலாம். **ஆசாரம் என்பது எவ்வகையிலும் நன்மை பயப்பது** என்பதே நன்று விசாரித்து இங்கே கூறப்படுகின்றது.

இதையே முனிவர்கள் சிறப்பித்துக்கூறினர். ஆசாரத்துக்கோர் தனிப்பெருமை யளித்தனர், சாஸ்திரங்கள் ஏகோபித்து ஒன்றைச் சொல்லுமானால் அது இதுவாகத்தான் இருக்கும் வேதம் ஓதியது, புராணங்கள் விரித்தன. ஸ்ம்ருதிகள் நினைத்தன. காவியங்களும் கணி சித்தன, ஆசாரியர்களும் அறைந்தனர்.

இன்று நாம் பல வகையில் உலக நிலையைப் பார்க்கிறோம், ஒருவன் ஏழை ஒருவன் பணக்காரன், ஒருவன் அறிவாளி-ஒருவன் அறிவிலி, ஒருவன் ஸுகி ஒருவன் துக்கி ஒருவன் நோயாளி-ஒருவன் வைத்யன். அன்றியும், ஆண்-பெண்-மிருகம்-பக்ஷி-ஸ்தாவரங்கள்-அதனுடைய பாகுபாடுகள் ஆகிய வேற்றுமைகளைப் பார்க்கிறபொழுது ஏன் இத்தனை வேற்றுமைகள்? என்று எண்ணுகிறோம். வெளிப்படையான எந்தக் காரணமும் சொல்ல இயலுவதில்லை. ஆனால் இந்த நிலைகளுக்குக் காரணம் தான் இல்லாமலிருக்குமோ? இதைத் தான் நமது அறிஞர்கள் வினையென்றும், கர்மங்கள் என்றும் அறைவர்.

ஒருவன் நன்றாக இருந்தால் நல்ல கர்மங்களைச் செய்திருக்கிறான் என்கிறோம். அந்த நல்ல கர்மங்களே ஆசாரம் எனப்படுகிறது. உடல் தூய்மை யுற்றால் தான் உள்ளம் தூய்மையுறும். உடல் தூய்மையுறுவதற்கு உணவுத் தூய்மை இன்றியமையாதது. இதெல்லாம் தான் ஆசாரம் எனப்படுகிறது. ஆசாரமாயிருப்பவனுக்குத் தீய கர்மங்கள் செய்ய நேரம் நேரிடுவதுல்லை. தீவினையண்டாத அவன் ஜன்ம ஜன்மாந்தரங்களிலும் இன்பத்தோடு இருப்பான். இது பலர் காணும் உண்மையும் உறுதியும். ஆசாரம் சிறந்த ப்ரமாணமாகின்றது. ஸ்வதந்திர ப்ரமாணம் வேதம், அதைப் பின் பற்றுவதால் ஸ்ம்ருதி ப்ரமாணமாகின்றது. அவ்விரண்டையும் பின் பற்றுவதால் ஆசாரம் ப்ரமாணமாகின்றது. நம் போலியர்க்கு நெருங்கி உபகரிப்பது இதுவே: நீ ஏன் இப்படிச் செய்கிறாய் என்று ஒருவன் நம்மைக் கேட்டால் பெரியோர்கள் செய்து வந்தபடியால் என்று சொல்லிவிட்டால் அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள் என்ற கேள்வி உடனே எழுவதற்கிடமில்லை. அவ்வாறில்லாமல் ஏதாவது புத்தகத்தைக் காட்ட ஆரம்பித்தால் யுக்திகளைக்கொண்டு மயக்கி விடுவர். இதில் இந்த தொல்லைகள் ஏதும் கிடையாது.

ஆசாரத்தில் தான் அறம் நிற்கின்றது. ஆசாரமில்லையேல் அறமில்லை. அறமில்லையேல் பொருள் இன்பம் கிடையாது. வீடு (மோக்ஷம்) பற்றி நினைக்கவும் இடமுண்டோ?

ஆயுர்வேதம் நோயற்று வாழவழி வகுக்க வந்தது. அது சொல்லும் வகையைக் கேட்டால் நாளும் வாழலாம், அங்கே முதன் முதலில் நோய் வராமல் முன் கூட்டியே நடந்து கொள்ளவேண்டு மென்று எச்சரிக்குமிடத்து ஆசாரத்தைப் பற்றியே பேசுகிறது. அதற்காக ஒரு அத்யாயம் சொல்லிற்று அஷ்டாங்கஹ்ருதயம். ஆசாரத்தோடிருப்பவன் ஆயுள் ஆரோக்யம் ஐச்வர்யம் யசஸ், ஸகல லோகங்களையும் அடைவான் என்று 48 சுலோகங்களால் சொல்லிற்று. ஆயுர்வேதத்திலும் ஆசாரத்தைப் பேசும் தர்ம சாஸ்திரம்முதலிடம் பெறுகின்றது. ஆசாரத்தைக் கண்ணாய்ப் பாவிக்கின்றது ஜோதிஷம்.

ஆசார ப்ரதமோ தர்ம: என்றார் வ்யாஸர். ஆசாரமுடையவன் ஆராதிக்க பெருமாள் பெருமிதங் கொள்ளும். அவனை மகிழ்விக்க வேறுவழியில்லை, என்கின்றன வசனங்கள் ஆறங்கங்களோடு வேதங்களை ஓதியவனாயிருந்தாலும் ஆசாரமில்லையேல் வேதங்களும் அவனைப் புனிதமாக்கா என்பர். ஆசாரங்களை



விளக்க வந்தவையே க்ருஹ்ய தர்ம ஸூத்திரங்கள். ஆசாரமுள்ளவர்கள் சிஷ்டர்கள் எனப்படுவர்: ஆசாரோ தர்மபாலனம் என்றும் கூறுவர்.

நான் ஞானி எனக்கு ஆசாரம் தேவை இல்லை என்று நினைப்பது மிகத் தவறு. கர்மயோகமில்லையேல் ஞானயோகம் இல்லை என்றது கீதை. கர்மங்களைச் செய்துக்கொண்டே நூறு வயது வாழ விரும்பு என்றது ஈசாவாஸ்யம். பகவானும் யத்யதாசரதி ச்ரேஷ்ட: என்றார். தான் ஆசாரமில்லாமலிருந்தால் தானே ஸங்கரத்துக்குக் காரணமாவேன் என்றார் கீதையில், அங்கு ஸங்கரஸ்யச கர்த்தா ஸ்யாம் என்கிற கீதைக்கு சாஸ்த்ரீயாசாரானனுபாலநாத் ஸர்வேஷாம் சிஷ்டகுலாநாம் ஸங்கரஸ்யச கர்த்தா ஸ்யாம், என்று பாஷ்யம், 'ஆசார்யர்களுக்கு தான் ஆசரிப்பதோடு பிறரையும் ஆசாரத்தில் இருக்கச் செய்வது தான் பெருமை? என்று மனுஸ்ம்ருதி கூறிற்று. ஸாதுவ்ருத்யா ஸமேதம் என்றது ந்யாஸ விம்சதி:

ஆகையினால் ஆசாரமுள்ளவர்களே எத்தகையிலும் போற்றத் தக்கவர். அவர்களுக்கே எல்லாம். அவர்களே நல் வாழ்வு வாழப் பிறந்தவர்கள். அவர்களுக்கு தினைத்தனையும் தீவினையில்லை என்பது கல்வெட்டு. ஆசாரமில்லையெல் அவர்களுக்கு நரக ஸாம்ராஜ்யத்தில் ஒரு குறையுமில்லை. ஆசாரத்தைஎண்ணி அச்சப்பட வேண்டாம். ஆசாரமாயிருக்கவேண்டு மென்பதினாலேயே ஸன்னியாஸியாகத் தான் வேண்டும் என்றும் சப்புக் கொட்ட வேண்டாம். எந்த நிலையிலும் ஆசாரமாயிருக்கமுடியும். எந்த இடத்திலும் ஆசாரமாயிருக்க முடியும்.

முதலில் ஆசாரமாயிருப்பவர்களைக் கொண்டாடுவோம். கௌரவிப்போம். பிறகு ஆசாரமாயிருக்க முயலுவோம்.

ஸ்ரீ ஸூக்தி ஸேவா

# மதிப்புரை

**ஸ்ரீ மஹாலக்ஷ்மியஷ்டோத்தர சத நாமஸ்தோத்ரம் (க்ரந்தம் நாகரம் தமிழ்)**

உரையாசிரியரும் ப்ரசுரகர்த்தரும் ஸ்ரீ உ. வே. சி. ர. ஸ்ரீநிவாஸ பாட்ராசாரியர் ஸ்வாமி.

47 பாட்டராசார் தெரு.
கும்பகோணம். விலை 0-6-0

இந்த பதிப்பு மிகவும் நன்றாய் அமைந்துள்ளது. முதலில் அஷ்டோத்தர சத நாமஸ்தோத்ரம் க்ரந்தம், நாகரம் தமிழ் மூன்று எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருக்கிறது. நாமாவளியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கந்யாஸ கரந்யாஸங்கள் நன்கு ஸ்பஷ்டமாய் பதிக்கப்பட்டிருக்கின்றன. உரையாசிரியராகிய ஸ்வாமி மிகத்தெளிவாக உரை எழுதுகிறார். தேவையான இடங்களில் விசேஷ குறிப்புகள் கொடுக்கப்படுகின்றன. இதற்கு அநுபந்தமாக மஹாபாரதத்தில் உள்ள லக்ஷ்மீ இந்திர ஸம்வாதத்தை எளிய நடையில் எழுதியிருக்கிறார். ச்ரத்தா, வாக், அதிதி ஸூக்தங்கள் கருத்துரையுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 50 பக்கங்கள் கொண்டது.

பதிப்பிற் சிறந்து விளங்குகிறது இது. லக்ஷ்மீ கடாக்ஷம் எல்லோருக்கும் வேண்டும். வேண்டுமென்று சொல்லிக்கொள்வதாலே வந்துவிடுமா? இம்மாதிரி ஸ்தோத்ரங்களை வாங்கிபாராயணம்செய்வதொன்றே கடாக்ஷத்தைப் பெறவழி. இப்புத்தகம் ஸேவா காரியாலயத்திலும் கடைக்கும்.




## ஓரொன்று தானே யமையாதோ !

தேசிகன் கவிதார்கிக சிங்கம். ஸ்வாமி தேசிகன் ஒப்புக்கொண்ட கவிகள் இருவர். அவர்கள் முறையே வால்மீகியும் வ்யாஸருமாவர். யாதவாப்யுதயத்தில் கவிகளுக்கு லக்ஷணத்தைத் தானே பணித்தார். மற்றவர்களை ஏதோ ஓரளவிற்கே ஒப்புக்கொள்கிறார்.

வேதாந்த தேசிகரின் காவ்யங்கள் மேல் வாரியாக லளிதமாகத் தோன்றினாலும் அவற்றில் உள்ள ஒவ்வொரு ச்லோகங்களிலும் ஒவ்வொரு பதங்களிலும் எவ்வளவோ அர்த்தங்கள் சிந்திக்கத் தக்கவை என்கிறார் அப்பய்ய தீக்ஷிதர். ஓரிரண்டு இடங்களே என்று நினைக்காதீர்கள் "ஸர்வத்ர" என்கிறார்.

ச்லேஷயமக ¦ சக்ரவர்த்தியான, அரசாணிப்பாலை வேங்கடாத்வரி ஸ்வாமி தேசிகனைப் பற்றிப் பாடியதில் ஸரஸ கவிதையாகின்ற பத்மத்துக்கு ஸவிதா-ஸூர்யன் ஸ்வாமி என்கிறார்.

க்யாதி லாப பூஜாவிமுகரான ஸ்வாமி கவிதார்கிக சிங்கம் என்றதை அடிக்கடி க்ரந்தங்களில் பணிப்பர். அதிலும் எல்லைக்கடந்த நைச்சியத்தோடு ஆரம்பம் முதல் கடைசிவரை முடிக்கவேண்டியிருக்கும் ஸ்தோத்ர ப்ரபந்தங்களிலும் இவ்வாறு பெருமையைப் பரவுதல் நன்றோ என்று சிந்தித்துத் தேரியது ஒன்று உண்டு. அதாவது எத்தனையோ கவிகள். எத்தனையோ காவியங்களில் இதுவும் ஒன்று என்று எண்ணிவிட்டால் இவை நமக்கு எட்டாது போகும். கவிசெய்ததல்ல "கவி சிங்கம் செய்தது" என்கிறார், கவி மாத்திரமல்ல, தார்கிகன் பேசியது என்கிறார். கவி சிங்கமும் தார்கிக சிங்கமும் பேசியது என்று ஸிம்ஹ நாதம் செய்கிறார்.

யாதவாப்யுதயத்தில் லக்ஷணம் கூறியவர் வ்யாஸவால்மீகிகளையே கவிகள் என்று கூறியவர், தன்னைப் பேசுமிடத்து கவி தார்கிக கேஸரி என்று கூறுவர் என்றால் இது வியக்கத்தக்கதே! நம்மை ஏமாறுதீர்கள் என்று எச்சரிக்கிறார்.

தேசிகனடியாரா யிருக்கும் நாம் இப்படி ஸ்வாமி ஸாதித்திருக்கின்றாரே, இதன் கருத்துதான் என்ன? மற்ற கவிகளுக்கு நிகராக ஸ்வாமியை நினைப்பது சரிதானா? என்று தான் சிந்திக்கவேண்டும்.

காளிதாஸன் கவிதையைப் பற்றி முன் ஸஞ்சிகையில் கூறப்பட்டது. ஸ்வாமியின கவிதை போட்டியாய்



தோன்றியது என்று உரைப்பதுளன்றும் நன்றன்று என்றும் கூறப்பட்டது. அதையே ரஸமாய் விளக்குவோம்,

மேக ஸந்தேசம்:—

கஸ்சித்—யாரோ ஒருவன் என்றுளது. அவன் யார்? எனறு கேட்டால் மூன்றாவது பாதத்தில் யக்ஷ:-யக்ஷன் என்றுளது. என் இஷ்டம் என்றால் மறுக்கமுடியாது. ஆனால் கவி லோகத்தில் பார்ப்போம். ஊர்பேர் தெரியாதவன், அதிலும் யக்ஷன். ஏனோ தானோ என்று எதையோ எழுதுவது இயல்பெனில் அதை வரவேற்போமா? எதுவும் பசுவத் விஷயமாய்இருக்கவேண்டும். இந்த இடத்தில் ஸ்வாமி சிக்ஷிப்பது மிக அழகு. வம்சே ஜாத:-என்கிறார். நல்ல வம்சத்திலே பிறந்தவன் என்றே ஆரம்பம். காவ்யம் பிறக்கின்ற பொழுதே வம்சத்தில் தோன்றினார் என்றாரம்பிப்பது ரஸிகர்களைக் கூத்தாடச் செய்யும். ஊர்பேர் தெரியாதவனுக்கு நேர் எதிர் தட்டில் நிற்பவன் அன்றோ மஹா குலீனன். ஸவிதுரநகே என்பதோடு கஸ்சித் என்பதின் சிக்ஷணம் முடியும். ஆதிக்யத்தைச் சொல்ல வல்ல சொல்லைவிட்டு குரு சப்தத்தை அமைத்தது இங்கு அவ்வளவு பொருத்தமானதல்ல. நிற்கட்டும். ப்ரமாதமுடையவன் யக்ஷன். முன்னடி பார்த்து வர்த்தித்தல் என்கிற நியாயப்படியே மனிதத் தன்மையை மூதலிப்பவன் ராமன். சாபம் யக்ஷனுக்கு, லீலை ராமனுக்கு, இதை தேவ: என்கிற பதம் சொல்லும். அஸ்தங்கமித மஹிமனாய் நிற்கிறான் யக்ஷன். ஸ்ரீமான்ராமன். அடுத்ததாக வர்ஷ போக்யேந-என்று மேக ஸந்தேசம். இங்கு போக்ய சப்தம் பொருத்த முடையதா? என்று யோசிக்கவேண்டும். அர்த்தம்பாதகமில்லையே என்னலாம். போகம், போக்யம் முதலான சப்தங்களை துக்க ப்ரகரணங்களில் ப்ரயோகிப்பது அழகாயிருக்கின்றதா? ப்ரமத்தன் என்பதை ஜாகரூக என்கிற பதத்தினால் சிக்ஷிக்கிறார். ஜனகதனயாஸ்நாந புண்யோதகேஷு என்றது மேக ஸந்தேசம். ஜனகதனயையை நினைத்தவன் அவள் விஷயமாயே ஓர் காவியம் செய்யலாமல்லவா? ஞாபகமில்லை என்று சொல்ல முடியாதே. அதே ஜனகதனயா சப்தத்தை வைத்தே ஹம்ஸ ஸந்தேசம் பணித்தார். வஸதிம் சக்ரே வாஸத்தைப் பண்ணலாயினன் மேகஸந்தேசம். கல்பம் போன்ற ராத்திரியை விடியும் வரை ஸஹித்துக்கொண்டிருந்தார் என்றது ஹம்ஸஸந்தேசம்.

இந்த நிஸ்சிதார்த்த: என்கிற பதம் மிக அழகு. கலியாணத்துக்கு முதலில் நிஸ்சிதார்த்தம் பண்ணத் தானே வேண்டும். வர்ஷ போக்யம் சாபம் என்றான் காளிதாஸன். ஒரு இரவே கல்பமாய்த் தோன்றுகிறது அதையும் கஷ்டப்பட்டு ஸஹித்துக் கொண்டார் என்று ஹம்ஸ ஸந்தேசம். விரகிகள் எதிலோ மனம் போகவிட்டு எப்படியோ பகலைக் கழித்துவிடலாம். இரவிலேதனித்து இருக்கின்றபொழுது கணமும் கல்பமாய்த் தோன்றும். இதை இங்கு நிசா வ்ருத்தாந்தத்தினால் காட்டுவதும் மிக அழகு.

இங்குள்ள ரஸங்கள் எண்ணிலடங்கா, காளிதாஸனுடைய கவிகளுக்கும் ஸ்வாமியினுடைய காவ்யங்களுக்கும் இமைக்கும் இமயத்துக்கும் உள்ள வாசியுள்ளது. இதை ஸஹ்ருதய ரஸிகர்கள் அனுபவிக்க வேண்டும்.

காளிதாஸனிடம்குறை கூறவேண்டும் என்று எண்ணம் இல்லை. காளிதாஸன் தான் கவி என்றும் மற்றவர்கள் அவனுக்கப்புறமே என்றும் தேசிகனடியாரிடத்தும் ஓர் எண்ணம் நிலவி வருகின்றது. அன்றியும் போட்டியாக ஸ்வாமி க்ரந்தங்கள் செய்கிறார் என்றும் மற்றுமோர் எண்ணமும் நிலவுகின்றது. இதைத் தான் தேசிகனடியார்கள் [illegible] மாற்றிக்கொள்ள வே[illegible] சற்று இங்கு கூறப்படு[illegible]டும் என்று ஸ்வாமி ஸ்ரீஸூ[illegible]யது. மற்றும் சில மேலும் அனு[illegible]க்த ரஸங்களை [illegible]பவிக்கலாம்




**கேள்வி :-** ஸம்பிரதாய க்ரந்தங்கள ஆங்காங்கு பல பெரியோர்களால் பிரசுரிக்கப்படுகின்றன. எல்லாவற்றையும் வாங்குவதில் ஏதாவது லாபமுண்டா? தேவையானதை மாத்திரம வாங்கிக்கொண்டால் போதுமே என்று தோன்றுகிறது. சரிதானோ?

**பதில் :—** தேவையானதை வாங்கிக்கொளவதில குறையொன்றுமில்லை. ஆனால் தேவையைமாத்திரம் சுருக்கிக்கொள்வது நன்றன்று. மேலும தேவையல்லாதது என்று ஸம்பிரதாய க்ரந்தங்களில ஒன்று இருக்குமோ? அந்த ஸமயத்தில உபயோகப்படாதிருந்தாலும் தேவையல்லாதது என்று சொல்லவியலுமா? நாம ஸம்பாதிக்கும் பணம நல்ல விஷயத்தில் நல்லவாளுக்குச் சேருமானால் அதில எவ்வளவு புண்ணிய லாபமுண்டு! தேசிகன் க்ரந்தங்கள் எல்லாம் தேவையானவையே. தேசிகனுக்கு நேரிடையாக நம்மால் ஸமர்பிக்க முடியுமா? என்றெல்லாம் யோசித்தால கேள்வி இருந்த இடம் தெரியாது.

**கேள்வி :—** ... சாஸ்திரங்கள் ... சாஸ்திரங்களைக்கொண்டு ... வாசித்ததில் ... ஒரு ... நியம் செய்ய விஷயத்தை நிர்ணைக்க வேண்டும். ... ணங்களால் வாசிக்க முடியவில்லை. சக்தியும் இல்லை. என் செய்வது?

**பதில் :—** சாஸ்திரம் வாசித்தல் நலம். சக்தியில்லை என்றால் சாஸ்திரம் வல்லவர்கள் சொல்லும் விஷயங்களைக்கொண்டு தேவையைத் தெளியலாம். அவர்கள் சொல்லும் சாஸ்திரங்கள்தானே! இப்படி செய்வதால் ராஜாவைப் போலில்லாமல் ராஜகுமாரனைப்போல் இருக்கலாமல்லவா!

**கேள்வி :—** இன்று காணும் விஞ்ஞான உலகத்தில் வேதாந்தத்தைப் பேசுவதோ, பரப்புவதோ பரிஹாஸத்துக்குத்தானே இடமாகும்? கண்ணால் காணாத விஷயத்தைபபற்றி பேசிப்பயன் என்ன?

**பதில் :—** வேதாந்தமே விக்ஞானம். நீங்கள் நினைத்திருக்கும் உயர்தவிக்ஞானம் குழந்தைப் பருவத்தில உளது. அதனால் முடிவு காணவியலாது. உண்மையின் முடிவைக்கண்ட உண்மை விக்ஞானமே வேதாந்தம். நீங்கள் சொல்லும் விக்ஞானத்தின் போக்கு அபாயத்தை விளைவிக்கலாம், அமைதியை குலைக்கலாம். வேதாந்த விக்ஞானம் அத்தகையதன்று. பரிஹாஸம் செய்யும் மனப்பான்மை அக்ஞானிகளுக்குத்தானே அதிகம் உண்டு.

# அண்ணன் கண்ட தேசிகன்

[46 கவிதார்கிக கேஸரியான ஸ்வாமி ப்ரகடனம் செய்துள்ள சததூஷணியை மனத்திலே கொண்டவர்களுக்கு மாயிகள் கொசுக்களைப்போல் ஸுலபமாய்ஜெயிக்கத்தக்கவர். மேலும் அவர்கள் கால்களில் விழுந்து ஸேவிக்கவும் செய்வர்.

[47 விந்தை! சங்கரர் யாதவர், பாஸ்கரர் முதலியோரின் க்ரந்தங்களில் வீணே மதங்கொண்டு, வீண் மதத்தை வாதிப்பவர்களின் கூச்சல் கவிதார்கிக கேஸரியின் சததூஷணி யென்னும் கரந்தத்தைக் கேட்குமளவே!!

[48] மெய் வாதிகளின் முன்னணியில் நிற்பவருக்கு ஸர்வார்த்தஸித்தி, சததூஷணி என்பவை இரண்டும் கேடயமாயும் சஸ்திரமாகவும் இருக்கும். ஸர்வார்த்த ஸித்தியினால் ஸ்வரக்ஷை செய்யப்படுகிறது, பிறருடன் உண்டான வாதச் சண்டையில் எதிரிகளைத் தொலைப்பது சததூஷணீ.

[49] ஆதலால் தான் ஸர்வஜகத்துக்கும் குரு. யதிசக்ரவர்த்தியான ராமானுஜரின் மதத்தில் திக்கஜமாய் விளங்குபவர். கவிகளாகிற மதயானைகளுக்கும் சிங்கமாய் விளங்குபவர் அவர். ஆகையாலன்றோ இந்த பாஷ்யத்தை ஊர்ஜிதமாகச் செய்தருளினர்.

[50] வேதாந்த தேசிக சிரோமணியினால் தகப்பனாராயுமிருந்து நன்கு சிக்ஷிக்கப்பட்ட வரதர் ஆசார்யரானதுடன் யதிராஜனின் மதத்தில் கோடி ப்ரதிவாதிகளுக்கு ஓர் வஜ்ராயுதமாய் விளங்கினர்.

[51] ஸர்வ சாஸ்திரங்களிலும் துரந்தரரான வேங்கடநாதன் என்ற ஸர்வக்ஞனை இன்று உண்டான ஒரு சிலர் அவமதிக்கின்றனர். பாவம் பாவம்! ராமனையும் க்ருஷ்ணனையும் தூஷிப்பவர்களே இவர்கள். சிசுபாலனையும் ராவணனையும் பல வகையிலும் பின் பற்றுமவர் இவ் வண்ணம் செய்வதில் ஆச்சர்ய மென்ன?

[52] காமம், மதம், கோபம், மூர்க்கத்தனம் முதலிய வற்றை இழந்தவர்களானாலும், நீதி தைர்யம், சாந்தி, ஞானம், தமம் முதலியவற்றை உடையவர்களானாலும், யதிராஜனின் மதத்தைத் தாங்குபவரான தேசிகன் திருவடித் தாமரைகளை நோக்காதொழிவரேல் ஸ்தோத்திரம் செய்வதற்கும், கௌரவிப்பதற்கும், புறம்பானவர்கள்.

[53] யதிச் வரனுக்கு—ஸ்தானமாய் இருப்பவன் எவனோ, கவிதார்கிக சிங்கம் எவனோ, எவன் தேவனோ, ஸத்துக்களுக்கு எவன் துரந்தரனோ அவனிடத்தில் அத்தகையவர்கள் பற்றற்றவர்களாய் இருத்தல் கூடும். பாவம்! அவனது பெருமையை ப்ரகாசப்படுத்தும் அவனுடைய காவ்ய சாஸ்திரங்களில் தினையத்தனை பரிசயமும் கனவிலும் அவர்களுக்கு இடையாதே!

# கோதையும் கோவிந்தனும்

அருச்சையில் ஆழ்வர் ஆழ்வார்கள். விபவத்தையும் அருச்சையையும் ஒருங்கே பிணைத்துப்போருவர். பரத்தைப் பேசுகின்றபொழுது அப்பரம் நம் கண்களுக் கப்புறமே யாதலால் அதை விட்டு அருச்சையே நமக்குற்றது என்றும் ஈடுபடுவர். "ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே?" என்று மங்கை மன்னன் மடல்.

நித்ய ஸூரிகளைக் காட்டிலும், தனிப்பெருமை யுண்டு ஆழ்வார்களுக்கு. பராங்குச பரகாலாதி ருபத்தாலே அகஸ்த்ய ஸேவித மான தேசத்திலே அபிநவமான தசாவதாரம் செய்தருளினான்" ஸர்வேச்வரன் என்று ரஹஸ்ய த்ரயஸாரம் கூறும். 'அன்று நான்பிறந்திலேன்' என்ற கணக்கிலே விபவத்தை அனுபவிக்கப் பெறாதார் அர்ச்சையைக் கண்டு அனுபவித்துய்யலாம்.

அருச்சையில் நின்ற அச்சுதன் ஸ்தோத்திர ப்ரியனாய் நின்று ஆழ்வார்களை விட்டுப் பாடச் செய்து மகிழ்வன். நூற்றெட்டு திருப்பதிகள் என்று இன்று வ்யபதேசிக்கப்பெறும் திவ்ய தேசங்கள் புராண ப்ரஸித்த மன்றிக்கே ஆழ்வார்களின் மங்களாசாஸனத்தை அடிப்படையாய்க் கொண்டவையாம். ஒரு சில திவ்ய தேசங்களில் பல எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்வதும் ஆழ்வார்களுடைய தனித்த இயல்பாயிருக்கும்.

பேராயிரம் கொண்டவன் பரமன். எப்பெயரும் அவனையே பரவும். அவற்றுள் விபவத் திருநாமங்கள் சில, அருச்சைத் திருநாமங்கள் சில வாய் இருக்கும். ஆயினும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதன்று.

எங்கள் ஊர் எம்பெருமானைத் தான் பரம் ப்ரும்ஹம் என்று சொல்லியிருக்கின்றனர் என்பதினாலேயே மற்றைய எம்பெருமான்களுக்கு ப்ரும்ஹத்வம் போய்விடுமோ? ஆயினும் ஆழ்ந்து அனுபவிக்கும் வாய்ப் புற்றவர்க்கு அவ்வோ எம்பெருமான்களிடத்தில் தனித்தனி வகையான ஈடுபாடு இருப்பதால் குறையொன்றில்லை.

அவன் ஆழ்வார்களாய்த் தோன்றியது ஒரு புறமிருக்க பிராட்டியும் தோன்றிவிட்டாள். ஸர்வேச்வரனையே ஆண்டுவிட்டவளன்றோ இவள். ஆழ்வார்கள் நாயிகா பாவத்தில் இறங்கலாயினர். பெண்ணாக இருந்தன்றோ, சூடிக் கொடுத்தனுபவிக்கவேண்டும் என்பவள் தான் சேர்லும். இவளுக்குக் கோதை' என்று திருநாமம். தன்னை 'கோதை'யென்றே சொல்லிக் கொள்கிறாள்.

ஆண்டாளுக்குத் திருநாமமான கோதா சப்தத்திற்குப் பல பொருள்கள் உள. ஸாதாரண ஸ்த்ரீ என்றும் பொருள் உண்டு. திருமங்கை மன்னன் இந்த சப்தத்தை ப்ரயோகிக்கிறார். ஸாதாரணமாய்ப் பார்க்கின்றபொழுது ஸாதாரணப் பெண் என்று தோன்றினாலும் இவ்வாண்டாளைக் கருத்தில் கொண்டு அவர் அவ்வண்ணம் பேசியுள்ளார் என்பது ரஸிகர்கள் மறுக்க வியலாது.

க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபடும் பொழுது மங்கைமன்னன்



பாசுரங்களில் கோதா சப்தத்தைக் காணப் பெறுகின்றோம். பெரிய திருமொழி பத்தாவது பத்தில் ஒன்பதாவது திருமொழியில்:—

"கள்ளவிழ் கோதை காதலும், எங்கள் காரிகை மாதர் கருத்தும், பிள்ளை தன் கையில் கிண்ணமே யொக்கப் பேசுவது எந்தை பிரானே," என்றும்,

அல்லியங் கோதை யணிநிறங் கொண்டுவந்து முன்னே நின்று போகாய், என்றும்

திருமொழி எங்கள் தேமலர்க் கோதை சீர்மையை நினைந்திலை அந்தோ! பெருவழி நாவற் கனியினும் இனியன் இவளெனப் பேசுகின்றாயே என்றும்,

"பெருந்தவங் கண்ணி சுரும்புறு கோதை பெருமையை நினைந்திலை பேசில்" என்றும்,

சீர்கெழு கோதை என்னல திலளென்று அன்னதோர் தேற்றன் மைதானே என்றுங்காணப் பெறுகிறது.

இவ்வண்ணம் கோதை கருத்தில் கொள்ளப் பட்டிருக்கிறாள். கோதையின் பெருமையைப்பேசுவது கோதாஸ்துதி. கோதை விபவத்தை நினைத்து அர்ச்சையில் ஈடுபடுவது நிகரில் புகழாய் விளங்கும். நாச்சியார் திருமொழி நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தில் தனிச் சிறப்பு வாய்ந்து நிற்கும். நாச்சியார் திருமொழியின் விவரணமே நாலாயிரம் என்றும் நற்றமிழ் நாவலர் நவிலுவர்.

### கோதையின் ஈடுபாடு

கோகுலம் வந்து கோவர்த்தனம் தாங்கி கோவிந்தனாய் நின்றான் கண்ணன். பட்டாபிஷேகப் பெயர் இது. மூன்றெழுத்துடைய பெயர் இது. "மூன்றெழுத்துடைய பேரால் கத்திரபந்து மன்றே பராங்கதி கண்டுகொண்டான்" என்று திருமாலை பேசும் சிறப்புடைய பெயர் இது. கோவிந்தன் என்றாலே கோபியர்க்குக் கொண்டாட்டம் தான். பரவாஸுதேவனையோ, வாஸுதேவனாய் ராஜாந்தப்புர வாஸியாகவோ இருந்தால் நமக்குப் பயனென்ன? நம்மைக் கண்டு, நம்மில் கலந்து, நம்மோடிருப்பவனைத் தானே நாம் நாடுவோம், இவ்வளவு நீர்மை (ஸௌலப்யம்) உடையவன் கோவிந்தன். இவன் பெயரே காட்டித்தரும் இத் தத்துவத்தை.

அரங்கனை ஆண்டவள் இவள் என்னையும் ஆண்டு விட்டாள் "தாரா: என்று நினைப்பர்போலும் இதுபஹுமானத்துடன் நினைப்பதாகும். அரங்கனை யன்றிக்கே அனேக திவ்ய தேசத்தெம்பெருமான்களுக்குச் சொன்மாலை சூட்டிக்கொடுக்கின்றாள். வேங்கடவாணனிடத்தில் ஆண்டாளுக்குண்டான காதல் வெள்ளத்தைக் கணக்கிட்டு சொல்லவியலாது. பூமாலையை அரங்கன் சூட்டிக் கொண்ட போதிலும் பாமாலையை சூட்டிக் கொள்வதில் முன்னணியில் நிற்கிறார் கோவிந்தன் இதை ஆண்டாளருளிச் செயல் வாயிலாகச் சிறிது அனுஸந்திப்போம்

எப்பாவையும் இப்பாவைக்கு ஒப்பாக மாட்டாள். இவ்வண்ணமே எப்பாவையும் இத் திருப்பாவைக்கு ஒப்பாகா. நாச்சியாரே பாடிய திருமொழி (ஸ்ரீஸூக்தம்) யாதலால் எத் திருமொழியும் இதற்கிணையாகா.

இங்கு ஆண்டாளின் திருமொழிகள் அமைந்திருப்பதை ஸஹ்ருதய ரஸிகர்கள் ஆழ்ந்து அனுபவிக்கவேண்டும். திருப்பாவையில் 27-வது பாசுரத்தில் "**கூடாரைவெல்லும் சீர்கோவிந்தா!** உன்றன்னைப் பாடிப்பறைகொண்டு யாம்பெறு சம்மானம் "........'**கூடியிருந்து குளிர்ந்திருப்போம்** என்கிறாள். இதுமுதல் கோவிந்த ஸ்மரணம். 28-வது பாசுரத்தில் '**இறைவா நீ தாராய் பறை**" என்கிறாள். 29-வது பாசுரத்தில் "இன்றுகாண் கோவிந்தா......உனக்கே நாமாட்செய்வோம் **மற்றை நங்காமங்கள் மாற்று**" என்கிறாள்.

இம்மூன்று பாசுரங்களில் கோவிந்தனிடத்தில் ஈடுபாடு சிறந்து விளங்குகிறது. ஆரம்பத்தில் கோவிந்த சப்தம் இருந்தாலன்றோ அழகு என்று தோன்றலாம், ஆனால் முதல் பாசுரத்தில் நாராயணனே நமக்கே **பறை தருவான்** என்றவள் 28-வது பாசுரத்தில் குறைவொன்றுமில்லாத கோவிந்தா ... **நீ தாராய் பறை** என்று முடிக்கிறாள், உபக்ரமத்தில் பொதுப்படையாகக் கூறியது இங்கு தனக்கபிமதமான கோவிந்த சப்தத்தினால் விசேஷித்துக் கூறப்பட்டது, என்று கொள்ளக் குறைவொன்றில்லை.

**இனி நாச்சியார் திருமொழியை ஸேவிப்போம்**

1- **தையொரு திங்களில்**3வது பாசுரத்திலே 'கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு **கோவிந்தன் என்பதோர் பேரெழுதி** வித்தகன் வேங்கடவாணனை......என்கிறாள்.

2. **வாரணமாயிரத்தில்** 2-வது பாசுரத்தில் **கோவிந்தன் என்பானோர் காளை பகுதக் கனாக் கண்**டேன் தோழீ நான் என்கிறாள்.

3. **விண்ணீலமேலாப்பில்** 3-வது பாசுரத்தில் குளிரருவி வேங்கடத்து **என்கோவிந்தன்** குணம்பாடி அளியத்த மேகங்காள் ஆவி காத்திருப்பேனே என்கிறாள்.

4. **கார்க்கோடல் பூக்காளில்** 7வது பாசுரத்தில் **குடமாடு கூத்தன்கோவிந்தன்** கோமிறை செய்தெம்மை உடைமாடு கொண்டால் உங்களுக்கினி யொன்று போதுமே என்கிறாள்.

5. **மற்றிருந்தீரில்** கொங்கைத்தலமிவை நோக்கிக் காணீர் **கோவிந்தனுக்**கல்லால் வாயில் போகா என்கிறாள். 9வது பாசுரத்தில் கூட்டிலிருந்து கிளியெப்போதும் கோவிந்தா கோவிந்தா என்றழைக்கும் என்கிறாள்.

6. கண்ணனென்னும் கருந்தெய்வத்தில் 9வது பாசுரத்தில் கொம்மை முலைகள் இடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல் இம்மைப் பிறவி செய்யாதே யினிப் போய்ச் செய்யுந்த வந்தானென்? செம்மையுடைய திருமார்விற் சேர்த்தானேனும்...... மிகநன்றே என்கிறாள்.

இவ் வண்ணம் நாச்சியார் திருமொழியில் உமையும் பாசுரங்களை ஸேவிக்கின்ற பொழுது ஆண்டாளுக்கு நிரதிசயமான ஈடுபாடு கோவிந்தன் பாலுள்ளது என்று நன்று புலனாகின்றது, பூச்சி ஓடியது. அது முடிவில் எழுத்தாய் விட்டது என்பதுபோல் ஏதோ பதங்கள் அமைந்ததாலேயே இப்படிச் சொல்லக்கூடுமோ என்று சங்



கைக்கு இடமில்லை. கோவிந்தனை நினைத்த இடங்களை யெல்லாம் எடுத்து ஸேவித்தால் மிகவும் ரஸமான பொருள் விளங்குவதை மறுக்கவியலாது.

மார்கழியில் நோன்பு நோற்றாள். மற்றை நங்காமங்கள் மாற்று என்றாள். தையொரு திங்களில் காமதேவனைப் பற்றி கோவிந்தன் என்பதோர் பேரெழுதுவதில் ஸக்தையாகிறாள்.

ஸங்கல்பத்திற்கேற்ப கோவிந்தன் என்பானோர் காளைப் புகுந்ததாய்க் கனவு காண்கிறாள் நினைவு கனவிலும் வந்தது போலும். நினைவிலும் கனவிலும் கோவிந்தன். அவனை அடையாமல் இருப்பது எப்படி? கோவிந்தன் குணமபாடி ஆவிகாத்திருப்பேன் என்று மேகங்களை அழைத்துச்சொல்கிறாள். ஆண்டாளின் மேக ஸந்தேசம் முடிந்தது. வெளி விஷயங்களில் வெறுப்பு முற்றியது. மயில்கள் வந்தாடின. உங்கள் ஆட்டத்தை பார்க்க என்னிடத்தில் முதலில்லை என்று நானும குடமாடு கூத்தன் கோவிந்தன என்னோடு சேர்ந்தால்போதுமே என்று கூறுகிறாள். தான் கோவிந்தனுக்குத் தகுதியுடையவள் என்று சொல்பவளாய் தோழிமாரைக் கண்டு கொங்கைத்தலத்தின் நிலையைக்கூறினாள். அவனிடம் கொண்ட காதலை முத்துகிறது எப்பொழுது பார்த்தாலும் கோவிந்தா கோவிந்தா என்றே வார்த்தை. அதைக் கிளிக்கும் பழக்கி வைத்தாள். கோவிந்தன் தாமதிப்பதைக் கண்டு கோபம் பொங்குகிறது. கிளியைப் பட்டினிப் போட்டும் பயன் என்ன?

விரஹம் அதிகமாக இறுதியில் உறுதியாய் கூறுமிடத்துகொம்மை முலைகளிடர்தீர கோவிந்தனுக்குக்கோர் குற்றேவல்செய்யாமல் இனிப்போய் செய்யுந்த வந்தானென்ன? என்றாள். அந்த கோவிந்தன் தன் மார்போடு சேர்த்துக்கொண்டு மெய்மமை சொல்லி முகம் நோக்கி விடைதான் தருமானால் மிகவும் நன்று என்று முடிக்கின்றாள்.

ஆண்டாள் கொண்ட கோவிந்தன் யார்? அருச்சையில் உள்ள பெருமாளிடத்தில் ஈடுபடுவது இயற்கை தானே! சித்திர கூடத்தவனோ? என்றெல்லாம் எண்ணம் உதிக்கின்றது. கோவிந்தனைப் பொதுவாகச் சொன்னவள் விண்ணீலமேலாப்பில்குளிரருவி வேங்கடத்து] என் கோவிந்தன் குணம் பாடி ஆவி காத்திருப்பேன் என்றாள். இதை நோக்கினால் ஆண்டாள் என் கோவிந்தன் என்றழைப்பது வெங்கடத்திருந்தானை என்று தேரும். அவ்வேங்கடத்திருந்தான் ஆண்டாளுக்காய் கோவிந்தனாகவே இருந்து விட்டான் திருப்பதியில் அவனை ஆண்டாள் இவ்வாண்டாள் என்பதில் ஐயமில்லை. ஆண்டாள் உரைத்த வழியே செல்லும அக் கோவிந்தன் கூடாரைவெல்லும் சீரைப் பெற்று சிறந்து நின்று கோதையோடு நம்மையும் மகிழ்விப்பனாக.

# அடைக்கலப் பத்து

(R ஈயுண்ணி, ஸ்ரீனிவாச ராகவாச்சாரியார்)

"ஆத்ம ஸமர்ப்பணம் செய்து விட்டோம். ஆனால் உத்தர காலத்தில் இருக்கவேண்டிய முறையில் எங்களால் இருக்க முடியவில்லை. தெரியாமல், ஏன்? தெரிந்தும் பல பாபங்களைச் செய்து விடுகிறோம். என் செய்வோம். எம்பெருமான் எங்களை என் செய்வானோ என்று ஏங்கி வருந்துகின்றோம். என்கிறீர்களா? பயப்படாதீர்கள். எம்பெருமான் உங்களை உதறித்தள்ளி விடமாட்டான். மோக்ஷம் கொடுக்கிறேன். என்று சொன்னது சொன்னதுதான். ஆனால் தெரிந்தும் தெரியாமலும் பாபங்கள் பண்ணிவிடுகின்றோமே, அப்பாபங்களுக்காககடின சிக்ஷை விதித்து விடுவானோ? இந்தஜன்மத்தில் அனுபவித்துத் தீராவிட்டால் அப்பாபங்கள் தீருவதற்காக இன்னும் பலஜனமங்களைக் கொடுத்து விடுவானோ? எனறு நீங்கள் பயப்பட வேணடிய அவச்யமில்லை. இத்தேஹம் முடிவில் மோக்ஷணம் வேண்டும் என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்? அவ்வாறே எம்பெருமான் இவ்வுடலின் முடிவில் முக்தியை அளித்து விடுவான். அதற்குள் நாங்கள் செய்த பாபங்கள் அனுபவித்துத்திருமா என்கிறீர்களா? தீரும். தெரியாமல் நீங்கள் செய்த பாபங்களுக்குத் தீய பயன் ஒன்றும் இல்லை. அவைகளைப் பற்றி நீங்கள பயப்படவேண்டியதில்லை. தாமரை இலையில் நீர்த்திவிலைகள் ஒட்டாததுபோல் தெரியாமல் செய்த பாவங்கள் உங்களை அணுகா. ப்ரபத்தி செய்யாதஸாதாரண மனிதர்கள் தெரியாமல் செய்த பாபங்களுக்குப் பயனை அனுபவித்துத்தான் தீரவேண்டும். தெரியாமல் தொட்டாலும் நெருப்பு சுடும் அந்த ந்யாயம் ப்ரபன்னர் பால் தனி அனுக்ரகம் செய்திருக்கிறான் எம்பெருமான்.

தெரிந்து பலபாபங்கள் செய்து விடுகின்றோமே அவைகளுக்குப் பயன அனுபவிக்க வேண்டியிருக்கின்றதே என் செய்வோம் என்றும் பயப்படவேண்டியதில்லை. அவ் விஷயத்திலும் எம்பெருமான் உங்கள் பால் தனி அனுக்ரஹம் செய்திருக்கிறான். சிக்ஷையைக் குறைவு படுத்தியிருக்கிறான். ராஜகுமாரர்கள் செய்த தவறுகளுககு அரசாங்கத்தில் சிறிய தண்டனையே விதிக்கப்படுகிறது. அது போல் நீஙகள் ப்ரபத்தி செய்திருக்கிறபடியால் உங்களுக்குத் தனிச் செல்வாக்கு : எம்பெருமான் விஷயத்தில் உண்டு. ஆதலின் நீங்கள் தெரிந்து செய்த பாபங்களுக்குத் தண்டனை குறைக்கவே இருக்கின்றபடியால் நீங்கள் பயப்பட வேண்டியதில்லை, தண்டனை குறைவாயிருந்தாலும் பலவாயிருந்தால் அவைகளை அனுபவிப்பதற்கு இந்த ஜன்மம் போதாமலிருந்தால் அதற்காக வேறு பல ஜன்மங்களைக் கொடுத்துவிடமாட்டான்." இந்த ஜனமத்திலேயே எல்லாவற்றையும் அனுபவிக்கும்படி செய்துவிட்டு இஜ்ஜன்மத்தின்' முடிவில் மோக்ஷத்தைக் கொடுத்து விடுவான். நீங்கள் தேசகாலவைகுண்யத்தால் தெரிந்து பாபம் செய்தபோதிலும் நீங்களே வெட்கப்பட்டு ப்ராயச்சித்தம் செய்து கொள்ளும்படி செய்துவிடுவான பாவங்கள் செயயத் தோன்றாதவாறு உங்களைக் காப்பாற்றுவான. பாபங்களைச் செய்துப் ப்ராயச்சித்தமும் செய்யாமலிருந்துவிடின் அப்பொழுது முற்கூறியவாறு சிறிய தணடனைகளை விதித்து உங்களைப் பாபங்களினின்றும் விடுவித்துவிடுவான். உங்கள் பால் எம்பெருமானுக்கு இவ்வளவு அருள் உண்டு. எம்பெருமானிடத்தில் இத்தகைய அருங்குணங்கள் உண்டு என்று கருதி உங்கள் மனக்கலக்கத்தைப் மனத்தெளிவு என்ற பெயரால் அறுத்து விடுங்கள். மனம் தெளிவுறு மேல் கலக்கம் தானாய் நீங்கிவிடும்.



எம்பெருமானிடத்தில் இத்தகைய அருங்குணங்கள் உண்டு என்று நான் சொல்லுவதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையானல் பூர்வா சார்யர்கள் பாசுரங்களைச் சேவித்துத் தெளியுங்கள். அவர்கள் பாசுரங்களை நம்புவதற்கு அவர்களிடம் அவ்வளவு விசேஷம் என்ன என்கிறீர்களா? அவ்வாசிரியர் பரிதி (ஸூர்யன்) போல் அவ்வளவு ப்ரகாசமான எப்பொருளையும எளிதில் விளக்கவல்ல மதி (புத்தி) உடையவர்கள். ஆதலின் அவர்கள் ஸ்ரீ ஸூக்திகளை ஸேவித்து எம்பெருமானுடைய அருங் குணங்களைத் தெளியுங்கள்.

பூர்வாசார்யர்கள் நுண்ணறிவு பெற்றிருக்கலாம். ஆனால் அவர்கள் உண்மையையே கூறியுள்ளாகள் என்று நமபுவது எங்ஙனம்? என்கிறீர்களா? கவனமாய்க் கேளுங்கள். சொல்லுகிறேன. அவர்கள் தான் தோன்றியாய் ஒன்றும் கூறவில்லை தமக்கு முன்னுள்ள பெரியவர்களின் ஸ்ரீஸூக்திகளை நன்கு அறிந்து ஆராய்ந்து தீர்மானம் செய்து உண்மைப் பொருள்களை உரைதிருக்கிறார்கள். அவை யெவை யென்று கூறுகிறேன். எம்பெருமானலேயே வெளியிடப்பட்ட சுருதிகள். அவைகளின் அர்த்தத்தை யோக மஹிமையினல் ஸாக்ஷாத் கரித்த மஹரிஷிகள் செய்தருளிய நினைவுகள் ஸ்ம்ருதிகள். அவ்விரண்டும் அறையும் துணிவை அதாவது கூறும் ஸித்தாந்தத்தை உடையவர்களான வால்மீகி வ்யாஸர் முதலிய மஹர்ஷிகள். நம் மாழ்வார் முதலிய ஆழ்வார்கள இவர்களுடைய தூய மொழிகள். அதாவது ராமாயணம் பாரதம் திவ்ய ப்ரபந்தம் எனுமிவைகள். இவைகளை யெல்லாம் தங்கள மனத்தில் நன்ருகக் கொண்டவர்கள நம் பூர்வாசார்யர்கள். நுண்ணறிவுடையவர்கள். அத்தகையோர ஸாதித்தருளியுள்ள பாசுரங்களை —ஸித்தித்ரயம ஸ்ரீ பாஷ்யம முதலிய க்ரந்தங்களை நன்கு ஸேவித்துத் தெளியுங்கள். உஙகள் பயம தீர்ந்துவிடும். நானும இவ்வாறுதான் 'சுருதி, நினைவு, இவை அறையும் துணிவு உடையார் தூமொழி கொண்ட பூர்வாசார்யர்களின் பாசுரங்களை அனுஸந்தித்து என் மனக் கலககத்

47ம் பக்கம் பார்க்கவும்

புராண பாராயணங்களைச் செய்ய லாயினர்.

நான்முகனும் அம்முனிவரைக் காண அவ்வாசிரமத்துக்கு வந்தார். வால்மீகியும பரப்பரப்புடன் எழுந்து வரவேற்று வியந்து விதியுடன் உபசரித்து ஸேவித்து குசலப்ரச்னம் பண்ணினார். ஆஸனத்தில் பாங்குடன அமர்ந்தபிரமன் வால்மீகியையும் அமரச்செய்தார்.

உடல் உட்கார்ந்தது. உள்ளம்மட்டும் உருகிறைந்தவண்ணமிருந்தது. ஏன அப்புறுவைக் கொன்றான் அப்பாவி வேடன்! என்று எண்ணியவாறே மனம் குமுறலாயிற்று. இரட்டையைப் பிரித்தழித்த நீ நீண்டநாளவாழ மாட்டாய் என்று அவனை சபிதது முன் கூறிய ச்லோகமே அவா மனத்துளே சுழன்றவண்ணமிருந்தது.

பிரமன் வால்மீகியின் மனநிலையைக்கண்டு புன்முறுவல்செய்து நீர் வருந்தாதிர; நீர் செய்தது மிகவும ஸரியே. இம்மாதிரி உம்மை சொல்லவைத்ததுநானே இதுமுதலாகவே ராமசரித்தைப் பூரணமாகச் செய்து முடியும, நாரதர் சொன்னதையே சொல்லும், எல்லாம் என்னருளாலே உமக்குத் தாமாகவே தோன்றும்; ஒரு வாக்கும பொய்யாகாது. புண்ணியமானது ராம கதை, வரைகள் உள்ள வரையும், ஆறுகள உள்ள வரையும உமது ராமாயணம உலகங்களில் உலவப்போகின்றது. அதுவரை நீரும எனது லோகங்களில் வசிப்பீர்; இவ்வண்ணம் ஆசி கூறிய பிரமன அங்கேயே அந்தர்த்தானமாயினர்.

வால்மீகி வியந்தார்! சிஷ்யர்கள் அந்த ச்லோகத்தை மறுபடியும பாடலாயினர். இவ்வண்ணமே ராமாயணம் முற்றும் செய்வேன் என்று முனைநதார் முனிவர். ரகுநாதனின சரிதத்தை ஸேவியுங்கள். ராவணனுடைய வதததையும் கணகூடாகப் பாருங்கள். என்று தேனுக்கினிய செஞ்சொற்களால் ராமாயணம் பாடத் தொடங்கிவிட்டார், அத்தாமுனிவர்.

30ம் பக்கம் தொடர்ச்சி

தைப் போக்கிக் கொண்டேன். சூரியனும் சந்திரனும் திருக்கண்களாய் அமைந்த பரமனடி பணிந்தேன். நீங்களும் அவவாறே செய்யுங்கள்.'' என்று ஸ்ரீதேசிகன நமககு ஸாதிக்கின்றார். இவ் வாத்தம பினவரும் பாசுரததில் தெரியவருகின்றதா பாருஙகள்.

சுருதி, நினைவு, இவை அறையும்
துணிவு உடையார் தூமொழி.
கொள் பார்திமதி ஆசிரியர்
பாசுரம்சேர்ந்து அருங்குணங்கள்
கருதி ஒரு தெளி வாளால
கலக்கம் அறுத்து அத்திகிரிப்
பரிதிமதி நயன முடைப்
பரமனடி பணிந்தேனே.

(சுருதி—வேதம். நினைவு—ஸ்மருதி. இவை அறையும துணிவுடையாா தூமொழி—ராமாயணம் பாரதம திவ்ய ப்ரபநதம முதலியவைகள. பாசுரம் — ஸ்ரீபாஷ்யம முதலிய க்ரந்தங்கள். தெளிவாள்—தெளிவு எனும் கத்தி. பரிதி—ஸூாயன். மதி—புத்தி அலலது சந்திரன். பரமன் —பேரருளாளன.)

(தொடரும்)




புராணபூங்காவிலே இதிஹாஸச் சோலையில் ஓர் நதிக்கரை. அத்தமஸா நதிதீரத்தில் அழகிய ஆசிரமம். வீணா நாதத்துடன் நாரதர் அங்கு வந்து சேர்ந்தார். அம்மாமுனி வால்மீகி நாரதரிடம் சில கேட்க, அதைச் சொல்லி முடித்தார் நாரதர். முனிவரால் நன்கு கௌரவிக்கப்பட்ட தேவரிஷி வால்மீகியினிடம் விடைபெற்று வானேறினார்.

அவர் சென்று சில நாழிகளே ஆயின. சிஷ்யன் பரத்வாஜனுடன் தமஸா நதிக்கு நீராடச் சென்றார். நல்லோருள்ளம் தெளிந்துதானே இருக்கும். துளியும் சேறில்லை. துறையும்நன்றாக இருக்கின்றது. பார்த்தனையோ பரத்வாஜ!

குடத்தை இங்கே வை. மர உரியும் கொடு. இங்கே இன்று நீராடுவேன் என்றார் வால்மீகி.

பரத்வாஜனும் அவ்வண்ணமே செய்தார். அவைகளை எடுத்துக்கொண்ட வால்மீகி அழகான அப்பெரிய அரண்ணியத்தைப் பார்த்துப் பூரித்து நடந்தவண்ணமிருந்தார். வெகுதூரத்திலில்லை அருகிலேதான். இரண்டு அழகிய புறாக்கள் இணைபிரியாது இங்குமங்குமாக ஸஞ்சரித்துக்கொண்டிருந்தன. பார்த்துக்கொண்டேயிருக்கின்ற பொழுது ஓர் பாபி இரட்டையிலிருந்து ஆண்பறவையைகொன்றுவிட்டான். தரையில் விழுந்து ரத்தம் தோய்ந்து புறண்டு இறந்துக்கொண்டிருக்கும் தன் கணவனைப்பார்த்து கதறி அழத் தொடங்கியது பக்கத்திலிருந்த பெண்புறு. ஐயோ பாவம்! வேடனடிககிலக்காகி மடிந்தபுறுவைக் கண்டு அம்மாமுனி வருக்கும் இரக்கம் உண்டாகியது. அடக்கவும்முடியாத அவர் இது அதர்மம் அநீதி யென்றெல்லாம் வாய்விட்டும் சொல்லலானார். காமத்தினால் மெய்மறந்து ஒரு புறுவைக்கொன்ற நீ வெகுகாலம் நிலைத்து வாழமாட்டாய் என்றார்.

இவ்வண்ணம் சொல்லிய இவருக்கு "சோகத்தினால் பீடிக்கப்பட்ட நான் என்ன வார்த்தை சொல்லிவிட்டேன்'' என்றதோர் எண்ணம் தோன்றியது. நாம் என்ன செய்யலாம். ச்லோகமாகவே அது தோன்றியபடியால்ஒன்றும் தோன்றவில்லை இதுவே ச்லோகமாக ஆகட்டும் என்று வால்மீகி சொன்னதை அவ்வாறே ஏற்றுக்கொண்டான் சிஷ்யன் பரத்வாஜன்.

நீராடினார். இதையே நினைத்து ஆச்ரமம் சேர்ந்தார். பரதவாஜனும் பின் தொடர்ந்தான். வால்மீகி திருவாராதனத்தை முடித்து

விஞ விடை

## எட்டாததை அடைய எட்டு

இதென்ன என்று யோசித்துண்டா! யோசித்துத் தான் பார்த்தேன். நமக்கு எது எட்டாமல் இருக்கிறதோ அதை அடைய எட்டிப் பார்க்கவேண்டுமென்பதுதான் நீங்கள் சொல்ல வந்திருப்பீர்கள்என்று சொல்லுகிறீர்களா! அதுவும் சரியே ஏனென்றால் ஒரு சிலர் தனக்கு எட்டவில்லை என்றால் அதை அதை அடைய முயற்சி செய்யாமலேயே இருந்து விடுகின்றனர். இப்படி எல்லாவற்றையும் விட்டுக் கொண்டே போனால் எதைத்தான் அடைய முடியும். அதனால்தான் எட்டவில்லை என்றுஏமாந்துப் போகாதே எட்டிப்பார் என்று சொல்ல வந்தேன்.

இவ்வளவு தானென்று நினைத்திருக்கின்றாயா? அதுதான் இல்லை, சொல்லட்டுமா? கேள்!

சாதாரணமாக எட்டவில்லையென்றால் ஏணி வைத்து எட்டலாம் ஏணிகள் வைத்தும் எட்டவில்லையென்றால் அப்புறம் தான் யோசிக்கனும். இன்னொரு வேடிக்கை. உயரமானவனுக்கு எட்டுவது குள்ளனுக்கு எட்டுவதில்லை. தாழ இருந்தால் உயரமானவன் குனியவேண்டும், குள்ளன் எட்டிப் பரித்துக்கொள்ளலாம். இது அப்படிப்பட்ட வஸ்து இல்லை, எல்லோரும் குனிந்தால்தான் எட்ட முடியும். இதை அப்புறம் சொல்றேன்,

எந்த உபாயத்தைப் பண்ணினாலும் எட்டாததொன்றுண்டு, அதை எட்டவேண்டுமானால் என்ன செய்வது? என்றால் அதற்கு விடையைத் தான் நான் சொல்லி விட்டேனே! எட்டாததை அடைய எட்டு-எட்டு எழுத்துக்கள் இதைத்தானே அஷ்டாக்ஷரம் என்கிறோம், அஷ்டாக்ஷரத்தைப் பெற்றால் பெருமாளைக் கட்டாயம் அடையலாம். எட்டாததை மற்ற எந்த உபாயங்களாலும் அடைய முடியாததை, அடைய, அடைவதற்கு, (தேவையானது) எட்டு எட்டு அக்ஷரங்கள் கொண்ட திருவஷ்டாக்ஷரம். எட்டில் எத்தனையோ இருக்கின்றன எல்லாம் நல்லவையே இது தெரியமா?

மாமானருக்கு - மாப்பிள்ளை - மாமனார்.

### இது என்ன? — விடை

இது என்ன இடம் காலியா யிருந்ததோ என்னமோ இதைப் போட்டு வெச்சிருக்கா என்று தோன்றி யிருக்கும். இதென்ன தலை கீழாய் இருக்கிறதே என்று பக்கத்திலிருப்பவர் கேட்டிருப்பார். ஆமாம் என்ன சொல்வது! ஏதோ அச்சுப் பிழையாக இருக்கலாமோ! ஏன் இருக்கக்கூடாது என்று பதில் சொல்லிருக்கலாம். அப்படியா கீழே என்னமோ எழுதியிருக்கே அது என்ன! என்று பார்வை போயிருக்கும். நாம் பார்ப்பதற்கு ஏத்தாப்போல் இது என்ன? என்று எழுதியிருந்தால் முதலெழுந்த ஸந்தேஹங்கள் எல்லாம் போயிருக்கும். இது என்ன-வேண்டுமென்றே போட்டிருக்காப்போலே யிருக்கு, ஒன்றும் புரியல்லையே என்று சொல்லியிருப்பீர்கள். மரத்தை ஒருத்தர் தலை கீழாகப் போடுவாளோ! என்னமோ காலம் கலியோல்லியோ எது தான் நேரேயிருக்கு கலி காலத்திலே எல்லாம் தலை கீழ் தானே! இதைத் தான் நமக்கு உறைக்கும் படியா ஸேவை காண்பிக்கிறது என்று சொல்லியிருக்கலாம். இன்னும் என்ன என்ன தோன்றுகிறதோ யோசியுங்கள்.





## நித்ய கர்மங்கள்

### [திருவாராதனத்துக்கு வேண்டிய விஷயங்கள்.]

1. ஆராதனம் செய்ய ஆசையாயிருக்கின்றது என்றால் அவர்கள் முதன் முதலில் அவர்களுடைய ஆசார்யர்களைப்பார்த்து ஸேவித்து உபதேசம் பெற்று ஆரம்பிக்க வேண்டும். அப்படி ஆசாரியன் இருக்கு மிடத்துக்கு பல காரணங்களால் போக முடியவில்லை யென்றால் ஆசாரியனிடம் அனுமதி பெற்று நல்ல ஆசாரானுஷ்டான முடையவர்களிடத்தில் உபதேசத்தைப் பெறலாம். மந்திரத்தை பெரியவாளிடம கேட்டால் பலனதிகம்.

2. நமது ஜாதியென்ன நமது ஆசிரமமென்ன என்பதைப் பார்த்து ஐந்தில்மூன்று பழுதில்லாமல் நடந்துக்கொள்ள வேண்டும், தவறி நடந்தால் உபசாரம் செய்யப் போய் அபசாரத்தை ஸம்பாதித்ததாகும்.

3. வெளிப்படையானவஸ்துக்களை ஆடம்பரமாய் சேர்ப்பதே ஆராதனமாகாது. ஆராதனம் என்பது மனதின் காரியம். மானஸிகாராதனத்தை பூர்த்தியாய் பண்ணிவிட்டால் தான் ஆராதனம் பூர்த்தியாகும்.

4. மார்கழிமாஸாராதனத்தைத் தவிற மற்ற ஆராதனங்களைப் பண்ண வேண்டுமானால் ஆராதனம் செய்வதற்குமுன்பு மாத்யான்ஹிகம் பண்ணியே யாக வேண்டும்.

5. பெருமாளுடைய ஆராதனத்துக்கு சுத்தமான தீர்த்தத்தை உபயோகிக்க வேண்டும். சுத்தம் என்பதை சாஸ்திரங்களை கொண்டு அறியலாம். கங்கையாயிற்றே என்ன தோஷம் என்று கண்ட ஜலத்தையும் உபயோகப் படுத்துவது அபசாரம்.

6. அஸௌகரிய காலங்களில் பெருமாளுக்கு மனஸினால் தளிகை ஸமர்பித்து விடலாம்.

7. பெருமாளுக்கு நிவேதனம் செய்யாமல் எதையும் சாப்பிடக்கூடாது. ஆகையினால் ராத்திரி காலங்களில் மனஸாலே பெருமாளுக்கு தளிகை ஸமர்பிப்பது நல்லது.

8. ஆராதனம் பண்ணுவது ஆயிரம் அச்வமேதயாகங்களுக்கு ஸமானமாகும்.

9. திருவாராதனத்துக்கு துளஸி முக்கியம் துளஸியை மந்திரம் சொல்லித்தான் க்ரஹிக்க வேண்டும். செடியை கிளைகிளையாய் உடைக்கக்கூடாது. நகம் படாமல் இரண்டு அல்லது நான்கு தளங்கள் இருக்கும்படியாக க்ரஹிக்கவேண்டும்.

10. தநுர்மாஸாராதனம் மிகவும் விசேஷம்,

# வேண்டுவன – விலக்குவன

### தானம்

நல்ல காரியங்களில் தானம் என்பது ஒன்று. எத்தனையோ தர்மங்கள் இருக்கின்றன. ஆனால் தானத்துக்கு நிகரான தர்மமே கிடையாது. எதாகிலும் தான தர்மங்கள் செய்வதுண்டா என்று கூறுகிறோம்.

தானம் செய்யாவிட்டால் எந்த வைதிக கர்மமும் பூர்த்தியாவதில்லை. தன்னாலியன்றவரை தானம் செய்தல் அவசியம். ஒரு சொத்தை மற்றொருவருக்கு கொடுப்பதென்றால் மனம் வருமா? அம்மனத்தன்மையை உள்ளடக்கிவிட்டால் அவனே உலகை ஜெயித்தவன்.

தானம் செய்தால் பாபங்கள் தொலைகின்றன. நல்ல பாத்திரத்தில் தானம் செய்தால் தான் அதுவும். தெருவிலே போகிறவனுக்கு அழைத்துக் கொடுத்தால் அது தானமாகாது. ஏதோ கருணை கார்யங்களில் அது ஒன்றாயிருக்கலாம். அபாத்திரத்தில் கொடுக்காதே என்றும் சொல்லுவர். சாம்பலில் நெய்வார்த்த மாதிரிசெய்யும் தானம் வீணேயாம்.

தானம் செய்வது என்பது மந்திரத்தை சொல்லி ஜலம் வார்த்து ஸங்கல்பித்து விடுவதேயாம். இதை வாங்கி இதனால் உண்டாகும் பாவங்களைத்தொலைக்கத் திறமையுடையவன்தான் வாங்கலாம். தானம் வாங்கத் தயங்குவர் பெரியோர்.

### லோபம்

ஆசையென்பது ஆளை அல்லல் படுத்திவிடுகிறது. ஆசையில் திட்டம் வேண்டும். அதிகமாகப் பெருகுமானால் தான் ஆபத்து. இதைத்தான் லோபம் என்று சொல்கிறோம்.

லோபம் நமக்கு ஏற்பட்ட சத்துரு. இது இருந்து விட்டால் இதைத்தான் செய்யலாம் இதை செய்யலாகாது என்ற விவேகம் எப்படியும் பார்க்கவும் முடியாமற் போய்விடுகிறது தன்னைப் பார்ப்பதில்லை, தனது குலதர்மங்களைப் பார்ப்பதில்லை.

கையிலிருந்து எதையும் கொடுக்க எண்ணம் உண்டாவதில்லை, எங்கு எது இருந்தாலும் அதையும் அசலார் பெற மனம் தாளுவதில்லை. தன்னிடத்தில் இருப்பதை வைத்துக் கொண்டு தானும் அனுபவிப்பதில்லை. இப்படிப்பட்டது ஒன்று இருக்குமானால் ஸமூஹவாழ்க்கை எப்படிச் சீர்பெறும்? ஆகையினால் லோபம் என்பது சத்துருவாகின்றது. பிறருக்கு லோபமுடையவர்களால் பயன் இல்லை என்பது மட்டுமில்லை. யார் இந்த குணத்தை ஆராதிக்கின்றாரோ அவர்களுக்கேதான் சத்துருவாகின்றது. லோபத்தினால் எத்தகைய லாபமுமில்லை. லோபம் ஒழியவேண்டும் லோகம் செழிக்க வேண்டும். லோபத்தை ஒழிப்பதற்கு நல்ல உபதேசங்களையும் கேட்டுவரவேண்டும்.

# செய்திகள்!

198466

ரகுவம்சவ்யாக்யான

## அரங்கேற்று விழா

26-11-53ல் சென்னையில் ஸம்ஸ்க்ருத ஸமிதியின் சார்பில் இவ்வரங்கேற்று விழா நடைபெற்றது. இதன் சிறப்பை என்னென்று சொல்வது? தென்னாடும் வடநாடும் இரண்டுத்தேனும் தினையும் கலந்தாப்போல் திண்ணமாய்ச் சுவைத்த விழா இது.

ஸம்ஸ்க்ருதம் என்று பாஷை ஒன்று உண்டு என்று அருமையாய்ச் சொல்லிகொள்ளத் தக்க நாளில் ஸம்ஸ்க்ருதத்தைப் போன்ற பாஷையே கிடையாது என்பதோர் எண்ணம் நிலவச் செய்கின்றது இவர்களது ஸம்ஸ்க்ருத ஸமிதி.

நம் தேசிகதர்சநரத்னமாம் வி. வி. ஸ்வாமியைப்பற்றி அறியாதாரிலர். ஆனால் ஸம்பிரதாயத்தில் ரத்னதீபம் என்று எண்ணியிருந்தோம், ஸம்ஸ்க்ருத ஸாம்ராஜ்யத்திலும் வி. வி. ஸ்வாமி விசிஷ்டரத்ன தீபமாய் விளங்குகின்றார் என்பதைக் கேட்க வியக்காமலிருக்க வியலுமோ!

ரகுவம்சத்தைப்பற்றி எதைக் கூறினும் சிறிதேயாம். ஆனால் அதற்கு வெங்கடராகவாச்சாரியர் ஸ்வாமி விசேஷ பரிச்ரமத்தோடு வித்துவான்களும் வியக்கும் வகையில் வியாக்யானம் வரைந்தது முற்றிலும் போற்றத்தக்கது. இதை ரகுவம்சமே ஈடு கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

காளிதாஸன் அரசஸபையிலே இருந்து வந்த கவி. அவன் காவியத்தை அவர்கள் கேட்டு மகிழ்வர். அவன் காவிய வ்யாக்யானத்துக்கும் அன்னிலை ஏற்பட்டதைத்தான் வியந்துமாளவில்லை. ராஜ்ய துரந்தரரான ஸ்ரீ ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் தலைமைவஹித்தாரென்றால், அவன் காவியத்தின் சிறப்பிற்கு இணையான சிறப்பைப்பெற்றது இவ்வுரை என்று திடமாய்ச் சொல்வோம். அரசகாவியத்துக்கு அரங்கேற்றம் நடந்தால் எத்தனை உயர்ந்த நீதிபதிகள்! எவ்வளவு பத்திரிகையாசிரியர்கள், எத்தனை வாக்காளர்கள்! இத்தனை படித்தவர்களை ஸமிதி, ஏன் ரஸிக ரஞ்ஜனித்தான் பார்த்திருக்குமோ என்று இன்னும்கேள்வியோடுதான் இருக்கிறது.

இத்தனைக்கும் குன்றாத முயற்சியோடு குன்றின் மேலிட்ட விளக்கைப்போல் இப்புத்தகத்தைப் பதிப்பித்துபிரசுரித்த லிடில்வ்ளவர் க்ருஷ்ணஸ்வாமி சர்மா ஸ்வாமிக்கு எத்தனை கைம்மாறும் சிறு மலரத்தனையே யாகும் என்பது எமது உறுதி. ரஸிகர்கள் வாழவேண்டும். அறம் நிலைக்க வேண்டும். அதுவே எமது ப்ரார்த்தனை.




பங்கஜம்:— வா இந்திரா! உட்காரு பண்டிகைகள் எல்லாம் நன்ரு நட.ந்ததோல்லியோ?

இந்திரா:— உங்கள் ஆசீர்வாதத்திலே எல்லாம் நன்ருகவே நடந்தது. தீபாவளியோடு கார்த்திகையா ஒரு கல்யாண கோலம் தான். இப்பொழுது தான் மழை பேஞ்சு ஓஞ்ச மாதிரி இருக்கு அதனுல் தான் ஓங்களைப் பார்க்க முடிஞ்சுது.

பங்கஜம்:—இப்பத்தான் ஓஞ்சுடுத்தா என்ன? மார்கழி மாதம் இரைச்சலிட்டுண்டு வறது. உங்கள் ஆத்தில் தநுர்மாஸம் பண்றது உண்டோல்லியோ?

இங்:—என்னமோ இதுவரை வெச்சிக்கல்லே. எல்லாத்தையும் வைச்சுண்டா கஷ்டம் தானே!

பங்:—என்ன அஸௌகரியமோ! புருஷாளைக் கேட்டாதானெதெரியும், போகட்டும்.மார்கழி மாஸத்திலே பிம்மாலையா எழுந்துபெருமாளுக்கு ஆராதனம் ஒருநாள் பண்ணிஞலும் ஒரு வருஷ ஆராதனத்தின் பலம் உண்டு என்று சொல்லுவா பெரியவா,

இங்:— அதென்ன இந்த மார்கழி மாஸத்துக்கு விசேஷம்? இந்த மாஸத்தை சூன்ய மாஸம்னு வேறே சொல்ருளே? கல்யாணம் கார்த்திகை என்கிற மாதிரி ஏதாவது ஒன்று உண்டா?

பங்:—நன்ன கேட்டே! வேறே காரணம் இருந்தாலும் சூன்ய மாஸம்னு ஏன் சொல்ரான்னு நீயே யோசித்துப்பாரு மனைவாங்கணும் வீடுகட்டணும், நிலம் வாங்கணும் நாத்துவிடணும். பெண்ணைப் பார்க்கணும், பிள்ளையைத் தேடணும் னுல்லாம் ஓயாமே ஒன்று மாத்தி ஒன்னு சொல்லிண்டேயிருந்தா என்னிக்கித்தான் இந்த அலை ஓயும். ஒன்னும் செய்யக்கூடாதுன்னு வெச்சுட்டா எவ்வளவு நல்லது பாரு. பெண் பார்ப்பதற்குக்கூட தை பிறக்கட்டும் அப்பறம் யோசிப்போம். இப்பொ ஏதுக்கு அந்த வார்த்தைன்னு சொல்லும்படியா இருந்தா எவ்வளவு மனஸ்ஸுக்கு ஓய்வு பாரு. இத்தைப் பண்ணுவோமா அத்தைப் பண்ணுவோமா இப்படியா! அப்படியா? என்று யோசனை கூட பிற்பாடு பாத்துக்குவோம் என்று சொன்னல் எவ்வளவு நிம்மதி. நீ தான் பாத்துண்டிருக்ககே-தெய்வாதீனமாக ஸீமந்தம் ஒன்று பண்ணியே யாகணும்னு பண்ணுலாமே யொழிய வேறென்றும் கூடாதென்று. இந்த ஒரு மாஸத்தை வீணுகப் போக்கலாமா! பெருமாளை ஆராதித்தால் எவ்வளவு நல்லது!

இங்:—அது சரிதான், நித்யப்படியில்தான் பெருமாளை ஆராதிக்கிரு. இந்த மாஸத்திலே தனியா விசேஷம் என்ன இருக்குமோ! நமக்கு என்ன தெரியரது?

பங்:—நான் என்னமோ சொல்லணும்னு ஆரம்பிச்சேன். என்னமோ சொல்லிண்டிருக்கேன்பாரு. மார்கழி மாஸத்தின் பெருமையைத் தான் சொல்ல வந்தேன். கேட்டுக்கோ இந்திரா? மார்கழி மாஸம் தான் மாஸங்கள் எல்லாத்திலும் ஒசந்தது. கீதையிலே மார்கழி மாஸம் நானே என்று பெருமாள் சொன்னுராம். அவரே அப்படிச் சொன்னபொழுது அந்த மாஸத்திலே அவரை ஆராதிக்கிறது விசேஷம் தானே!

இங்:—அப்படியா! எனக்குத் தெரியாதே! ஏன் பாட்டி! பிம்மாலை ஆராதனம் பண்ருளே ஏன்?

பங்:—அதற்காஎவ்வளவோ சொல்லுவா. ஒண்ணுரெண்டு மாத்திரம் நெனைவுக்கு வறது சொல்றேன்... ஒரு நாளில் பார்த்துக்கோ-இந்த பிம்மாலையைப்போல் நல்லவேளை கிடைப்பதே கஷ்டம். உடம்பிலே சக்தி, மனஸ்ஸிலே நிச்சிந்தை,ஞானத்திலேஊட்டம்எல்லாம் உண்டாகிற ஸமயம். எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் ஸுலபமாய் கிரகிப்பதற்குத் தகுந்த நல்லவேளை இது. இத்தை ஸாதாரணமாய் சொன்னேன். பெரியவா சொல்லுவா - நமக்கு ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு தினமாம். உத்தராயணம் பகல் தக்ஷிணுயனம் ராத்திரி. தைபிறந்தாத்தான் உத்தராயணம் பிறந்து விடுகிறதே. உத்தராயணம்னு பகல்தானே. அப்போ மார்கழி தக்ஷிணுயனம் முடியும் மாஸமானதால் பிம்மாலையாறது. நம்மைப் போலவே தேவர்களுக்கும் மனஸில் ஸந்தோஷம், இருக்குமோல்லியோ, அதனுல் தான் நாம் பிம்மாலையிலேயே ஆராதனம் பண்ணணும்னு சொல்லுவா. தர்ம சாஸ்திரம் கூட அப்படியே ஆராதனம் பண்ணியாகணும்னும் சொல்றதாம்.

இங்:—அப்படியா!... ஏன் பாட்டி! திருப்பாவைன்னெல்லாம் சொல்ருளே, அது ஏன்? கோவிலுக்குப் போரு பொங்கல் கொடுக்கிரு. அது ஒன்றுதானே எங்களுக்குத் தெரியறது!

பங்:-நீ நல்ல பெண்ணம்மா? என்னமோகேட்டோம்என்னமோசொன்னுள்னு போகாமே மேலே மேலே ஆசையோடு தெருஞ்சக்கணும்னு கேழ்க்கறே. அத்தோடே நாலு பேரையும் அழைச்சுண்டு வந்துட்டே. கட்டாயம் சொல்றேன்.

இங்:—அலுப்பில்லாமல் ஆசையோடு நீங்க இப்படி சொல்றதைக் கேட்க நாலுபேரென்ன பாட்டி நாலு லக்ஷமும் வருவாளே!

பங்:—எனக்கென்னம்மா வயசு ஆச்சு, கண்ணை முடறத்துக்குள்ளே ஏதோ அவன் பேரை சொல்லிண்டு இருந்தாப்போதும். எனக்கு பேர் வேணுமா? பணம் வேணுமா? போகட்டும் நீ கேட்டுக்கோ

ஸ்ரீவில்லி புத்தூர் என்று ஒரு ஊர் உண்டு. அங்கே வடபத்ரசாயி பெருமாள் எழுந்தருளி யிருக்கிருர். பல ஆண்டுகளுக்கு முன்னே பல்லாண்டு பாடின பெரியாழ்வார் அந்த ஊரிலே அவதரித்தார். ஸ்ரீ விஷ்ணு சித்தர் என்றும் அவருக்குப் பெயர் உண்டு. அவ்வாழ்வார் வைதிகராயிருந்து நந்தனவன கைங்கர்யத்திலே ஈடுபட்டு நித்யம் திருமாலுக்கு மாலை சாற்றிவந்தார். மாலின் அருள் பெருக்கிஞலே பூந்தோட்டத்தில் துளஸிச்செடிகளின் நடுவில் ஓர் குழந்தை இருப்பதைக் கண்டார். பெருமாளின் அநுக்ரஹம் என்று எண்ணி அந்தகுழந்தையை எடுத்து வளர்த்து வந்தார். அவள் தான் பூங்கோதை. பெரியவள் ஆனுள் பெருமாளையே கல்யாணம் பண்ணிக்கொள்வேன் என்று விரதமிருந்து கோடித்து ரங்கநாதனைக் கலியாணம் செய்துக்கொண்டாள். இவளுக்குத் தான் சூ... கொடுத்த நாச்சியார் என்றும் ... டாள் என்றும் பெயர்கள் ...

வர். இவள் எப்படி வ்ரதம் செய்தாள் என்பதைக் காட்டுவதுதான் திருப்பாவை. திருப்பாவையைச் சொல்லி பெருமாளை ஸேவித்தால் கட்டாயம் பெருமாள் அருள்புரியும்.

இங்:—ஆண்டாள் நோன்பு நோற்றாள் என்று சொன்னேங்களே, அது எப்படி? கொஞ்சம் சொல்ல முடியுமா?

பங்:—சொல்றேன் கேள்:-கண்ணன் கோகுலத்தில் இருந்தபொழுது கோபஸ்த்ரீகள் எல்லாம் கண்ணனைக் கண்ணாய் பாவித்து வந்தனர். கடைசியில் அக்கன்னிகைகள் எல்லாம் அவனையே கலியாணம்பண்ணிக்கொள்ள வேண்டும் என்று எண்ணினர். கலியாணம் இலகுவில் ஆய்விடுமா? எல்லோரும் மார்கழி மாஸத்திலே யமுனைக்குச்சென்று நீராடி காத்யாயனியை வேண்டிக்கொண்டனர். நந்தகோபன் மகன் தனக்குச்சென்று நீராடி காத்யாயனியைவேண்டிக்கொண்டனர். நந்தகோபன் மகன் தனக்குப் பதியாக வேண்டுமென்று மன்றாடினர். அவர்கள் செய்த மாதிரியே ஆண்டாளும் நோன்பு நோற்றாள் என்று சொல்வர்.

இங்கே இன்னொரு கதையும் உண்டு. கண்ணன் பெண்களோடு விளையாடிவருவது ஆயர்ப்பாடியில் அனேக பெரியவர்களுக்குப் பிடிக்கவில்லையாம். எல்லா பெண்களையும் அவா அவா ஆத்திலே கட்டுப்பண்ண ஆரம்பித்து விட்டாளாம். ஒருத்தியும் வராது போகவே கண்ணனுக்கு கோபம் உண்டாகி மழையில்லாமல் செய்து விட்டானாம்; இதைப் பார்த்த பெரியார்கள் இனி மழைக்கு வழி என்ன என்று யோசித்து பெண்களை நோன்ப நோற்கும்படி சொன்னார்களா கண்
ன் அவர்களுக்கு உதவி செய்து
வே யிருந்து நடத்திவைப்பது
து வேறுவழியில்லை என்றும்
வே பெரியோர்கள் ஸம்
ண்ணனை கட்டிலிருந்து விட்டனராம் அப்பொழுது அங்குள்ள ஆயக் கன்னிகைகள் எப்படி நோன்பு நோற்றார்களோ அப்படிதான் ஆண்டாளும் கண்ணனையடைய நோற்றாள் என்றும் சொல்வார்கள்.

இங்,—அப்புறம்

பங்!—அப்புறம் என்ன? திருப்பாவையின் அழகைச் சொல்லுவா பார்த்துக்கோ இவ்வளவு அவ்வளவுன்னு இல்லை. ராமாயணத்தைப்போலே எத்தனை பேர் எத்தனை தடவை சொன்னாலும் அவ்வளவு ஆச்சரியமாகத் தான் இருக்கும்.

இங்:—திருப்பாவையிலே என்ன சொல்லியிருக்கு? கொஞ்சம் சுருக்கமா சொல்ல முடியுமா?

பங்:—கேழ்க்கிறவாள் இருந்தா சொல்ற வாளுக்குஎன்னகஷ்டம்! திருப்பாவையிலே முப்பது பாட்டு மாஸம் முப்பது நாளைக்கும். முப்பது பாட்டு எவ்வளவு திட்டமாயிருக்கு மார்கழி மாதத்தில் நீராடுவீர் நாராயணனே நமக்கே பறைதருவான் என்று முதல் பாட்டில்சொன்னாள். செய்யும் கிரிசைகளை இரண்டிலும் பாவைக்குச் சாத்தி நீராடினால் கிடைக்கும் பயனை மூன்றிலும், நீராட மழையை உலகினிற் பெய்திடாய் என்று நான்கிலும், நீராடுவதோடு தாமோதரனை வாயினாற்பாட பிழையும் தீயினில் தூசாகும் என்றும் சொன்னாள் (ஆறு முதல் பதினைந்து வரை ஆய்ச்சிகளை எழுப்பும் பாணியில்) விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ எழுந்திராய் என்றும், தயிரரவம் ரேட்டிலையோ என்று போகின்றாரைப் போகாமற் காத்து உன்னைக்கூவுவான் வந்து நின்றோம் பாவாய் எழுந்திராய் என்றும் மாமீரவளை எழுப்பீரோ என்றும் தேற்றமாய் வந்து திறவேல் என்றும் நின்மூத்தும் புகுந்து முகில் வண்ணன் பேர்பாட நீ எற்றுக்குறங்



கும் பொருள் என்றும் மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய் ஈதென்ன பேருறக்கம் என்றும் நீ நன்னாளாய் கள்ளம் தவிர்ந்து கலந்து என்றும் எங்களை முன்னம் எழுப்புவான்வாய் பேசும் நங்காய் எழுந்திராய் என்றும் எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள் என்றும் பதினைந்திலும் (எழுப்பி) தூயோமாய் வந்தோம் நேசநிலைக்கதவம் நீக்கு என்றும் எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய் என்றும் நந்தகோபாலன்மருமகளேநப்பின்னாய் சீரார்வளை யொலிப்பவந்து திறவாய் என்றும் நப்பின்னைக் கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய் என்றும் உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை இப்போதே எம்மை நீராட்டும் என்றும், ஆற்றாது வந்துன்னடி பணியுமாபோலே போற்ற யாம் வந்தோம் என்றும் நின்பள்ளிக் கட்டிற்கீழே சங்க மிருப்பார் போல் வந்து தலைப் பெய்தோம் என்றும், சீரிய சிங்காஸனத்திருந்து யாம் வந்த காரியமாராய்ந்தருள் என்றும், உன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான் இன்று யாம் வந்தோம் இரங்கு என்றும், வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து என்றும், மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல் என்றும், கூடியிருந்து குளிர்ந்து என்றும், சீறியருளாதே இறைவா நீ தாராய் பறையென்றும், உனக்கே நாமாட்செய்வோம் மற்றை நங்காமங்கள் மாற்று என்றும், எங்கும் திருவருள் பெற்றின்புறுவர் என்றும் இத் திருப்பாவையிலே ஆண்டாள் சொன்னாள்.

**இங்**:—என்ன அழகா எனக்கும் புரியும்படியாகச் சொன்னேங்கோ பாட்டி! இப்பொழுதுதான் ஞாபகம் வருகிறது இந்த மாஸத்திலேதானே முக்கோடி ஏகாதசி வருகிறது? அதைப்பற்றியும் ஏதாகிலும் பெருமைகள் உண்டா?

**பங்**:—நன்றாயிருக்கு.விடாதே கேட்டுட்டேயே. முன்னமே நினைச்சேன் சொல்லணும்னு. நல்ல வேளை.ஏகாதசியின் பெருமை நம்மால் சொல்ல முடியுமா? ஏகாதசியினால் பகவானுக்கு உண்டாகும் ஸந்தோஷத்துக்கு அளவே கிடையாது. கோடி வ்ரதமிருந்தாலும் ஒரு ஏகாதசிக்கு ஸமானமாகாது.

**இங்**:—அப்படியா? ஏகாதசின்னா என்ன? முதல் முதல்லே ஏகாதசி எப்படி உண்டாயிற்று?

**பங்**:—அதையேன் கேக்கறே! கதையாய் சொன்னா பத்மா பாட்டி. முன் காலத்திலே க்ருதயுகத்திலே முரன் என்று ஓர் அஸுரன் இருந்தானாம். தேவர்கள் அவனைக் கண்டால் நடுங்குவராம். இந்திரனைக் கூட ஜெயித்து விட்டான் அந்த முரன். ஸ்வர்கத்திலே ஒரு தேவரையும் பார்க்கமுடியாமல் செய்து விட்டான். இந்திரனுள்ளிட்ட தேவரெல்லாம் சிவனிடம் சென்று இந்த பரிதாப நிலையிலுள்ள நாங்க்ள் பிழைப்பதற்கு ஏதாகிலும் உபாயம் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்களாம். சரண்யனான நம் பெருமாளிடத்திலே போனால் அவர் உங்களைக் காப்பாற்றுவார் என்று சிவன் சொல்லவே இந்திரன் திருப்பாற்கடலுக்குச் சென்று பெருமாளை ஸ்தோத்திரம் பண்ணினான். நீ தான் சரணம் என்று சொன்னதைக் கேட்டு நம்பெருமாள் கேட்டார.

அந்த அஸுரன் யார்? அவன் பலம் என்ன? அவன் எங்கே இருக்கிறான்! அவன் பராக்ரமம் தான் என்ன? என்று கேட்டார்: இந்திரன் சொன்னான். முன் காலத்திலே ப்ரம்ஹவம்சத்திலே தாலஜங்கன் என்று ஒரு ஆஸுரன் இருந்தான் அவன்பிள்ளையேஇந்தமுரன்.சந்த்ரா

வதீ பட்டணத்திலே இருக்கிறான் அவன்வேறு இந்திரனையும் ஏற்பாடு செய்துவிட்டான். வாயு வருணன் சந்திரன் ஸூரியன் எல்லோருமே மாறிவிட்டார்கள். இதைக் கேட்ட பெருமாளுக்கு கோபம் வந்துவிட்டதாம். இப்பொழுதே அவனைக் கொல்வேன். என்று கிளம்பி சந்திராவதி பட்டணத்துக்கு வந்துவிட்டார் யுத்தத்துக்கு ஆரம்பித்து விட்டார். அது ஏதோ ஆயிரக்கணக்கான வருஷங்கள் யுத்தம் ஓயந்தபாடில்லை. தேவர்கள் அழிந்துவிட்டனர். சிந்தையுற்ற விஷ்ணு பதரிகாச்ரமம் சென்று 12யோஜனை விஸ்தீரணமுள்ள ஸிம்ஹாவதீ என்கிற ஒரே வழியையுடைய குகையில் களைத்தும் போய் யோகமாயையினால் படுத்தார். முரனும் விடாது ஓடினான். குகைக்குள்ளேயும் புகுந்தான். படுத்திருப்பதைப் பார்த்து ஸந்தோஷப்பட்டு அஸுரர்களுக்கு பயத்தைக் கொடுக்கும் இந்த விஷ்ணுவை, இப்பொழுதேகொன்றுவிடுவேன் என்று கிட்டே வந்தபொழுது என்ன ஆச்சரியம் பாரு பெருமாளுடைய உடம்பிலிருந்து ஒரு பெண் உண்டானாள். அவ்வளவு அழகு! ஆயுதங்களையும் ஏந்தி வந்த அவள் என்னுடன் சண்டைக்கு வா என்று அழைத்தாள் அப்பெண் பிரமாதமாக சண்டைப்போடுகிறாள் ஒரு ஹூங்காரத்திலேயே அந்த அஸுரரன் சாம்பலாய்ப்போனான் அப்புறம் பெருமாளும் எழுந்துட்டார். ஏதும்தெரியாதவர்போல் முரன் விழுந்திருப்பதைப் பார்த்து என்னை ஜெயித்தவனை யார் ஜெயித்தது? என்று கேட்டார் அப்பொழுது பக்கதிலிருந்த அந்தப் பெண் உமது அருளாலே நான்தான் கொன்றேன் என்றாள் பெருமாள் ஆச்சரியப்பட்டு உனக்கு என்ன வரம் வேணுமோ கேள் என்று சொல்ல அந்த பெண்ணும் கேட்டாள். நீர் கொடுப்பது உண்மையானால் இந்த மூன்று வார்த்தையும் நிஜமாக வேண்டும். நான் மூன்று லோகங்களிலும் நாலு யுகங்களிலும் **ஸர்வபுண்ணியதீர்த்தங்களைக் காட்டிலும் சிறந்தவளாயும்,** 2ஸர்வ விக்னங்களையும். அழிப்பவளாயும் **ஸர்வஸித்திகளையும் கொடுப்பவளாயும்** உமதுஅருளாலேயாகவேண்டும் என்றாள். மூன்று லோகத்திலும் ஸர்வ ஸித்திகளைக் கொடுப்பவளாய் உபவாஸமாயிருப்பவர்களுக்கு பணம் தர்மம் மோக்ஷங்களை நீ கொடுத்தாகவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டாள். பெருமாளும் நீ சொல்வதெல்லாம் அப்படியேயாகும் என்று அநுக்ரஹம் பண்ணினார். அந்த பெண்யார் தெரியுமா அவள் தான் **ஏகாதசி.** அதிலேருந்து ஏகாதசி வ்ரதம் அவ்வளவு ஓசத்தியா நடக்கிறது பார்த்துக்கோ.

இங்:— என்னமா சொன்னங்கோ! கேழ்க்க கேழ்க்க இங்கேயே இருந்துடலா மான்னு தோணறது ஏம்பாட்டி! ஒரு மாஸத்துக்கு ரெண்டு ஏகாதசி வறது, எல்லாத்துக்குமா இவ்வளவு பெருமை!

பங்:—ஆமாம் சுக்ல பக்ஷ ஏகாதசி ஓசந்தது, க்ருஷ்ண பக்ஷ ஏகாதசி குறைஞ்சதுன்னு கிடையவே கிடையாதம்மா.

இங்:—முக்கோடி ஏகாதசி மாத்திரம் ரொம்ப ஓசந்தது என்று சொல்றாளே அது ஏன் பாட்டி?

பங்:-இப்படித் தானே கேட்கணும்! ஒன்றும் குறைஞ்சதில்லை. ஆனால் ஒவ்வொரு ஏகாதசிக்கு ஒவ்வொரு பலம் ;சொல்லுவா பாத்துக்கோ இதெல்லாம் பத்மா பாட்டியைக் கேட்டா அப்படிச் சொல்லுவள்! முக்கோடி ஏகாதசிக்கு என்ன பெருமை பாரு!கேட்டா கூடபாபம்போகும்னு சொல்லுவா மார்கழி மாஸ சுக்ல பக்ஷத்தில்வரும் ஏகாதசிக்கு, வைகுண்ட ஏகாதசி என்று பெயர். இந்த ஏகாதசியில் உபவாஸம் இருந்தால் மோக்ஷம் கிடைக்குமாம் ஆகையினால்தான் இதுக்கு அந்தபெயர். இங்கே ஒரு



அழகான கதையுண்டு. சம்பகப் பட்டிணத்திலே வைகானஸன் என்று ஒரு ராஜா இருந்தான். அவன் ரொம்ப நல்லவன். தர்மம் தவறாதவன். ஒருநாள் அவன் ஸ்வப்னத்திலே தனதுபெற்றோர்கள் எல்லாம் நரகத்தில் இருந்து தவிப்பதைப் பார்த்தான். காலையில் எழுந்திருந்து அந்தஸ்வப்னத்தை பிராம்மணர்களிடம் சொன்னான்:—என்தந்தை முதலானோர் என்னைப் பார்த்து'' நீ எனது பிள்ளையாயிற்றே! எங்களை கடைத்தேற்ற வேண்டாமா? என்று சொல்லி என்னைப் பார்த்து அழ ஆரம்பித்தார்கள். அதை நினைக்க எனக்கு சாந்தியே ஏற்படவில்லை. வீடுவாசல், நகரம் ராஜ்யம் பிள்ளை-மனைவிகள் ஒன்றும் பிடிக்கவில்லை. நான் என்ன செய்வேன்? எங்கே போவேன்? எப்படியாவது எனது பெற்றோர்கள் மோக்ஷத்தை அடைந்தால்போதும்! எனது மனதே நின்று விடும் போலுள்ளது ஏதாவது வழி சொல்லுங்கள் என்றான். அப்பொழுது பிராம்மணர்கள் சொன்னார்கள். பக்கத்திலேயே பர்வதன் என்ற முனிவருடைய ஆசிரமம் இருக்கிறது. அவரைக் கேட்டால் வழி சொல்வார் என்றனர். பிராம்மணர்களையும் அழைத்துக்கொண்டு அரசன் அங்கே போனான். மஹரிஷியை ஸேவித்தான். க்ஷேமலாபம் விசாரித்த பிறகு அரசன் தன் ஸமாசாரத்தைச் சொன்னான். அதற்கு அவர் சொன்னார் உன் தகப்பனார் ருதுகாலத்தில் அவரது மனைவியை தனியே கிராமத்தில் -விட்டு ஒரு வ்யவஸ்தையும் செய்யாமல் போய்விடவே இந்த நரகம் அவருக்கு ஸம்பவித்தது என்றும் அவர் மோக்ஷத்தை அடையவேண்டுமானால் மார்கழி மாஸ சுக்லபக்ஷ ஏகாதசி வ்ரதத்தைச் செய்யவேண்டும் என்றும் சொன்னார். அப்படியே அரசனும் செய்தான். அதன் முன்னோர்களுக்கு வைகுண்ட வாசல் உடனே திறக்கப்பட்டது. அவ்வளவு பெருமை இந்தவைகுண்ட ஏகாதசிக்கு! இதை ஒவ்வொருத்தரும் செய்யணும் இதுபோலே கிடையவே கிடையாது வ்ரதம்.



இங்:—அதனால் முக்தி கொடுக்கும் இந்த ஏகாதசியை முக்கோடி ஏகாதசி என்று சொல்லுகிறாப் போல் இருக்கு. நீங்க சொல்றதை கேட்டால் எனக்கு மாத்திரமென்ன? எல்லாருக்குமே உபவாஸம் இருக்கணும்னு தான் பாட்டி தோணறது.

பங்:-ஸ்ரீரங்கத்திலே போய் பெருமானை ஸேவித்தா இன்னும் எவ்வளவோ புண்ணியம், ஸ்ரீரங்கம் மாத்திரமென்ன? எல்லா திவ்ய தேசத்திலும் முப்பத்து மூன்று கோடிதெவர்களும் ப்ரஸன்னர்களாகிஎல்லோருக்கும் பெருமாள் கருடாரூடனாய்! ஸேவை ஸாதிப்பர்.

இங்:-பாடி என்னமோ செய்றேமோ இல்லையோ கேட்டாமே அதுவே விசேஷம்தான். உங்களை ரொம்ப கஷ்டப்படுத்தி விட்டேன் ரொம்ப நாழியாச்சு நான் வரட்டுமா?

பங்:-அப்படியே செய். இந்த விஷயங்களை எடுத்துண்டா பசிதாகம் நாழி போது ஏதவது தெரியறதா என்ன? ரொம்ப ஸந்தோஷம் போய்வோ. இந்த வருஷம் மார்கழி மாஸம் முதல் தேதியே வைகுண்ட ஏகாதசி. தெரியுமோல்லியோ?

இங்:-அப்படியா

வித்துவத் ஸேவை

## நல்லோர் நினைவு

[ஸ்ரீமதுபய்வே சேட்லூர் நரஸிம்மாசாரியார் ஸ்வாமி திருவயிந்தை.]



நடு நாட்டுத் திருப்பதியில் அயிந்திரபுரம் என்னும் திவ்ய நகரத்தில் ஸ்வாமியின் அவதாரம். தேசிகன் போரவுகந்த புனித நகரம் இது. சுமார் 15 வருஷ காலங்கள் தேசிகன் அயிந்தையில் எழுந்தருளியிருந்தார் அந்த திவ்யதேசத்தில். முகுந்தனருள் தந்த பயன் பெற்றேன் யானே என் கிருர்ஸ்வாமி தேசிகன் வைபவத்தை நாலுபேருய்ய ஸங்கல்பித்துஸ்வாமியாய்தோன்றினன் என்ருல் மிகையாகாது.

தேசிகனையல்லால் மற்றைத் தேவும் ஒரு தேவோ? என்று ஸ்வாமியின் ஸித்தாந்தமாயிருக்கும். நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே என்பதை மெய்ப்படுத்தினர் நம் சேட்லூர் ஸ்வாமி. தேசிகனை இன்றைப உலகுக்கு காட்டிக் கொடுத்த உத்தபர் ஸ்வாமி. தான் நகரத்தில் இருந்தாலும் நாலு பேருய்ய நேரிடுமன்ரே என்று ஸங்கல்பித்து கௌணர்சாரத்தையும் மேற்கொள்ளும் மனப்பான்மை ஸ்வாமிக்கு இருக்குமாறல் தேசிகனை. உலகுக்குக்காண்பிப்பதில் எவ்வளவு ச்ரத்தைஸ்வாமிக்கு? தேசிகவிஜய கோஷம் பண்ணின உத்தமர். தேசிகதர்சனரத்நதீபங்

64 ம் பக்கம் பார்க்க



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனருளிச் செய்த

# பகவத் த்யாந ஸோபாநம்

முன் இதழ் தொடர்ச்சி

ஏகம் லீலோபஹிதமிதரம் பாஹுமாஜாநுலம்பம்
ப்ராப்தா ரங்கே சயிதுரகில ப்ரார்த்தநா பாரிஜாதம்,
த்ருப்தா ஸேயம் த்ருடநியமிதா ரச்மிபி: பூஷணாநாம்
சிந்தாஹஸ்திந்யநுபவதிமே சித்ரமாலாநயந்த்ரம். [7]

**பதவுரை :-** ரங்கே - அரங்கத்தில், சயிது :- படுத்துக்கொண்டிருக்கிற. (ரங்கநாதனுடைய லீலா - விளையாட்டுக்காக, உபஹிதம் தலையணையாய் வைக்கப்பட்ட) ஏகம் - ஒரு, பாஹும்-கையையும், ஆஜாநு - முழந்தாள் வரை, லம்பம் -தொங்கியிருப்பதான, இதரம் - வேறொரு, பாஹும் - கையையும்; அகில ஸமஸ்தமான, ப்ரார்த்தநா - பிரார்த்தனைக்கும், பாரிஜாதம் பாரிஜாதமெனப்படும் கல்பவ்ருக்ஷம் போன்றதுமான கையை, ப்ராப்தா-அடைந்ததாய், (அதனாலே) த்ருப்தா - தர்பம் கொண்டதாய், ஸேயம்-முன்பு எது அடக்க முடியாததொன்ருய் இருந்து இப்பொழுது இந்த நிலையில் உள்ளதோ அந்த இது பூஷணாநாம் - திருவாபரணங்களின் ரச்மிபி:- காந்திகளாலே, த்ருட - திடமாய், நியமிதா - கட்டப்பட்டதான மே - எனது, சிந்தா ஹஸ்திநீ - சிந்தை யென்னும் யானையானது. சித்ரம் - விசித்திரமான, ஆலாநயந்த்ரம் - யானைக்கட்டும கம்பத்தன்மையை அநுபவதி-அனுபவிக்கிறது.

### திருக்கைகள்

**கருத்து:-** திருமார்பில் திருவை ஸேவித்தால் தாபம் தொலைந்து. உடனே கைகளை நாடுகிறது மனது. கைகளின் அழகே அழகு என்ன சௌம்மோ இவ்வளவு தூக்கத்துக்கு? தூக்கம் உண்மையானல் தானே யோகநித்ரையில் இருப்பவன் லீலார்த்தமாக தலையணை யாக்கினன் ஓர் திருக்கையை. மற்றொரு திருக்கரம் முழங்கால் வரை நீண்டு அமைந்திருக்கிறது. ஆமாம் நான் தான் தாங்குகின்றேன. உங்களுக்கு ப்ராப்யமும் ப்ராபகமுமான திருவடிகள் ஜாகரூகமாய் இருக்கின்றன என்று காட்டுவது போல் இருக்கிறது அத்திருக்கை. அந்த கையின் பெருமையை என்ன

வென்று சொல்வோம். நாம் என்ன கேட்டாலும் கொடுக்கும் பாரிஜாதம் தானே, இது. அந்த கையில் சிக்கிக் கொண்டது என் சிந்தை என்கிறார். பாரிஜாத மரத்தடியில் இருப்பவர்கள் கம்பீர மாகத்தானே நிற்பர். திருவாபரணங்களின் காந்திகள் கூறு கூறுகளாய்ப் பாய்கின்றன. காந்தி இழுக்கிறது. மீறிவர முடியவில்லை. யானைபலம் பெற்ற எனது சிந்தை ஆலான யந்திரத்தில் கட்டப்பட்டிருத்தலை அனுபவித்து நிற்கிறது. சிந்தை ஒரு பெண்யானையாம். அது அரங்கன் கரங்களாகிற பாரிஜாத மரத்தில் திருவாபரண காந்திகளாகிற கயிறுகளால் திடமாய் கட்டப்பட்டதாம். மீறிவர முடியாமல் சுழன்றுச் சுழன்று வருகிறது இதுசித்திரமா யிருக்கின்றது என்கிறார் !! 7 !!

*ஸாபிப்ராய ஸ்மிதவிகஸிதம் சாரு பிம்பாதரோஷ்ட்டம்*
*துக்காபாய ப்ரணயினி ஜநே தூரதத்தாபிமுக்யம்,*
*காந்தம் வக்த்ரம் கநகதிலகாலங்க்ருதம் ரங்கபர்த்து:*
*ஸ்வாந்தே காடம் விலகதி மம ஸ்வாகதோதாரநேத்ரம்* [8]

**பதவுரை** :—ஸாபிப்ராய-அபிப்ராயத்துடன் கூடிய, ஸ்மித—புன்முறுவலினால், விகஸிதம் — மலர்ந்திருப்பதும், சாரு-அழகான, பிம்ப-கோவைப்பழம் போல் சிவந்த, அதரோஷ்ட்டம்-கீழ் உதடுகளையுடையதும், துக்க - துக்கத்தின், அபாய-போக்குவதில், ப்ரணயினி-விரும்பி பிரார்த்திக்கும் ஜநே - ப்ராணியினிடத்தில், தூர-தூரத்திலேயே, தத்த-கொடுக்கப்பட்ட, ஆபிமுக்யம்-முகங்காட்டுதலை யுடையதும், கனக அழகான, திலக-திலகத்தினால், அலங்க்ருதம்-அலங்கரிக்கப்பட்டதும், (ஆகையினாலேயே) காந்தம்-அழகானதும் ஸ்வாகத - வரவேற்பதில், உதார - முயற்சியோடு பெருமை பெறும், நேத்ரம்-திருக்கண்களையுடைது மான, ஸ்ரீ ரங்கபர்து : — ரங்கநாதனுடைய, வக்த்ரம்-திருமுகமண்டலமானது, மம - எனது, ஸ்வாந்தே – மனஸில், காடம்-த்ருடமாக, விலகதி-நிலை பெறுகிறது.

திருமுகமண்டலம்

**கருத்து**:— நாம் பெருமாளை ஸேவித்தால் அவன் நம்மை கடாக்ஷிப்பன். அவன் திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸேவிக்கப் பெறாதவர்கள் பாவிகள். அவன் திருமுக மண்டலத்தை ஸேவித்தால் வேறு என்ன வேண்டும்! அவன் திருமுகமண்டலம் அவ்வளவு அழகாய் இருக்கிறது. நம்மைபார்த்து அவன் சிரிக்கின்றான். என்ன சிரிப்போ! எங்கெங்கோ சென்று யார் யாரையோ நாடிப்போகாமல் இப்பொழுது வந்தீர்களே என்று எண்ணுகிறானோ என்னமோ! நம்மைப்பார்க்கின்ற பொழுதே ஏனோ அவன் ஒருவிதமாகச் சிரிக்கிறான். ஆனால் நம்மை அனுக்ரஹிப்பதற்குச் சிரிப்பது தான் அது. சிரித்த முகமாய இருந்தால்தானே நம்மால் ஸேவிக்கமுடிகிறது. புன் சிரிப்பு



பூத்திருக்கின்றது. அதிலும் அழகான கோவைப்பழம் போன்ற கீழ் உதடு இதன் அழகைச் சொல்ல யாரால் முடியும்! நம்தொல்லைத் தொலைந்தால் தேவலை. எப்பொழுது தொலையுமோ என்று ஒரே சிந்தை. இதை எப்படியாவது தொலைத்துக் கொள்ள நமக்கு இருக்கிற ஆசை இவ்வளவு என்று சொல்ல முடியாது. தொலைக்கிறதுக்குத்தான் வழி இல்லை. தெரியவில்லை. அப்படிப்பட்ட நம்மிடத்திலே தூரத்திலிருக்கின்றபொழுதே நமக்கு அபிமுகமாய் இருந்து நம்மை அழைக்கிறது இந்த திருமுக மண்டலம். இந்த அழகான திருமுக மண்டலத்தில் அழகான திலகம் தங்கத் திலகத்தின் அலங்காரத்தை என்னவென்று சொல்வது? நல்வரவு கூறி அழைக்கும் அக்கண்களின் பெருமையே பெருமை! இத்தகைய திருமுக மண்டலம் என் மனத்துள்ளே நன்கு லயித்து விட்டது என்கிறார். [8]

*மால்யைரந்தஸ்த்திர பரிமளை: வல்லபாஸ்பர்ச மாந்யை:*
*குப்யச்சோலீவசநகுடிலை: குந்தளைச் லிஷ்டமூலே,*
*ரத்நாபீடத்யுதிசபளிதே ரங்கபர்த்து: கிரீடே*
*ராஜந்வத்யஸ்த்திதிமதிகதா வ்ருத்தயஸ் சேதஸோமே* [9]

**பதவுரை** : மால்யை :- மாலைகளாலும், அந்தஸ்த்திர - உள்ளே ஸ்திரமான, பரிமளை :- வாஸனைகளையுடையதும், வல்லபா - பிராட்டி மார்களின், ஸ்பர்ச - கைசேர்த்தியினால், மான்யை :- கொண்டாடத்தக்கதும் குப்யத் கோபிக்கும், சோளீ - சோள தேசத்துப் பெண்களின் வசன வார்த்தைகளைப்போல், குடிலை: கோணியிருப்பதுமான, குந்தளை :-முன்னுச்சிமயிர்களால் ச்லிஷ்ட - சேர்ந்த, மூலே - அடிபாகத்தை யுடையதும், ரத்நாபீட - நவரத்னங்களினால் செய்யப்பட்ட திருமுடித் திருவாபரணங்களின், த்யுதி-காந்தியினால், சபளிதே - பழுத்த நிறம்பெற்ற, ரங்கபர்த்து:- ரங்கநாதனுடைய, கிரீடே - கிரீடத்தில், மே - எனது : சேதஸ :- மனதின் வ்ருத்தய: வியாபாரங்கள் ஸ்திதி - நல்ல நிலையை அதிகதா: அடைந்தனவாகி, ராஜன்வத்ய:, ராஜாவைப் பெற்றவைகளாயின.

கிரீடம்

**கருத்து**:—இதற்கும் மேல்படி ஒன்றுண்டு. அதுதான் திருமுடி. முடியிலே பாங்காய் அமைந்தது கிரீடம். கிரீடத்தில் மாலைகள் சாத்தப்பட்டிருக்கின்றன. அழகான மாலைகள். மாலையின் பரிமளத்தை என்னவென்று சொல்வது? கொஞ்ச நாழி வாசனையல்ல. அழியாத வாசனை. வாசனை உள்ளே கமழ்கிறது. சாதாரணமாலைகளல்லவே அவை! பூமகள் தொடுத்த மாலை. சூடிக்கொடுத்தவள் சூடிக்கொடுத்த மாலை அது. ரங்கத்திலே படுத்திருப்பவனுக்கு மங்கைகள் தொடுத்த மாலையென்றால் ஏனோ மோஹம் அதிகம் தான். அதிலும் அவர்கள் எடுத்துத தொடுத்த மாலையை கிரீடத்தின் மேலல்லவா சாத்

திக்கொள்ள வேணும். அவ்வளவு பெருமை அந்த மாலைக்கு. கிரீடத்தின் அடியிலே அழகான மயிர்ச்சுருள்கள் அதன் வாஸனை உள் நிறைந்திருக்கிறது. மேலும் ரங்கத்தில் அவர்கள் சுருட்டை மயிர்களை தனது விரல்களாலே தூக்கிவிட்டு முகமண்டலத்தின் அழகை அனுபவிப்பர் தேவிமார்கள். ஆக திருமுடியில் கேசங்களின் பெருமையைச் சொல்ல வியலாது. சோழ நாட்டுப் பெண்டுகள் நாயகன்களோடு கோபித்து நின்று அவர்கள் சொல்லும் கேளிக்கை வார்த்தைகள் கோணலாய் இருப்பதோடு அழகாயு மிருக்குமாம் அப்படியமைந்துளது குந்தலங்கள. மேலும் ரத்தினங்களிழைத்த திருவாபரணங்களின் காந்தியால் விசித்திரமாய் ஸேவையாகின்றது இந்த கிரீடம் என் மனப்போக்குகள் அங்கே தடைபட்டுவிட்டன. மேலே இஷ்டப்படி செல்ல இயலாமல் போயிற்று. கிரீடத்தைப் பெற்ற பொழுது கட்டுப்பட்டுத் தானேயாகவேண்டும். ஆராஜகம் இருந்தால் தான் தான்தோன்றிகளாகச் செல்வர் மாதர்கள். அந்த கிரீடத்தில் சென்ற மதிகள் அங்கேயே தடைபட்டு நின்று விளங்குகின்றன என்கிறார். 9

பாதாம் போஜம் ஸ்ப்ருசதிபஜதே ரங்கநாதஸ்ய ஜங்க்காம்
ஊருத்வந்த்வே விலகதி சநை ரூர்த்வ மப்யேதி நாபிம்
வக்ஷஸ்யாஸ்தே வலதி புஜயோர் மாமிகேயம் மநீஷா
வக்த்ராபிக்யாம் பிபதி வஹதே வாஸநாம் மௌளிபந்தே [10

**பதவுரை** :—மாமிகா - எனது இயம் - இந்த, மநீஷா — மனப்போக்கு ரங்கநாதஸ்ய — ரங்கநாதனுடைய, பாதாம்போஜம் திருவடித் தாமரையை - ஸ்ப்ருசதி - தொடுகின்றது, ஜங்காம் கணைக்காலை, பஜதே - அடைகிறது. ஊருத்வந்த்வே - இரண்டு துடைகளிலும், விலகதி - லயிக்கிறது. சநை: மெதுவாக. ஊர்த்வம் - மேலே நாபிம் —தொப்புளை, அப்யேதி அடைகிறது, வக்ஷஸி - திருமார்பில்ஆஸ்தே- அமருகிறது. புஜயோ:- கைகளில், விலகதி சுழலுகிறது. வக்த்ராபிக்யாம்- முககாந்தியை, பிபதி - பருகுகிறது. மௌளிபந்தே கேசபாசத்தில், வாஸநாம் - பரிமளத்தை, வஹதே - சுமக்கிறது.

(பாதாதி கேசாநுபவம்)

10. **கருத்து** :—நம் பெருமாளை ஸேவிப்பவர்கு பெருமாளை ஸேவிப்பதைக் காட்டிலும் வேறொன்றும் வேண்டியதில்லை. திருவடி முதலாக திருமுடியளவாக பெருமாளை ஸேவிக்கின்ற பொழுது அந்த அந்த இடத்திலேயே அப்படியே மனம் நின்று விடுகிறது. இந்தத்யான ஸோபானம் தலைக் கட்டினது மிகவும் ஆச்சரியம். ஒரு பெண் தனது பர்த்தாவினிடம் எவ்வகையில் நடந்துக் கொள்வளோ அவ்விதமே தனது மதியும் ஆயிற்று என்று அநுபவிக்கிறார். தாமரை போன்ற திருவடிகளைத்தொடுகிறது. இது தான் முதல்படி. அந்த பாக்யத்தினாலே மதிமேலும் ஒருபடி ஏறுகிறது, கணைக்காலைக் கெட்டியாக



பிடித்துக்கொள்கிறது அதற்கும் பயனாக மூன்றாவது படியில் மதி செல்கிறது. அந்த இரண்டு துடைகளிலேயே நன்கு ஆழ்ந்து விட்டது. துடையில் சேரும் பொழுது மிகவும் மெதுவாகவே சேருகிறது என்கிறார். அனுபவம் கிடைக்காமல் போகுமோ என்ற எண்ணம் போலும். துடைகளிலிருந்து தப்பிமேலே தொப்புளை அடைந்தது. அதற்கும் மேலே திருமார்பு. அங்கு பாங்காய் அமர்ந்திருக்கிறாள் பிராட்டி. அந்த இடத்தில் சென்றதும் தானும் உட்கார்ந்து விட்டது. இடத்தின் பெருமை போலும். இரண்டு திருக்கரங்களை அடைந்த மதி சுழல ஆரம்பித்தது. ஒருகையை அடைந்தால் முகமண்டல ஸேவை வேறொரு கையை அடைந்தால் திருவடி ரஸாநுபவம்: இப்படி கைகளில் மாறி சுழன்ற வண்ண மிருக்கிறது. மேல்படியில் ஏறினால், திருமுக காந்தியைப் பருகுவதாய் காணப் பெறுகிறது. கிரீடத்தில் ஏறினால் மணம் பெறுகின்றது. இப்படி பகவத நுபவத்தைப் பண்ணினார். இங்குள்ள ரஸங்களைப் பிறகு கூறுவோம்.

காந்தோ தாரைரயமிஹ புஜை: கங்கணஜ்யாகிணாங்கை:
லக்ஷ்மீதாம்ந: ப்ருதுல பரிகைர் லக்ஷிதா பீதிஹேதி:
அக்ரே கிஞ்சித் புஜக சயந: ஸ்வாத்மநைவாத்மநஸ்ஸந்:
மத்யே ரங்கம் மமச ஹ்ருதயே வர்த்ததே ஸாவரோத: [11]

**பதவுரை**:—அயம் - இந்தரங்கநாதன், ஆத்மந:—தனது, புஜகசயனஸ்ய - பாம்பணைக்கு கஞ்சித் - கொஞ்சம், அக்ரே - முன்பாக காந்தோதாரை :— அழகோடுவேண்டியதெல்லாம் தருவனவாயும், கங்கண - வளைகளென்ன, ஜ்யா - நாணென்ன, (இதுகளுடைய) கிண வடுக்களை, அங்கை :— அடையாளமாக வுடையதாயும் லக்ஷ்மீ - லக்ஷ்மியின், தாம்ந : இருப்பிடமான மார்பிற்கு, பருதுல-பெரியதான, பரிகை:- ஆபரணங்களாயு மிருக்கிற புஜை:- திருக்கைகளால், லக்ஷித - காணப்பட்ட, அபீதி அபய முத்திரையென்ன, ஹேதி :—ஆயுதங்களென்ன (இவற்றையுடையராய், ஸாவரோத :- பூதேவிகளோடு கூடியவராய், ஆத்மநைவ - தானாகவே, ஸந் - இருந்துகொண்டு, மத்யே ரங்கம் - ஸ்ரீரங்கத்திலும், மம - எனது, ஹ்ருதயேச - மனதிலும் வர்த்ததே - எழுந்தருளியிருக்கிறான்.

(அர்ச்சாஸாந்நித்யம்)

11. த்யானப்ரகாரத்தை அனுபவித்தவாறே மற்றுமோர் முறை பெருமாளை ஸேவித்துப் போருகிறார். ஆதிசேஷனில்சயனம்தனக்குஎதிரிலேயே தான்நின்றுகொண்டிருக்கிறார். இந்த அழகான உத்ஸவ மூர்த்தியின் திருக்கைகள் தான் எவ்வளவு அழகு! எவ்வளவு நீண்டவை! அழகான வளைகள் வேறு கையிலே. நணேற்றி வந்தபடியால் அடையாளம் உண்டாகியிருக்கின்றது. நாயார் இருக்கும் கோட்டைக்கு ஆயுதங்கள் அமைத்ததுபோல் இருக்கின்றன கைகள். ஒரு கை

யாலே அபயமுத்ரையும், மற்ற கைகளால் திவ்யாயுதங்கள் கையில் ஏந்தப்பட்டு அழகாய் இருக்கின்றன. இவ்வண்ணம் பூதேவிகளுடன் ரங்க மேடையிலும், எனது இதயத்திலும் பாங்காய் எழுந்தருளியிருக்கிறார் ரங்கநாதன்.

ரங்காஸ்த்தாநே ரஸிகமஹிதே ரஞ்ஜிதாசேஷ சித்தே
வித்வத்ஸேவாவிமல மநஸா வேங்கடேசேந க்லுப்தம்;
அக்லேசேந ப்ரணிஹிததியாம் ஆருருக்ஷாரவஸ்த்தாம்
பக்திம் காடாம் திசது பகவத்த்யாந ஸோபாநமேதத் [12]

**பதவுரை:**—ரஸிக = ரஸிகர்களால் மஹிதே-கொண்டாடப்பட்டதும், ரஞ்ஜித- ஸந்தோஷப்படுத்தப் பட்ட அசேஷ, எல்லாருடைய, சித்தே = மனதையுடையதுமான, ரங்காஸ்த்தாநே = ரங்கநாதன் திருவோலக்கத்தில், வித்வத்ஸேவா = வித்வான்களை ஸேவித்ததனால், விமல = பரிசுத்தமான, மநஸா = மனஸையுடைய வேங்கடேசேந = வேங்கடநாதனால், க்லுப்தம் = அமைக்கப்பட்ட ஏதத் = இந்த, பகவத் த்யாந ஸோபாநம் = பகவானை த்யானம் செய்யும்படியானது ப்ரணிஹித = ஸாவதானமுடைய, தியாம் = ஞானத்தையுடைய, அவஸ்தாம் = நிலையை, ஆருருக்ஷா: = த்யானப் பாஸபரனுக்கு, அக்லேசேந ஸுலபமாக, காடம் = ஸ்திரமான பக்திம் = பக்தியை, திசது = கொடுக்கட்டும்.

**பலச்ருதி**

12. **கருத்து** := ரங்கன் ஆஸ்தானத்துக்கு வந்துவிட்டால் ரஸிகர்களுக்கு குறையேது? எப்ராணிகளும் மகிழ்வர். நானும் வித்வத் ஸேவையினால் விமலமான மனதையுடையவன். நான் அமைத்துக் கொடுத்திருக்கும் இந்த பகவத் த்யான ஸோபானம் இடமான பக்தியைத் தந்தருள் புரியட்டும். யோகத்தை அடைய ஆசையிருக்கிறது. அவர்களுக்கு சிரமமில்லாமல் காடமான பக்தியை அருள் புரியட்டும்.

---

58-ம் பக்கத் தொடர்ச்சி

களை ரத்தினைத்த உத்தமர். இந்த ஸ்வாமியின் அருளில்லையேல் ஸம்பிரதாயக்ரந்தங்கள் என்றோ காணாமற் போயிருக்கும். தேசிக பக்தி பரீவாஹமாக தேசிகக்ரந்தங்களை பல்வகையில் ப்ரகாசம் செய்தருளினர். ஸ்வாமியின் சிஷ்யர்கள் அனந்தம் இன்னும ஸ்வாமியின் பிரபந்தங்கள் வேண்டிவேண்டிப் பெறுவதைப் பார்த்து வருகிறோம். தாத்பர்யரத்நாவளி முதலான உயரிய க்ரந்தங்களை அநுவாதமும் செய்திருப்பர்.

இந்த ஸ்வாமி மஹாமஹோபாத்யாய பிருதம் பெற்றும்ஸ்வாமியே பசநத்விஷயமாயும் தேசிகதர்சநாசார்ய ரென்றும அழைக்கப்படுகிறார், ஸ்வாமியனிடம் ஆயிரம் மைல்களுக்கப்பால் வெகுதூரத்திலிருந்து வந்தும் காலக்ஷேபம செய்து வந்தனர், திருப்பதியிலே ஸ்வாமி நித்ய விபூதியில் சேர்ந்து விட்டார் ஸ்வாமியை நினைத்துய்வோம்.

198466



# நினைத்ததுண்டா?

ஸ்ரீ தேசிகன் யார்?

அவர் உலகுக்கு என்ன செய்திருக்கிறார்?

அவராலே என்ன உயர்வு உண்டாயிருக்கிறது?

அவருக்கேன் தனிப்பெருமை?

நமக்கும் அவருக்கும் ஏதாவது தொடர்பு உண்டா!

அவர் கோயில் கொண்டெழுந்தருளுவானேன்!

நம் பாரத தேசத்தில் எத்தனை தேசிகன் ஸந்நிதிகள் இருக்கின்றன?

ஸ்ரீ பாஷ்யகார தர்சனம் தழைக்கச் செய்தது எப்படி?

நம் ஸம்ப்ரதாய வித்வான்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

நம் ஸம்ப்ரதாய லௌகிக பிரமுகர்கள் எத்தனை பேர்?

தேசிகனருளிச் செய்த நூல்கள் எத்தனை?

எல்லாம் கிடைக்கின்றனவா?

ஏன் இவ்வளவு நூல்கள் இயற்றியிருக்கிறார்?

நூல்கள் மாத்திரம்தான் இயற்ற வல்லவரா? வேறு

அதிமானுஷ சரித்திரங்கள் ஏதாவது உண்டா?

ஸ்ரீ தேசிகன் என்ன தான் நம்மை செய்யச் சொல்லுகிறார்?

நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார்?

நம் ஒவ்வொருவருடைய கடமை என்ன?

என்றெல்லாம் கொஞ்ச காலமாவது நினைத்ததுண்டா?

நினைத்து ஆவதென்ன என்பீரேல் "**ஸேவா**"வில் முறையே

**விளக்குவாம்**

SEVA Regd. No. M. 5750

வருநாள் பழுதற்று
வாழும் வகையை
வகுத்தமைத்தளிப்பது

# ஸேவா

ஸ்ரீ தேசிக தர்சன பத்திரிகை

மாத வெளியீடு

| | |
|---|---|
| வருட சந்தா | 3—0—0 |
| தனிப்பிரதி | 0—1—0 |

போன்: 3621 தபால் பெட்டி: 159

**ஸேவா கார்யாலயம்**

105, ஆதியப்ப நாயகன் தெரு,
மதருஸ்-1 (ஜி.டி.)

*Edited & Published by Sri N. Srinivasaraghavan*
*105, Audiappa Naicken Street, Sowcarpet, Madras-1.*
*Printed by Sri M. Rajamanickam, at Arutperunjothi Press,*
*8/99 Ammen Koil St., Madras-1.*